# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள் - 28

சுடர் 31 | கதிர் 357 | வள்ளுவர் ஆண்டு 2047 | கார்த்திகை 02, வியாழக்கிழமை 17.11.2016



NLB
வாசனா சம்பத
தரும் இன்றைய சுப்பர் பரிசு
ரூ. 31,274,228.40
மேலும் 2 சுப்பர் பரிசுகள்


## எலிக்காய்ச்சலால் கிளிநொச்சியில் விவசாயி சாவு

கிளிநொச்சி, நவ. 17
கிளிநொச்சியில் எலிக்காய்ச்சலால் பீடிக்கப்பட்ட விவசாயி சிகிச்சை பயனளிக்காது 3 ஆவது நாள் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.
வயல் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் எலிக்காய்ச்சல் தொடர்பில் மிக அவதானமாக >> 21

## 26 வருடங்களாக இப்படி ஓர் அவல வாழ்க்கையா?

### நலன்புரிநிலைய மக்களிடம் நேற்று தென்பகுதி மக்கள் ஏக்கத்துடன் கேள்வி

யாழ்ப்பாணம், நவ. 17
26 வருடங்களாக இந்த நலன் புரி நிலையங்களிலா வாழ்ந்து வருகின்றீர்கள்? என்று வலி. வடக்கிலிருந்து இடம்பெயர்ந்து முகாம்களில் தங்கியுள்ள மக்களைப் பார்த்து, தென்பகுதி மக்கள் ஏக்கத்துடன் கேள்வி எழுப்பினர். மாத்தறையிலிருந்து நல்லி >> 21

## சி.ஐ.டி. பொறுப்பாளரை கைது செய்யவேண்டும்

### மனித உரிமை அமைப்புக்கள் சுவிஸ் அரசிடம் வலியுறுத்தல்

யாழ்ப்பாணம், நவம்பர் 17
ஐ.நா.வில் இலங்கை சார்பில் பங்கேற்றுள்ள குற்றப் புலனாய்வுப் பிரிவின் (சி.ஐ.டி) பிரதிப் பொலிஸ்மா அதிபர் சிசிர மெண்டிஸைக் கைதுசெய்து விசாரணை நடத்துமாறு, புலம்பெயர் தமிழ் அமைப்புக்களும் மனித உரிமைகள் அமைப்புகளும் கோரியுள்ளன.
அதே நேரம் ஊடகவியலாளர்கள் மீதான அடக்கு முறைகளுக்கு சிசிர காரணமாக இருந்தவர் என்று சுட்டிக்காட்டிய எல்லைகள் அற்ற ஊடகவியலாளர் அமைப்பும், இலங்கையின் ஜனநாயகத்துக்கான ஊடகவியலாளர் அமைப்பும் அவரைக் கைது செய்யவேண்டும் என வலியுறுத்தியுள்ளன.
பிரிட்டன் தமிழர் பேரவையும், அமெரிக்க தமிழ் அரசியல் பேரவையும் இணைந்து கூட்டாக இந்தக் கோரிக்கையை சுவிஸ் அரசிடம் முன்வைத்துள்ளன.
இலங்கை அரசு ஐக்கிய நாடுகள் சபையின் சித்திரவதைக்கு எதிரான குழுவுடன் இணைந்து செயலாற்றுவதற்கு முன்வந்துள்ளமை குறித்து உற்சாகமடைகின்ற அதேவேளை, சிசிர மெண்டிஸ் இலங்கைப் பிரதிநிதிகள் குழுவில் இடம்பெற்றுள்ளமை குறித்து ஏமாற்றமடைந்துள்ளோம் என்று அந்த அமைப்புகள் தெரிவித்தன. >> 21

## தியேட்டரிலிருந்து வெளியேறினார் தவராசா

கொழும்பு, நவ. 16
ஈ.பி.டி.பி கட்சியின் மூத்த உறுப்பினரும் வடக்கு மாகாண சபை எதிர்க்கட்சித் தலைவருமான சி.தவராசா, யாழ்ப்பாணம் சிறீதர் தியேட்டரில் இருந்த >> 21

## வடபகுதி மக்கள் குறித்து தெற்கு இனவாதிகள் புரளி

### நேரில் வந்து பார்வையிட்ட பின் தென்னிலங்கை மக்கள் விசனம்

யாழ்ப்பாணம், நவ. 17
தென்பகுதி இனவாதி அரசியல்வாதிகளே பொய்ப் புரளி பரப்பி, வடக்கு மக்கள் பற்றித் தவறான அபிப்பிராயத்தை எமது மனதில் விதைத்திருந்தனர். நாம் நேரில் வந்து பார்த்தபோதுதான் உண்மை தெரிகின்றது. இவ்வாறு தென்பகுதி மக்கள் தெரிவித்தனர். >> 21



## சூழ்ச்சிகள் குறித்து அரசு மிக அவதானம்

### அமைச்சர் கயந்த கருணாதிலக தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 17
நாட்டில் மீண்டும் குழப்பத்தை விளைவிக்க இனவாத மற்றும் மதவாத சக்திகள் அண்மைக் காலமாக மேற்கொள்ளும் சூழ்ச்சிகள் குறித்து ஜனாதிபதியும், பிரதமரும் >> 21

## கல்லுண்டாயில் வாள்வெட்டு; ஒருவர் படுகாயம் 4 பேர் கைது

யாழ்ப்பாணம், நவ. 17
யாழ்ப்பாணம்-கல்லுண்டாயில் கும்பல் ஒன்றினால் வாளால் வெட்டிச் சரிக்கப்பட்ட நிலையில், மீட்கப்பட்ட ஒருவரை பொலிஸார் வைத்தி >> 06

முச்சந்தி முனி



பித்துப் பிடித்து விட்டதோ இவருக்கு...



## பிக்குவைக் கண்டித்து கறுப்புப் பட்டிப் போர்

### மட்டக்களப்புக் கிராம அலுவலர்கள் முன்னெடுப்பு

மட்டக்களப்பு, நவ.17
மட்டக்களப்பு மங்களராமய விகாராதிபதி அம்பிட்டிய சுமணரத்ன தேரரின் அடாவடித் தனத்தை எதிர்த்து மட்டக்களப்பு மாவட்ட கிராம அலுவலர்கள் நேற்று >> 21

## வடக்கில் மீண்டும் நிகழாது வன்முறை

### நாடாளுமன்றில் அரசு உறுதி

யாழ்ப்பாணம், நவ. 17
கடந்த அரசு செய்த தவறுகளுக்கு நாம் பொறுப்புக் கூறமுடியாது. ஆனால் அவ்வாறான சம்பவங்கள் மீள இடம்பெற இடமளிக்க முடியாது. வடக்கில் மீண்டும் >> 24

## உப பொலிஸ் பரிசோதகர் துப்பாக்கிச் சூட்டில் சாவு

### வாகனக் கடத்தலை முறியடிக்க முயன்றபோது குருநாகலில் சம்பவம்

யாழ்ப்பாணம், நவ. 17
வாகனத்தைக் கடத்தி வந்த இருவரைக் கைதுசெய்ய முயன்றபோது, அவர்கள் பொலிஸார் மீது துப்பாக்கிச் சூடு மேற்கொண்டதில் சப் இன்ஸ்பெக்டர் ஒருவர் உயிரிழந்தார். இருவர் காயமடைந்தனர். >> 24

## ரூ.76 லட்சம் பணமும் கஞ்சாவுடன் சிக்கியது

யாழ்ப்பாணம், நவ. 17
மாதகலில் வீட்டு வளவில் புதைத்து வைக்கப்பட்ட நிலையில் 76 லட்சம் ரூபா ரொக்கப் பணத்தையும் 10 கிலோகிராம் கஞ்சா போதைப் பொருளையும் மீட்டதாக இளவாலைப் பொலிஸார் தெரிவித்தனர். >> 06

## அநாதரவான நிலையில் சிறப்புத் தேவையுடைய புலிகள்

### அமைச்சர் வஜிர வருத்தம்



யாழ்ப்பாணம், நவ. 17
போரினால் சிறப்புத்தேவையுடைய படையினருக்கு வாழ்வதற்கு வழியமைக்கப்பட்டுள்ள போதிலும், போரினால் சிறப்புத் தேவையுடைய தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் இளைஞர்களும், >> 23

பொது பலசேனாவின் எச்சரிக்கையையடுத்து

## முஸ்லிம் அமைப்பின் செயலர் நேற்றுக் கைது

யாழ்ப்பாணம், நவ. 17
இலங்கை தவ்ஹீத் ஜமாத் அமைப்பின் செயலாளரைக் கைதுசெய்ய வேண்டும் அல்லது இரத்த ஆறு ஓடும் என்று பொது பல சேனாவின் பொதுச் >> 23



## சுமணரத்ன தேரரால் மீண்டும் பதற்றநிலை

### அரச மரம் நிற்கும் தனியார் காணிக்குள் நுழைந்து நேற்றும் அவர் அடாவடித்தனம்

செங்கலடி, நவ.17
மட்டக்களப்பு மங்களராமய விகாராதிபதி அம்பிட்டிய சுமணரத்ன தேரரால் நேற்றும் மட்டக்களப்பில் பதற்றம் ஏற்பட்டது. செங்கலடி – பதுளை வீதியில் >> 24



## கைதான 11 பேரின் மறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம், நவ. 17
ஆவா குழுவுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டு மறியலில் வைக்கப்பட்டவர்களுக்கு விளக்கமறி >> 06

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வடக்கு-கிழக்கில் சீனாவின் முதலீடு

## அமைச்சர் ஹிஸ்புல்லா தெரிவிப்பு

கொழும்பு, நவ.17
போரினால் பெரிதும் பாதிக்கப்பட்ட வடக்கு-கிழக்கு மாகாணங்களை அபிவிருத்தி செய்வதற்கும், பொருளாதார ரீதியில் முன்னேற்றுவதற்கும் அந்தப் பகுதிகளில் பெரும் முதலீடுகளை மேற்கொள்ளச் சீன அரச நிறுவனமான சீ.எஸ்.ஆர். இணக்கம் தெரிவித்துள்ளது.

புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சரும், மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழு இணைத் தலைவருமான எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாவுக்கும் சீன நிறுவனத்தின் பிரதித் தலைவர் தலைமையிலான பணிப்பாளர் சபை குழுவுக்கும் இடையில் இது தொடர்பான கலந்துரையாடலொன்று நேற்று அமைச்சின் காரியாலயத்தில் நடைபெற்றது.

இலங்கையின் அபிவிருத்திக்குப் பல்வேறு முதலீடுகளை மேற்கொள்வது தொடர்பாகவும், குறிப்பாக வடக்கு-கிழக்கு மாகாணங்களில் விவசாயம் மற்றும் மின்சாரத் துறைகளை முன்னேற்றுவதற்காக முதலீடுகளை மேற்கொள்வது தொடர்பாகவும் இந்தக் கலந்துரையாடலின்போது கவனம் செலுத்தப்பட்டதாக இராஜாங்க அமைச்சர் ஹிஸ் புல்லா தெரிவித்தார். (த-ய)

# ஆயுதக் களைவு விவகாரம்

# புளொட் மீது கோத்தா குற்றச்சாட்டு மறுதலிக்கிறார் சித்தார்த்தன் எம்.பி.

யாழ்ப்பாணம், நவ. 17
போர் முடிவுற்ற பின்னர் துணை ஆயுதக்குழுக்களின் ஆயுதங்களை களையுமாறு மகிந்த தெரிவித்தார். புளொட் அமைப்பின் தலைவர் சித்தார்த்தன், ஆயுதங்களைக் களைந்தால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேர்தலில் வென்றுவிடும் என அப்போது குறிப்பிட்டார் என்று கோத்தபாய ராஜபக்ச சுமத்தியுள்ள குற்றச்சாட்டை புளொட் அமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான த.சித்தார்த்தன் மறுத்துள்ளார்.

'போர் முடிவடைந்ததும் எமது பாதுகாப்புக்கு வழங்கிய ஆயுதங்களை கையளித்துவிட்டோம்' என்று சித்தார்த்தன் குறிப்பிட்டார்.

'குழப்பநிலை மற்றும் உறுதிநிலை, வட - கிழக்கு இலங்கையில் போருக்குப் பிந்திய அபிவிருத்தியும், நல்லிணக்கமும்' என்ற தலைப்பிலான நூலின் வெளியீட்டு விழா ஹெக்டர் கொப்பேகடுவ ஆராய்ச்சி நிலையத்தில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றது. இந்த நூல் வெளியீட்டு விழாவில் உரையாற்றிய முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச, தமிழீழ விடுதலைப் புலிகளை தோற்கடித்த பின்னர், வடக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்தத் தயாரானபோது, அங்கு தேர்தலை நடத்தினால் அதில் தோல்வியடையலாம் என்று டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார். அந்தத் தேர்தலினால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பலம்பெறும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தன் என்னிடம் கூறினார் - என்றார்.

'2009ஆம் ஆண்டு போர் முடிவுக்கு வந்த பின்னர் அப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச கலந்துரையாடலுக்கு அழைத்திருந்தார். அந்தக் கலந்துரையாடலில் கோத்தபாய ராஜபக்சவும் பங்கெடுத்திருந்தார். மகிந்த ராஜபக்ச 2009 ஆம் ஆண்டே வடக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்த விரும்பினார். இது தொடர்பில் அபிப்பிராயம் கேட்டார். மக்கள் தற்போது நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அவர்களை அவர்களது சொந்த இடங்களில் குடியமர்த்திய பின்னரே தேர்தலை நடத்தவேண்டும் என்று கேட்டுக் கொண்டேன். கிழக்கு மாகாணத்தின் மாகாண சபைத் தேர்தல் (முதலாவது தேர்தல்) நடத்தப்பட்டது போன்று வடக்கு மாகாண சபைத் தேர்தல் நடைபெறக் கூடாது என்று தெரிவித்தேன்.

2002 ஆம் ஆண்டு சமாதான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட காலத்தில் வடக்கு - கிழக்கிலிருந்து நாம் முழுமையாக வெளியேறினோம். ஆயுதங்கள் எல்லாவற்றையும் கையளித்தோம். பின்னர் நாம் மீளவும் வந்தபோது எமது பாதுகாப்புத் தொடர்பில் அரசிடம் கேட்டோம். எங்களின் பாதுகாப்பை எங்களையே பார்த்துக் கொள்ளுமாறு அரசு கூறியது. அரசு ஆயுதம் வழங்கியது. 2009 ஆம் ஆண்டு போர் முடிவுக்கு வந்தபோது நாம் ஆயுதங்களைக் கையளித்தோம். அரசு வழங்கிய ஆயுதங்கள் யாவும் அவர்களிடமே ஒப்படைக்கப்பட்டன - என்றார் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன். (த-5)

# படகுகள் மூலம் வருவோரை திருப்பியனுப்புவது திண்ணம்

## ஆஸ்திரேலியா மீண்டும் அறிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 17
எல்லைப் பகுதியினூடாகப் படகுகள் மூலம் நாட்டுக்குள் பிரவேசிக்க முயற்சிப்போர் வழிமறிக்கப்படுவதுடன் அவ்வாறானோர் திருப்பியனுப்பப்படுவர் என்று ஆஸ்திரேலிய அரசு மீண்டும் அறிவித்தது.

இது தொடர்பில் ஆஸ்திரேலிய அரசு விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது:
நாட்டின் எல்லைப் பாதுகாப்பு நடவடிக்கைப் பிரிவு இதுவரை ஆள் கடத்தல்காரர்களினால் 29 படகுகள் மூலம் வந்த 740 பேர் அவர்களது சொந்த நாட்டுக்குத் திருப்பி அனுப்பப்பட்டனர்.

சட்டவிரோதமாக ஆஸ்திரேலியாவுக்குள் பிரவேசிக்கும் புகலிடக் கோரிக்கையாளர்கள் நவுறு மற்றும் பப்புவா நியூகினியாவில் குடியமர்த்துவது தொடர்பாக ஆஸ்திரேலிய அரசு கவனம் செலுத்தியுள்ளது.

ஐ.நா. சபையின் அகதிகள் தொடர்பான தூதுவரின் அனுமதியுடன் அமெரிக்காவின் அகதிகள் தொடர்பான நிர்வாக வேலைத் திட்டத்தின் கீழ் புகலிடக் கோரிக்கையாளர்கள் குடியமர்த்தப்படவுள்ளனர்.

இதற்கு அமைவாக பெண்கள், சிறுவர்கள் மற்றும் குடும்பங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டு, பாதிக்கப்பட்ட அகதிகளை மீளக்குடியமர்த்துவதில் முக்கியத்துவம் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்த நடவடிக்கை ஏற்கனவே உள்ள நிரந்தர குடியமர்த்தல் பப்புவா நியூகினியா மற்றும் கம்போடியா நடவடிக்கைகளுக்கு மேலதிகமான நடவடிக்கையாகும். ஆஸ்திரேலியாவுக்குச் சட்டவிரோதமாகக் குடியேற முயற்சித்தல் தொடர்பில் இவ்வாறான மீளக் குடியமர்த்தல் நடவடிக்கை இனி ஒருபோதும் இடம் பெறாது என்று வலியுறுத்தப்பட்டது.

ஆஸ்திரேலிய எல்லைப் பாதுகாப்பு தொடர்பான கொள்கையில் மாற்றம் மேற்கொள்ளப்படவில்லை. இதனால் சட்டவிரோதமாக படகுகள் மூலம் நாட்டுக்குள் பிரவேசிக்க முயற்சிப்போர் தொடர்பாக எதிர்வரும் காலத்தில் இவ்வாறான திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படமாட்டாது-என்றுள்ளது. (த-5)



# மாநகரக் கழிவகற்றல் நேற்று வழமைக்கு

யாழ்ப்பாணம்,நவ.17
யாழ். மாநகரப் பகுதியில் தேங்கிக் காணப்பட்ட கழிவுகள் அகற்றும் பணிகள் நேற்று மீளவும் ஆரம்பிக்கப்பட்டன. பகுதி பகுதியாக கழிவுகள் அகற்றப்படுகின்றன.

மாநகர சுகாதாரத் தொழிலாளர்கள் கடந்த ஒரு வார காலத்துக்கும் மேலாக மேற்கொண்டு வந்த பணிப் புறக்கணிப்புப் போராட்டம் நேற்று முன்தினம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது.

இதனை அடுத்துச் சுகாதாரத் தொழிலாளர்கள் நேற்றுக் காலை தொடக்கம் மாநகரப் பகுதியைச் சுத்திகரிக்கும் பணியில் ஈடுபட்டனர்.

பல்வேறு இடங்களிலும் கழிவுகள் தேங்கிக் காணப்பட்டதால் அவற்றை அகற்றுவதிலும் சுகாதாரத் தொழிலாளர்கள் சிரமப்பட்டனர். பெய்த மழையையும் பொருட்படுத்தாது கழிவுகள் அகற்றும் பணிகள் துரிதமாக இடம் பெற்றன.

மாநகரப் பகுதியில் வீதியோரங்கள் மற் றும் பொது இடங்களில் தேங்கிய கழிவு கள் மற்றும் சந்தைகள், உணவகங்கள் போன்றவற்றின் தேங்கிய கழிவுகள் என்பவற்றை அகற்றும் பணிகள் உடனடியாக ஆரம்பிக்கப் பட்டதாக மாநகர கழிவகற்றும் பிரிவினர் தெரிவித்தனர்.

வீதிகள் மற்றும் பொது இடங்களில் தேங்கிய கழிவுகள் அகற்றிய பின்னரே மக்களின் குடிமனை, சுற்றாடல்களில் சேகரித்த கழிவுகள் அகற்றப்படும். இதனால் மக்கள் தத்தம் சுற்றாடல்களில் சேகரித்த கழிவுகளை வழமை போன்று தரம் பிரித்து பொதியாக்கி வைக்குமாறும் கழிவகற்றும் பிரிவு கேட்டுள்ளது. (த-17)

# பிள்ளையானின் மறியல் நீடிப்பு

செங்கலடி, நவ.17
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் படுகொலைச் சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) உட்பட நால்வரையும் எதிர்வரும் 30ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு, மட்டக்களப்பு மாவட்ட நீதிபதி எம்.பி.எம். முஹைதீன் நேற்று உத்தரவிட்டார்.

கிழக்கு மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் முன்னாள் தேசிய அமைப்பாளரும், மாகாண சபை முன்னாள் உறுப்பினருமான பிரதீப் மாஸ்டர் என அழைக்கப்படும் எட்வின் சில்வா கிருஸ்ணானந்தராஜா, கஜன் மாமா எனப்படும் கனகநாயகம் மற்றும் இராணுவப் புலனாய்வு உத்தியோகத்தர் எம். கலீல் ஆகியோருக்கே விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம், கடந்த 2005ஆம் ஆண்டு, மட்டக்களப்பு புனித மரியாள் இணைப் பேராலயத்தில் நடைபெற்ற நத்தார் நள்ளிரவு ஆராதனையில் கலந்து கொண்டிருந்தபோது சுட்டுக் கொல்லப்பட்டிருந்தார்.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பில் கடந்த 11.10.2015 அன்று சந்தேகநபரான சிவநேசதுரை சந்திரகாந்தன் உட்பட 4 பேர் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். (த-ய-46)

# ஜனநாயகத்தை சீரழிப்பது நாட்டின் வளர்ச்சிக்குத் தடை

## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

ஜனநாயகம் மற்றும் சுதந்திரத்தைக் குறுகிய அரசியல் தேவைகளுக்காகவோ இனவாத அல்லது மதவாத அடிப்படையிலோ பயன்படுத்துவது நாட்டின் எதிர்காலப் பயணத்துக்குத் தடையாகும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

கொழும்பு சுகததாஸ உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்ற அரச சேவை ஐக்கிய தாதியர் சங்கத்தின் 47 ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வில் நேற்று உரையாற்றும்போதே மேற் கண்டவாறு தெரிவித்தார். அவர் தெரிவித்ததாவது:
இன்றைய அரசு, அரச கொள்கைகளுக்கு அமையச் சகலதுறைகளிலுமான பொறுப்புக்களையும் கடமைகளையும் நிறைவேற்றி வருகிறது. நல்[illegible] அரசு தொடர்பில் [illegible] மக்கள் கொண்டுள்ள எதிர்பார்ப்புகளை நிறைவேற்றியுள்ள அரசு, படிப்படியாக முன்னோக்கி பயணிக்கின்றது. ஒரு சிலர் எதிர்பார்ப்பது போல் உடனடியாகத் தீர்வு காணமுடியாத போதிலும், முறையான திட்டங்கள் மூலம் நாட்டினதும்- மக்களினதும் எதிர்பார்ப்புக்களைநிறைவேற்றுவதற்கு அரசு பாடுபடுகின்றது.

சுதந்திர சுகாதாரச் சேவையை மேலும் [illegible]வதுடன் அந்தத் துறையிலுள்ள அனைவரினதும் தொழில் சிறப்புரிமைகளை உறுதிப்படுத்துவதற்கு அரசு அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றது - என்றார். (த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மருத்துவ சேவைகளுக்கு ஆள்சேர்ப்பு:

## வடக்கு மாகாண பரீட்சார்த்திகளுக்கு யாழ்ப்பாணத்தில் நேர்முகத்தேர்வு

யாழ்ப்பாணம், நவ. 17

மருத்துவ விடயங்களுக்கான நிறைவு காண் தொழில் வல்லு நர் சேவைகள் மற்றும் துணை மருத்துவ சேவை களின் பயிற்சிக்கான பயிலுநர்கள் ஆள்சேர்ப்புக்கான நேர்முகப் பரீட்சை நாளை மறுதினம் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் சி.திருவாகரன் தெரிவித்ததாவது:

பிற மாவட்டங்களில் தேர்வு கிடைத்தவர்களுக்கும் யாழ்ப்பாணத்திலேயே தோற்ற முடியும் என்றும் அறிவிக்கப்பட்டது.

யாழ்.போதனா வைத்தியசாலை வளாகத்தில் உள்ள தாதியர் கல்லூரியில் இந்த நேர்முகப்பரீட்சை இடம் பெறும். கொழும்பு சுகாதாரம் போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு இதனை நடத்துகிறது.

இந்த நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்களுக்கான கடிதங்கள் கொழும்பு சுகாதார அமைச்சால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. எனினும் சில நேர்முகப் பரீட்சார்த்திகளுக்கான கடிதங்களில் நேர்முகப் பரீட்சை அம்பாந்தோட்டையில் இடம்பெறுமெனக் குறிப்பிடப்பட்டதாக அறியக் கூடியதாகவுள்ளது.

எனவே வேறு மாவட்டத்துக்கு நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்ட வடக்கு மாகாண நேர்முகப் பரீட்சார்த்திகள் யாழ்ப்பாணம் தாதியர் பயிற்சி கல்லூரியில் குறித்த திகதிகளில் நடைபெறும் நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்க முடியும் -என்றார். (வ-4)

## கேந்திர முக்கியத்துவம் வாய்ந்தது இலங்கை என தொடர்ந்து சொல்லாதீர்

### அது வளர்ச்சியைப் பாதிக்கும் என ரணிலுக்கு எடுத்துச் சொன்னார் சீனத் தூதுவர்

இலங்கை கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் இருக்கின்றது என்பதைத் திரும்பத் திரும்ப சொல்லிக் கொண்டிருக்க வேண்டியதில்லை. அது நாட்டின் வளர்ச்சியைப் பாதிக்கும். இந்த விடயத்தை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்குச் சுட்டிக்காட்டினேன்.

இவ்வாறு இலங்கைக்கான சீனத் தூதுவர் வை. சியாங்லிங் நேற்றுத் தெரிவித்தார்.

இலங்கை - சீன வர்த்தக கலந்துரையாடல் கிங்ஸ்பெரி ஹோட்டலில் நேற்று நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ஜனாதிபதி மைத்திரிபால மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருடன் கலந்துரையாடல் நடத்தியிருந்தேன். கொழும்பு துறைமுக நகரத் திட்டம் இடைநிறுத்தப்பட்டதைப் போன்று எதிர்காலத்தில் நடைபெறக் கூடாது என்று கேட்டுக்கொண்டேன். அம்பாந்தோட்டைக்கு 5 நாள் பயணம் மேற்கொண்டிருந்தேன். இதன் போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்தேன். இலங்கை கேந்திர முக்கியத்துவமான இடத்தில் இருக்கின்றது என்று நீங்கள் அடிக்கடி கூறக் கேட்டிருக்கின்றேன். அதனை திரும்பத் திரும்ப அழுத்திச் சொல்ல வேண்டியதில்லை.

இலங்கை அரச அதிகாரிகள், இலங்கை கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் இருக்கின்றது என்பதற்காக வேலை செய்யாமல் இருந்தால், இலங்கை முன்னேறாது. நான் பல அரச திணைக்களங்களுக்குச் சென்றிருக்கின்றேன். அங்கு அரச அதிகாரிகள் வேலை செய்யாமல் இருப்பதைக் கண்டிருக்கின்றேன் என்று இலங்கைக்கான சீனத்தூதுவர் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் சீனாவின் முன்னாள் உதவி அயலுறவுத்துறைச் செயலரும் கலந்து கொண்டிருந்தார். அவரிடம் இலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்படுத்த சீனா முனைகின்றதாகச் சொல்லப்படுவது தொடர்பில் கேள்வி எழுப்பப்பட்டது. அதற்குப் பதிலளித்த செயலர், சீனா இன்னொரு நாட்டின் உள்விவகாரங்களில் தலையிடாது. இப்படியான கதைகள் அர்த்தமற்றது என்றார். (வ-5)

## நீரிழிவு விழிப்புணர்வு நடைபவனி நாளை

பன்னாட்டு லயன்ஸ் கழக 306 பி1 மாவட்டத்தின் ஏற்பாட்டில் வடமராட்சி லயன்ஸ் கழகம் நெல்லியடி வட்ட லயன்ஸ் கழகம் ஆகியவை இணைந்து வடக்கு மாகாண லயன்ஸ் கழகங்களின் ஆதரவுடன் நடத்தும் நீரிழிவு எதிர்ப்பு நடைபவனியும் விழிப்புணர்வுக் கருத்தரங்கும் நாளை காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டது.

"காலை 8.30 மணிக்கு மந்திகை ஆதார வைத்தியசாலை முன்றிலிலிருந்து நீரிழிவு எதிர்ப்பு நடைபவனி ஆரம்பமாகி நெல்லியடி முருகமூர்த்தி ஆலயம் வரை இடம்பெறும். ஆலய திருமண மண்டபத்தில் இடம்பெறும் நீரிழிவு விழிப்புணர்வுக் கருத்தரங்கில் மருத்துவ அதிகாரிகளால் கருத்துரைகள் வழங்கப்படும்.

அத்தடன் கருத்தரங்கில் கலந்து கொள்ளும் அனைவருக்கும் இலவச நீரிழிவு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு நீரிழிவு தொடர்பான உணவு வகைகள் பற்றிய விழிப்பூட்டலும் அவற்றின் பயன்பாடு தொடர்பான செயன்முறை விளக்கமும் வழங்கப்படும்" என்று தெரிவிக்கப்பட்டது. (வ- 9)

## கல்வியியல் கல்லூரிகளுக்கு அனுமதி நேர்முகப்பரீட்சை இம்மாத இறுதியில்

யாழ்ப்பாணம், நவ.17

கல்வியியல் கல்லூரிகளுக்கு புதிய மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கான நேர்முகப் பரீட்சை இந்த மாத இறுதியில் நடைபெறும் என்று கல்வி அமைச்சின், ஆசிரியர் கல்விக்குப் பொறுப்பான ஆணையாளர் கே.எம். எச். பண்டார தெரிவித்தார்.

30 ஆயிரம் பேர் விண்ணப்பித்துள்ளனர். இவர்களிருந்து நான்காயிரத்து 65 பேர் கல்வியியல் கல்லூரிகளுக்கு இணைத்துக்கொள்ளப்படுவர். 50 சதவீதமான மாணவர்கள் திறமை அடிப்படையிலும், ஏனைய 50 சதவீதமானோர் பிரதேச செயலாளர் மட்டத்திலும் தெரிவு செய்யப்படுவர். மாணவர்கள் ஜனவரி மாதம் கல்லூரிகளில் இணைத் துக்கொள்ளப்படுவர்.

கூடுதலானோர் ஆரம்பக் கல்விப் பயிற்சிக்காக சேர்த்துக் கொள்ளப் படுவார்கள் என்று ஆணையாளர் தெரிவித்தார். (வ)

# பௌத்தத்துக்கு முன்னுரிமை நாட்டுக்கே மீண்டும் ஆபத்து

## சிறிதரன் எம்.பி.எச்சரிக்கை

யாழ்ப்பாணம், நவ. 17

பௌத்த மதத்துக்கு முன்னுரிமை வழங்கப்படவேண்டும் என்று தற்போதைய அரசமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விடயம் புதிய அரசமைப்பிலும் அவ்வாறே பின்பற்றப்படுமானால், நாடு ஆபத்தை எதிர்கொள்ளும்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் நேற்றுச் சபையில் எச்சரிக்கை விடுத்தார்.

இந்த நிலைமையை மாற்றியமைக்கும் துணிச்சல் அரசுக்கு வராவிட்டால் தமிழர் பகுதிகளில் புத்தர் சிலை வைக்கப்படுவதையும், தமிழர்கள் அச்சத்துடன் வாழ்வதை யும் தடுக்க முடியாது என்றும் குறிப்பிட்டார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுப் புதன்கிழமை, 2017ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான நான்காம் நாள் விவாதத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றியபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை அரசமைப்பின் 9 ஆம் பிரிவில் இலங்கைக் குடியரசில் பௌத்த மதத்துக்கு முன்னுரிமை வழங்கவேண்டும். பௌத்த சாசனத்தைப் பேணிப் பாதுகாத்தலும் அரசின் கடமையாக இருத்தல் வேண்டும் எனக் கூறப்பட்டிருக்கிறது. புதிய அரசமைப் பிலும் இது பின்பற்றப்பட்டால் இன்னும் ஆபத்தை இந்த நாடு சந்திக்கும். நாம் புத்தர் சிலைகள் அமைக்கவேண்டாம் எனக் கூறவில்லை. நாம் புத்தபிரானை எதிர்ப்பவர்களும் அல்லர். ஏனெனில், புத்தர் யாழ்ப்பாணத்திற்தான் வந்து இறங்கியதாகக் கூறப்படுகின்றது.

தமிழர் பகுதிகளில் புத்தர் சிலைகளை அமைப்பது அவர்களின் இதயத்தைக் கீறிப் பார்க்கும் செயலாக அமையும். வடக்கு- கிழக்கில் புதிதாக இந்து ஆலயங்களை அமைப்பதையே நாம் தவிர்த்து வருகின்றோம்.

இன்று தமிழர்கள் மீது நேரடியாக போர் நடத்தப்படாமல் இராணுவத்தின் ஒரு பகுதியினராலும், மகா சங்கத்தினராலும் புத்தர் சிலைகள் நிறுவப்படுகின்றன. புத்தர் சிலைகளை நிறுவுவதுகூட ஒரு தேசிய இனத்தின் மூலாதாரமான சமய கலாசாரத்தை அழிக்கின்ற கட்டமைக்கப்பட்ட இன அழிப்பின் வடிவமான ஒரு போர்தான். எனவே, புதிய அரசமைப்பில் இந்த நிலை மாற்றப்படா விட்டால் நாடு ஆபத்தை எதிர்கொள்ளும் என்றார். (த-5)

## ஆசிரியரின் வீட்டில் நகை திருட்டு

யாழ்ப்பாணம், நவ. 17

அச்சுவேலியில் ஆசிரியர் ஒருவரின் வீடு புகுந்த திருடர் சுமார் 14 லட்சம் ரூபா பெறுமதியான நகைகளைத் திருடிச் சென்றுள்ளதாகப் பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டது.

இந்தத் திருட்டு அச்சுவேலி மேற்கில் நேற்றுப் பகல் இடம்பெற்றது.

வீட்டில் ஆள்கள் இல்லாதநேரம் திருட்டு இடம்பெற்றது. வீட்டுக்கார் வீடு திரும்பிய போதே சம்பவம் தெரியவந்தது. அது தொடர்பில் பொலிஸில் முறையிடப்பட்டது. எவரும் கைது செய்யப்படவில்லை. எனினும் விசாரணை மேற்கொள்ளப்படுகிறது என்று பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டது. (வ-4)

## முழங்காவிலில் இருவருக்கு வாள்வெட்டு

யாழ்ப்பாணம், நவ. 17

கிளிநொச்சி, முழங்காவில்-நாச்சிக்குடாவில் இரண்டு குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட முரண்பாடு மோதலாகியதில் 2 பேர் வெட்டுக் காயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

"வாள்வெட்டுக்கு இலக்காகிய இளைஞர்கள் இருவரும் முழங்காவில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்தச் சம்பவத்தால் அந்தப் பகுதியில் குழப்பம் ஏற்படாதிருக்க பொலிஸ் பாதுகாப்புப் போடப்பட்டுள்ளது. விசாரணை மேற்கொள்ளப்படுகிறது" என்று முழங்காவில் பொலிஸார் தெரிவித்தனர். (வ-4,35)

## ஏ.ரி.எம். புதிய வரி அறவீடு இல்லை

ஏ.ரி.எம். இயந்திரங்கள் ஊடாகப் பணம் எடுக்கும் போது வாடிக்கையாளர்களிமிருந்து 5 ரூபா புதிய வரி அறவீடு செய்யப்படமாட்டாது என நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

நிதி கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பிலான வரி வங்கி வாடிக்கையாளர்களிடமிருந்து அறவீடு செய்யப்படாது.

நிதி நிறுவனங்கள் மற்றும் வங்கிகளினால் மேற்கொள்ளப்படும் கொடுக்கல் வாங்கல்களின்போது 5 ரூபா வரி அறவீடு செய்யப்பட உள்ளது. இதன்படி, வங்கியின் வாடிக்கையாளர்கள் ஏ.ரி.எம். இயந்திரங்கள் ஊடாக பணம் எடுக்கும்போது புதிதாக 5 ரூபா வரி அறவீடு செய்யப்பட மாட்டாது-என்றார். (த)







## அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் கோயில் உபயகாரர் பொதுக்கூட்டம்

மேற்படி கூட்டம் 20.11.2016 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு ஆலய மண்டபத்தில் ஆரம்பமாகி நடைபெறும். அக்கூட்டத்தில் உபயகாரர்கள்/ பதிவுபெற்ற அங்கத்தவர்களை தவறாது பங்குபற்றுமாறு தயவுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

ம.பத்மநாதன் (தலைவர்),
தர்மகர்த்தாக்கள் சபை,
கும்பழாவளை பிள்ளையார் கோயில்
அளவெட்டி.

(J/6164) (10.17.19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பீரிஸின் கட்சியுடன் சேரும் இடதுசாரிகள்

கொழும்பு, நவ 17
முன்னாள் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸின் தலைமையில் உருவாக்கப்பட்டுள்ள சிறிலங்கா பொதுஜன முன்னணியுடன் கூட்டுச் சேர்வதற்கு இடதுசாரிக் கட்சிகள் தீர்மானித்துள்ளதாகச் சோசலிச மக்கள் முன்னணியின் ஏற்பாட்டாளர் முன்னாள் அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

நேற்று முன் தினம் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியில் இடைவழித் தஞ்சத்தில் காணப்படும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குச் சரியான பண்டாரநாயக்க கொள்கையை மீண்டும் நடைமுறைப்படுத்த இந்தக் கட்சி ஒரு சந்தர்ப்பம் எனவும், இந்தக் கட்சியில் இணைந்து மகிந்த ராஜபக்சவின் தலைமையில் பயணிப்போம் எனவும் அவர் கூறினார். (த)


## வீடு வாடகைக்குத் தேவை

யாழ் நகர எல்லைக்குள் (5 - 6 Km உள்)
மூன்று பேர் கொண்ட சிறிய குடும்பத்துக்கு
சிறிய வாகனம் நிறுத்தக் கூடிய வசதியுடன்

076 312 8411

## வேலைவாய்ப்பு

- கல்வியங்காட்டில் இயங்கும் எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு எரிபொருள் நிரப்புநர் தேவை. EPF, ETF வழங்கப்படும்.
- கம்பனி ஒன்றிற்கு விற்பனைப் பிரதிநிதிகள் தேவை. சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு - 076 654 7036


# குறைகேள் நிலையத்தின் மூலம் ஓய்வூதியர் பிரச்சினைக்கு தீர்வு

சாவகச்சேரி, நவ.17
தென்மராட்சி பிரதேச செயலகத்தில் மாதத்தில் இரு தினங்கள் நடைபெறும் சங்கப் பிரதிநிதிகளுக்கான குறைகேள் நிலையத்தில் பல்வேறு பிரச்சனைகளுக்கு தீர்வுகள் வழங்கப்படுகின்றன.

ஓய்வூதியர்களுக்கு கிடைக்க வேண்டிய கொடுப்பனவுகள் பெற்றுக் கொடுக்கப்படுகிறன. இவ்வாறு தென்மராட்சி பிரதேச பகிரங்க ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் தலைவர் செ.சுப்பிரமணியம் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது-

பிரதி மாதத்தின் முதலாவது மற்றும் மூன்றாவது திங்கட்கிழமைகளில் சங்க அங்கத்தவர்களுக்கான குறைகேள் பிரிவு பிரதேச செயலகத்தில் நடை பெறுகின்றது. அதில் ஓய்வூதியர்கள் தமது தேவைகள் தொடர்பாக முறைப்பாடுகளைச் செய்கின்றனர். அவை உடனுக்குடன் தலைமை அலுவலகத்தின் மூலம் தீர்வு காணப்படுகிறது.

கண் சத்திரசிகிச்சை மேற்கொண்டோர், நோய் காரணமாக விடுதிகளில் தங்கியிருந்து சிகிச்சை பெறுவோர் அதற்கான ஆவணங்களைச் சமர்ப்பித்து கண் சத்திரசிகிச்சைக்கு 5 ஆயிரம் ரூபா வீதமும் விடுதியில் தங்கி சிகிச்சை பெறுவோர் சிகிச்சை பெறும் 3 நாள்களுக்குரிய கொடுப்பனவும் பெற்று வருகின்றனர்.

ஓய்வூதியர்களின் ஐந் தாம் தரப் புலமைப் பரிசில் சித்தி பெற்ற மாண வர்கள் (ஓய்வூதியரின் இரு பிள்ளைகளுக்கு) மற்றும் பல்கலைக் கழகத்தில் முதலாம் இரண்டாம் வரு டம் கற்கும் மாணவர்களுக்கும் கொடுப்பனவு வழங்கப்பட்டு வருகின்றன. - என்றார். (ற-9)


## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம் 1986 இல் பிறந்த கார்த்திகை நட்சத்திரம் பாதம் 2 செவ்வாய் தோஷ மற்ற மொத்த கிரக பாவம் 36 உள்ள அரச ஆங்கில ஆசிரியையாக வேலை பார்க்கும் மணமகளுக்கு அரச உத்தியோகத்திலுள்ள மணமகன் தேவை.

077 433 7559


## சாவகச்சேரி பிரதேசசபை

01.01.2017முதல் 31.12.2017வரை மரக்கறிச் சந்தைகள், மீன்சந்தை, இறைச்சிக்கடைகள், கருவாட்டுக்கடை, களஞ்சிய அறை,பொது மலசலகூடம் என்பவற்றை குத்தகைக்கு விடுவதற்கான மீள் கேள்வி அறிவித்தல் - 2017

கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி :-17.11.2016 – 30.11.2016வரை
கேள்விப் பத்திரம் ஏற்கும் கடைசித் திகதி :-01.12.2016 மு.ப 10.00மணிவரை
கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி :-01.12.2016 மு.ப 10.30மணி

**கேள்விஅறிவித்தல் அட்டவணை**

| இல | குத்தகை விவரம் | ஆகக் குறைந்த கேள்வித் தொகை (VAT,NBT தவிர) | கேள்விப் வைப்புப் பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப் படிவக் கட்டணம் (VAT,NBT தவிர) |
|---|---|---|---|---|
| | **கச்சாய் உப அலுவலகம்** | | | |
| 01 | கொடிகாமம் சந்தை மாட்டிறைச்சிக் கடை | 1103700.00 | 11000.00 | 750.00 |
| 02 | கொடிகாமம் சந்தை கோழி இறைச்சிக்கடை | 1404500.00 | 14000.00 | 750.00 |
| 03 | கொடிகாமம் கருவாட்டுக் கடை இல - 02 | 17600.00 | 500.00 | 750.00 |
| 04 | களஞ்சியஅறை இல - 01 | 34800.00 | 500.00 | 750.00 |
| 05 | களஞ்சியஅறை இல - 02 | 33100.00 | 500.00 | 750.00 |
| 06 | கொடிகாமம் மத்திய பஸ்தரிப்பு நிலையத்துக்கு அருகாமையிலுள்ள மலசலகூடம் | 9500.00 | 500.00 | 750.00 |
| | **வரணி உப அலுவலகம்** | | | |
| 07 | வரணிபொதுச்சந்தை | 106200.00 | 1100.00 | 750.00 |
| 08 | வரணி இயற்றாலை பொதுச்சந்தை | 3500.00 | 500.00 | 750.00 |
| | **கைதடி உப அலுவலகம்** | | | |
| 09 | கைதடிமாட்டிறைச்சிக்கடை | 210100.00 | 2100.00 | 750.00 |
| 10 | கைதடிப் பொதுச்சந்தை | 13400.00 | 500.00 | 750.00 |
| | **மிருசுவில் உப அலுவலகம்** | | | |
| 11 | மிருசுவில் மாட்டிறைச்சிக் கடை | 385400.00 | 3900.00 | 750.00 |
| 12 | மிருசுவில் கோழி இறைச்சிக் கடை | 68300.00 | 700.00 | 750.00 |
| 13 | எழுதுமட்டுவாழ் கோழி இறைச்சிக் கடை | 52600.00 | 500.00 | 750.00 |
| 14 | மிருசுவில் பொதுச்சந்தை | 3400.00 | 500.00 | 750.00 |
| 15 | மிருசுவில் வடக்கு பொதுச் சந்தை | 2900.00 | 500.00 | 750.00 |
| 16 | எழுதுமட்டுவாழ் பொதுச் சந்தை | 3700.00 | 500.00 | 750.00 |
| | **நாவற்குழி உப அலுவலகம்** | | | |
| 17 | நாவற்குழி பொதுச்சந்தை | 2900.00 | 500.00 | 750.00 |
| 18 | நாவற்குழி மீன்சந்தை | 1900.00 | 500.00 | 750.00 |

**நிபந்தனைகள்:**

1. கேள்விப்பத்திரம் பெறவிரும்புவோர் குறித்த17.11.2016 தொடக்கம் 30.11.2016 வரையான காலப் பகுதிக்குள் கேள்விப் படிவத்தினை சாவகச்சேரி பிரதேசசபை தலைமைப் பணிமனையில் பெற்றுக் கொண்டு குறித்தொதுக்கப்பட்ட திகதிக்குள் மீள ஒப்படைக்க வேண்டும்.
2. கேள்விப்பத்திரம் பெறவிரும்புவோர் கோரிக்கைக் கடிதத்துடன் ஆள் அடையாளத்தினை உறுதிப்படுத்தும் ஆவணம், அதன் நிழற்படப் பிரதியினையும் கொண்டுவருதல் வேண்டும்.
3. கேள்வித் தொகை, படிவக் கட்டணம், என்பவற்றுடன் Vat 15%, NBT 2% சேர்த்து செலுத்துதல் வேண்டும்.
4. 01.12.2016 ஆம் திகதியன்று மு.ப 10.30 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வி சமர்ப்பித்தவர்கள் அல்லது அவர்களின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமூகமளிக்கலாம்.
5. இறைச்சிக்கடைகளிற்கு சபையினால் விதிக்கப்படும் மாதவாடகை கேள்வித் தொகையுடன் செலுத்தப்பட வேண்டும்.
6. கால்நடைகள் சுகாதார பரிசோதகரின் அனுமதியுடன் கோயிலாமனை கொல்களத்தில் வெட்டப்பட்டு இறைச்சி கொண்டுவரப்படல் வேண்டும். அத்துடன் சபையினால் விதிக்கப்படும் மேலதிக நிபந்தனைகளிற்கு கட்டுப்படுதல் வேண்டும்.
7. குத்தகைதாரரினால் குத்தகைக்கு எடுத்து நடத்தும் சந்தைக்கான அறவீடுகளிற்கு பற்றுச் சீட்டுக்கள் வழங்கப்படல் வேண்டும்.
8. தெரிவு செய்யப்படும் கேள்விகாரர் ஒருவார காலத்துள் 1/3 பகுதியை முற்பணமாக செலுத்த வேண்டும். மிகுதித் தொகையினை 1/6 பகுதிகளாக பிரித்து ஒவ்வொருமாதக் கட்டணமாக அடுத்த மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தல் வேண்டும். தவறின் 10% தண்டப் பணமாக அறவிடப்படும்.
9. கேள்விப் படிவத்தின் தபாலுறையின் இடதுபக்கமேல் மூலையில் குத்தகை விவரத்தினை குறிப்பிட்டு ஒருபிரதியினை **"செயலாளர் சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம்"** என்ற விலாசத்துக்கும் மறுபிரதியை **"பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்"** என்ற விலாசத்திற்கும் நேரடியாகவோ பதிவுத் தபால் மூலமாகவோ அனுப்பிவைத்தல் வேண்டும்.
10. உள்ளூராட்சி மன்றங்களில் தவறுநராக கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரம் வழங்கப்பட மாட்டாது. படிவம் வழங்கப்பட்டபின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் அவரின் கேள்விப் பத்திரம் நிராகரிக்கப்படும்.
11. கேள்விகளை தகுந்த காரணங்களால் ஏற்கவும் நிராகரிக்கவும் பூரண அதிகாரம் கேள்விச் சபைக்கு உண்டு.
12. மேலதிக விவரங்களை பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

**செயலாளர்,**
**சாவகச்சேரிபிரதேசசபை,**
**கொடிகாமம்.**

17.11.2016.


## அறிவித்தல்



சமய அந்தியேட்டிக் கிரியைகள் மற்றும் வீட்டுக் கிரியைகள் சிறப்பாகச் செய்து கொடுக்கப்படும்.
பொருத்தமாகவும் செய்து கொடுக்கப்படும்.

**சிவஸ்ரீ சி.சபாரத்தினதேசிகர்**

(பிரதம குருவும், ஆதீனகர்த்தாவும் பண்டாரி அம்மன் கோயில், தம்பசிட்டி, பருத்தித்துறை)

தொடர்பு: 077 670 1678,
021 226 3944


## கேள்வி அறிவித்தல்

**250-8542 இலக்க மோட்டார் வான் வாகனத்துக்கு ( Hires Van) திருத்த வேலைகளுக்கான கூறுவிலை கோரல்**

மேற்படி எமது நிறுவனத்துக்குச் சொந்தமான வான் (hires) வாகனத்துக்கு முழுமையான ரிங்கறிங் மற்றும் வர்ணம் தீட்டுதல் வேலைகளுக்கான கூறுவிலை (கேள்வி) சாந்திக நிறுவனத்தால் கோரப்படுகின்றன.

விண்ணப்பப்பத்திரத்தினை அலுவலகத்தில் நிதிக்கிளையில் மீளளிக்கப்படாத வைப்பாக ரூபா1000/= ஐ செலுத்தி 02-12-2016 ஆம் திகதி மு.ப 10.00 மணிவரை பெற்றுக் கொள்ளலாம். கேள்வி விண்ணப்பங்கள் 02-12-2016 ஆம் திகதி முற்பகல் 10.30 மணிவரை ஏற்றுக் கொள்ளப்பட்டு, உடனடியாக விண்ணப்பங்கள் நிர்வாகக் குழு அறை (Board Room ) இல் திறக்கப்படும். விண்ணப்பங்கள் யாவும் பணிப்பாளர் கேள்விச்சபைத் தலைவர் 8,8/1, கற்பகவிநாயகர் ஒழுங்கை கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியிட்டுத் தபால் உறையின் இடதுபக்கமேல் மூலையில் "வான் (Hires) வாகனத்துக்கான திருத்த வேலைகள் கூறுவிலை" என குறித்து பதிவுத் தபாலில் 02.12.2016 ஆம் திகதி மு.ப 10.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

**வ.முருகதாஸ்,**
**கேள்வி சபைத் தலைவர்,**
**பணிப்பாளர், சாந்திகம்**

**8,8/1, கற்பக விநாயகர் ஒழுங்கை,**
**கச்சேரி நல்லூர் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரவு – செலவுத் திட்டத்தில் பயனுள்ள எதுவும் இல்லை

## புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி தெரிவிப்பு

முன்மொழியப்பட்ட வரவு செலவுத் திட்டத்தை உழைக்கும் மக்களையும் கீழ், நடுத்தர வர்க்க மக்களையும் கருவறுக்கும் ஒரு வரவு செலவுத் திட்டமாகவே காணமுடிகிறது. இதில் எவ்வித முன்னேற்றகரமான விடயங்களும் இல்லை. இவ்வாறு புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி தெரிவித்துள்ளது.

அந்த கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேல் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறுதெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் உள்ளதாவது–

அரசு முன்வைத்துள்ள 2017 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் தவறான திசைமார்க்கத்தை வெளிப்படுத்துகின்றது. விவசாயம், சிறுகைத் தொழில், மீன்பிடி, மற்றும் உள்நாட்டு உற்பத்திப் பொருளாதாரம் நிராகரிக்கப்பட்டு அந்நிய இறக்குமதிப் பொருளாதாரத்துக்கான வழிவகைகள் விரிவுபடுத்தப்பட்டுள்ளன. இது முழு நாட்டையும், அதன் பொருளாதாரத்தையும் நவகொலனிய, நவதாராள உலகமயமாதலுடன் இறுகப் பிணைத்துக் கொள்ள வழிகாட்டுகிறது.

விவசாயம், சிறு கைத்தொழில்கள், மீன்பிடி போன்றவற்றிற்கு அற்ப நிதி ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டுள்ள அதேவேளை கல்வி, சுகாதாரத் துறைகளுக்கான நிதி ஒதுக்கீடுகள் வெட்டிக்குறைக்கப்பட்டுள்ளன. இந்த துறைகளில் தனியார் மயத்துக்கு ஊக்குவிப்புகள் வழங்கப்பட்டுள்ளன. கைத்தொலைபேசிகளுக்கான வரிகள், நீர்க்கட்டண உயர்வு, போக்குவரத்துக்கான தண்டப்பணம் போன்றவற்றில் கொள்ளை இலாப அறவீடுகளை நிதியமைச்சர் முன்மொழிந்தார்.

இது நல்லாட்சி அரசு அல்ல. மக்கள் விரோத அரசுதான் என்பதை வெளிப்படுத்தி நிற்கின்றது. அதை மக்கள் கண்டித்து எதிர்க்க வேண்டும் என்ற வேண்டுகோளை எமது கட்சி விடுக்கின்றது.– என்றுள்ளது. (ற-8)

# சாதனையாளர் கௌரவிப்பு சனிக்கிழமை

யாழ்ப்பாணம், நவ.17

வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் வடக்கு மாகாண சாதனையாளர் கௌரவிப்பு நிகழ்வு எதிர்வரும் சனிக்கிழமை, ஞாயிற்றுக் கிழமைகளில் மூன்று அமர்வுகளாக நடைபெறவுள்ளது.

சனிக்கிழமை காலை 9 மணிக்கு மாகாணக் கல்வி பணிப்பாளர் செ.உதயகுமார் தலைமையில் ஆரம்பமாகும் முதலாம் அமர்வுக்கு முதன்மை விருந்தினராக முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனும் சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த. குருகுலராஜாவும் கலந்து கொள்வர்.

பி.ப. 1:30 மணிக்கு மாகாணக்கல்வி பணிப்பாளர் செ.உதயகுமார் தலைமையில் நடைபெறவுள்ள இரண்டாம் அமர்வுக்கு முதன்மை விருந்தினராக மாகாண கல்வி அமைச் சின் செயலாளர் ஆர்.இரவீந்திரனும் கௌரவ விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக மொழித்துறைத் தலைவர் எஸ். றமேஸும் கலந்து கொள்வர்.

ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9.30 மணிக்கு மாகாணக்கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் தலைமையில் ஆரம்பமாகும் 3ஆம் அமர்வுக்கு முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் கந்தையா சிவஞானமும், கௌரவ விருந்தினராக எஸ்.யு.சந்திரகுமாரும் கலந்து கொள்வர்.

இரு தினங்கள் நடைபெறவுள்ள நிகழ்வில் வடமாகாணத்தில் சாதனை புரிந்த மாணவர்களும், பாடசாலைகளும், அவற்றுக்குரிய ஆசிரியர்களும் கௌரவிக்கப்படுவர். (ற-ஏ)

# போக்கறுப்பில் 400 ஏக்கரில் பெரும்போகம்

யாழ்ப்பாணம், நவ.17

வடமராட்சி கிழக்கு போக்கறுப்புப் பகுதியில் விடுவிக்கப்பட்ட நானூறு ஏக்கர் நிலப்பரப்பில் இந்த முறை விவசாயிகள் பெரும்போக நெற்செய்கையில் ஈடுபட்டுள்ளனர் என்று வடமராட்சி கிழக்குப் பிரதேச செயலாளர் கே.கனகேஸ்வரன் தெரிவித்தார்.

விடுவிக்கப்பட்ட இந்த வயல் நிலங்கள் புனர்வாழ்வு மீள்குடியேற்ற அமைச்சின் உதவியுடன் துப்புரவு செய்யப்பட்டு உரியவர்களிடம் வழங்கப்பட்டது.

கடந்தபலவருடங்களாகசெய்கைஇன்றி தரிசு நிலங்களாகக் காணப்பட்ட இந்த வயல் நிலங்களுக்கு நெற் செய்கைக்காக விவசாயிகள் அதிகமான சேதனப் பசளைகளையிட்டு சீர்செய்தும் உள்ளனர். மழை பெய்ததை அடுத்து கூடுதலான விவசாயிகள் கால போக நெற்செய்கையில் ஈடுபட்டு உள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-17)

# தண்டப்பணம் குறைக்கப்படலாமாம்

யாழ்ப்பாணம், நவ. 17

வீதிப் போக்குவரத்து விதி மீறலுக்கு ஆகக் குறைந்த தண்டப் பணமாக விதிக்கப்பட்டுள்ள 2 ஆயிரத்து 500 என்ற தொகையில் மாற்றங்கள் மேற்கொள் ளப்படலாம் என்று அரசு சூசகமாக அறிவித்தது. அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பு நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்று நடைபெற்றது.

இதன்போது செய்தியாளர்களினால், வரவு – செலவுத் திட்டத்தில் போக்குவரத்து விதி மீறலுக்கான ஆகக்குறைந்த தண்டப் பணமாக 2 ஆயிரத்து 500 ரூபா அறிவிக்கப்பட்டது. குறைந்தபட்ச தண்டப் பணமாகவா அந்தத் தொகை அறவிடப்படவுள்ளது? எந்தெந்தக் குற்றங்களுக்காக அந்த தொகைத் தண்டப் பணம் அறவிடப்படவுள்ளது? என்ற கேள்விகள் இதன்போது எழுப்பப்பட்டன. தண்டப் பணத்துக்கான ஒழுங்கு விதி மீறல்கள் பற்றிய விவரங்கள் எதையும் இதன்போது விளக்கமாக வழங்காத அமைச் சரவை இணைப் பேச்சாளர் கயந்த கருணாதிலக, போக்குவரத்துச் சட்டத்தை மீறுவோருக்கு எதிராகவே இந்தத் தண்டப்பணம் விதிக்கப்படவுள்ளதாகத் தெரிவித்தார்.

வாகனப் போக்குவரத்தின் போது வீதியின் நடுவில் இருக்கும் கோட்டின் குறுக்கே செல்வதற்காக இந்த தண்டப்பணம் விதிக்கப்படப்போவதில்லை. மக்களின் உயிரைப் பாதுகாப்பதன் நிமித்தமாகவே தண்டப் பணம் விதிக்கப்படுகிறது.

சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகள் மதிக்கப்படுகின்றனவா என்பதே முக்கியம். வாகனத்தைச் செலுத்தும் போது சட்டத்தை மீறிச் செயற்படுவோர் மற்றும் போதையில் இருப்போருக்கு எதிராகவே இந்தத் தண்டப்பணம் விதிக்கப்படவுள்ளது. இலங்கையில் நாளொன்றுக்கு 8 முதல் 10 பேர் வரையில் விபத் துக்களால் உயிரிழக்கின்றனர்'. இந்த விடயம் பற்றிய கேள்வி களை எழுப்பி உரிய தெளிவு களைப் பெற்றுக்கொள்ள பிறிதொரு வாய்ப்பை ஏற்படுத்தி தருவதாகவும் அமைச்சர் கஜந்த கூறினார்.

இந்த விவகாரம் தொடர்பில் கருத்தொன்றை முன்வைத்த ஊடகத்துறை பிரதி அமைச்சர் கருணாரட்ன பரணவித்தாரன, வரவு– செலவுத்திட்ட 3ஆம் வாசிப்பு இன்னும் நிறைவேற்றப்படவில்லை என்றும் அதன் போது திருத்தங்களை முன் வைக்க முடியும் என்று குறிப்பிட்டார். (வ-5)

# அலைபேசியில் ஆபாசம் குடும்பத்தலைவர் கைது

அலைபேசியில் ஆபாசப் படங்களை காண்பித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட யாழ்ப்பாணம் கொழும்புத்துறையைச் சேர்ந்த குடும்பத் தலைவரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்ப்பாண நீதிவான் மன்று நேற்று உத்தரவிட்டது. தாயார் வீட்டில் இல்லாத நேரம் சந்தேகநபரால் மகளான சிறுமிக்கு ஆபாசப் படங்கள் காண்பித்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டது. தாயார் வீட்டுக்கு வந்ததன் பின்னர் அது தொடர்பில் சிறுமி அவரிடம் கூறியுள்ளார். அதனையடுத்துத் தாயார் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய சிறுவர் பெண்கள் பிரிவுக்கு முறையிடப்பட்டார். கைது செய்யப்பட்ட சந்தேகநபர் பொலிஸாரால் நேற்று நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். அவரை இம்மாதம் 22 ஆம் திகதி வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு பதில் நீதிவான் கே.கேசவன் உத்தரவிட்டார். (வ-4,103)

AIR MATTRESSES

உத்தரவாதத்துடனான அதியுயர்தரத்திலான
AIR MATTRESSES ஐந்து வேறு வேறு
உற்பத்தியாளர்களிடமிருந்து குறைந்த விலையில்




வனிக்கா சேஜிக்கல்ஸ்
203, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
Tel: 021 222 0077 Fax: 021 222 2445
Hot line: 077 442 2367

இலங்கையில் ஆங்கில மொழி
கற்பித்தலில் முன்னோடியாகத் திகழும்
ஈ–சிற்றி ஆங்கிலக் கல்லூரியின்



புதிய பிரிவுகள் ஆரம்பம்

DIPLOMA IN ENGLISH (SPOKEN ENGLISH)
06 MONTHS
(சனி/ஞாயிறு தினங்களில்
மதியம் 12.30 - 03.00 மணி வரை)

IELTS LIFE SKILLS A1
(திருமணம் புரிந்தவர்கள் SPOUSE
விசாவில் UK செல்வதற்கான பரீட்சை)

SPOKEN SINHALA
(சனி/ஞாயிறு தினங்களில்
காலை 08.30 - 10.00 மணி வரை)

ஆரம்பம் : 19.11.2016

E-CITY COLLEGE OF ENGLISH
& IT SKILLS DEVELOPMENT
இல. 372D, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
( வீரமாகாளி அம்மன் கோவில் அருகில் )
Tel : 0212217106 / 0770610271
0773400418 / 0774924166

பூப்புனித நீராட்டுவிழா அழைப்பு

(20.11.2016) ஞாயிற்றுக்கிழமை

எமது புத்திரிகளான
திருவளர் செல்வி
S.வினித்தா
அவர்களுக்கும்
S.அபிராமி
அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணையுடன் எமது இல்லத்தில் பூப்புனித நீராட்டுவிழா நடத்த பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து செல்விதனை ஆசீர்வதித்து தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குருக்கள் செல்வராணி தம்பதியினர்.
077 6701678, 021 226 3944

(C 28530)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புங்கையின் புதிய ஒளி அமைப்பால் பனை நடுகை

யாழ்ப்பாணம், நவ.17

வடமாகாண மரநடுகை மாதத்தை முன்னிட்டு புங்குடுதீவில் இயங்கிவரும் புங்கையின் புதிய ஒளி என்னும் இளைஞர் அமைப்பால் புங்குடுதீவில் பனம் விதைகள் நடப்பட்டன.

நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற நிகழ்வில் வடமாகாண சுற்றாடல் அமைச்சர் பொ.ஐங்கரநேசன் கலந்துகொண்டு முதல் பனம் விதையை நட்டு நடுகையைச் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்தார். தொடர்ந்து புங்குடுதீவுப் பாடசாலைகளைச் சேர்ந்த நூற்றுக் கணக்கான மாணவ மாணவிகளும் பனம் விதைகளை நட்டனர்.

பனை விதை நடுகையின் பின்னர் புங்குடுதீவு கண்ணகை அம்மன் ஆலய மண்டபத்தில் மாணவர்களுக்கான மர நடுகை தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தமர்வும், வினாவிடைப் போட்டிகளும் இடம்பெற்று, வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளும் வழங்கப்பட்டன. விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசனின் பிரமாண அடிப்படையிலான நன்கொடை நிதியில் இருந்து புங்கையின் புதிய ஒளி அமைப்புக்கு மரநடுகையைத் தொடர்ந்து முன்னெடுப் பதற்கு உதவியாக முச்சக்கரத் தள்ளு வண்டிகள், மண்வெட்டிகள், கடப்பாரைகள் மற்றும் பிக்கான்கள் போன்ற உபகரணங்களும் வழங்கப்பட்டன.

நிகழ்வில் புங்குடுதீவு மகா வித்தியாலய அதிபர் சு.கனகரத்தினம், புங்கையின் புதிய ஒளி அமைப்பின் தலைவர் அ.கவியரசன், கழக அமைப்பின் செயலாளர் க.குணாளன் ஆகியோரும் பாடசாலை ஆசிரியர்களும் கலந்து கொண்டனர். (ற-21)

# நல்லிணக்கத்தை நொறுக்குகிறார் சுமணரத்ன தேரர்

திருமலை, நவ.17

மட்டக்களப்பு மங்களராம விகாரையின் விகாராதிபதி அம்பிட்டிய சுமணரத்ன தேரரின் கீழ்த்தரமான வார்த்தைகள் நல்லிணக்கத்தை உடைத்து அடித்து நொறுக்குவதாக உள்ளன என்று வடக்கு மாகாண சபையின் உறுப்பினர் சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

திருகோணமலை ரெலோ அமைப்பின் தலைமைக் காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

குறித்த புத்த பிக்கு தொடர்ந்து தமிழ்பேசும் மக்களை இழிவுபடுத்துகின்ற மிகமோசமான செயல்களில் ஈடுபட்டு வருகின்றார். பட்டிப்பளைப் பிரதேச செயலகக் குழுவினரையும், அந்தப் பகுதியைச் சேர்ந்த கிராம சேவை உத்தியோகத்தரையும் மிக மோசமாக-தரக்குறைவாகத் திட்டியதுடன் தமிழர்கள் எல்லோரும் புலிகள் என்ற வார்த்தையையும் பாவித்திருக்கின்றார். அங்கிருந்த பொலிஸார் மௌனமாக இருந்துள்ளனர்.

இது, சிங்கள பௌத்த மேலாதிக்கத்தின் அதி உச்ச நிலையையே காட்டியுள்ளது. இவ்வாறான நிலமைகள் மூலம் இலங்கையில் தேசிய நல்லிணக்கத்தை ஒருபோதும் ஏற்படுத்த முடியாது. எனவே, அரசு இதனை நிறுத்த வேண்டும் - என்றார். (த-ய-45)

## 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம் 28.09.1949
மறைவு 04.10.2016

அமரர்
**விசுவலிங்கம் பாலசுப்பிரமணியம்**
(பாலா)
(ஓய்வு பெற்ற நூலகப் பொறுப்பாளர், சமாதான நீதிவான்)

கடந்த (04.10.2016) செவ்வாய்க்கிழமை அன்று ஆஸ்திரேலியாவில் இறைபதம் எய்திய எமது அன்புத்தெய்வத்தின் இறுதிக்கிரியை நிகழ்வில் நேரடியாக பங்கு பற்றி துயர்பகிர்ந்த மற்றும் நேரில் வந்து ஆறுதல் கூறியவர்கள் பல்வேறு வழிகளில் துணைநின்ற உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள், சாவகச்சேரி மத்தியஸ்த சபை உறுப்பினர்கள் மற்றும் தொ.பேசி மூலம் தொடர்பு கொண்டு இலங்கை மற்றும் அயல்நாட்டிலிருந்து அனுதாபம் தெரிவித்தவர்க்கும் அஞ்சலி பிரசுரங்கள், பதாகைகள் மூலம் துயர் பகிர்ந்தவர்க்கும் எமது இதயம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஆசிரியர் வீதி, பெரியமதவடி
சாவகச்சேரி.
T.P : 0061 469360792, 0061 402703064
என்றும் உங்கள் நினைவில் குடும்பத்தினர்.

## ஓராண்டு நினைவலைகள்

அன்னை மடியில்
12 . 12 . 1950



ஆண்டவன் அடியில்
28 . 11 . 2015

அமரர்
**கணபதிப்பிள்ளை சபாநாயகம்**
(ஓய்வு பெற்ற ஆசிரியர், யாழ். இந்துக் கல்லூரி)
திதி: திருதியை

கற்பனையில் மிதந்தபடி கனவுகள் கலைந்தபடி
கண்ணீரில் நனைந்தபடி நினைத்துப்
பார்க்கின்றோம்-நீங்கள்
இல்லையா என்று நம்பமுடியவில்லையே
நம் கண்கள் முன்னால் - நீங்கள்
நிதமும் நடமாடுகின்றீர்களே
மறக்க முடியுமா என்றும் உங்களை
மகிழ்வுடன் தான் இருக்க முடியுமா எங்களால்
ஆறாத் துயருடன் ஆண்டொன்று போய்விட்டது
ஓராண்டென்ன ஒருயுகம் சென்றாலும் மறவோம் உங்களை

'நாகேஸ்வரி இல்லம்'
உரும்பிராய் கிழக்கு,
கரந்தன், நீர்வேலி.

என்றும் உங்கள் நினைவுடன்
வாழ்ந்து கொண்டிருக்கும்
உங்கள் குடும்பத்தினர்.

(J 6163) (16,17,19)

## கைதான...

யல் மேலும் நீடிக்கப்பட்டது.

அவ்வாற கைது செய்யப்பட்ட 11 பேரும் கொழும்புமேலதிக நீதிவான் முன்னிலையில் நேற்று முற்படுத்தப்பட்டனர். அதன்போதே அவர்களை எதிர்வரும் 30 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

அத்துடன், அவர்களது உறவினர்களும் நேற்று நீதிமன்றுக்குச் சென்றிருந்தனர். 11 பேரையும் நீதிமன்றுக்குக் கொண்டு செல்லப்படும் போதும், பின்னர் சிறைச்சாலை வாகனத்தில் ஏற்றியபோதும் உறவினர்கள் அழுது குளறியதால் அங்கு பரபரப்பு ஏற்பட்டிருந்தது. (வ-4)

## கல்லுண்டாயில்...

யசாலையில் சேர்த்தனர்.

இந்த வாள்வெட்டுச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் 4 பேரைக் கைது செய்துள்ளதாகப் பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டது.

நேற்று மாலை 6 .30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

சுமார் 40 வயது மதிக்கத்தக்க குறித்த நபர் 7.55 மணியளவில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அவரது முகத்தில் படுகாயம் காணப்படுகிறது.

ஒருவர் வெட்டப்பட்டு அநாதரவான நிலையில் காணப்படுவதாக தமக்குக் கிடைத்த தகவலின்படி அங்கு சென்றபோது ஆபத்தான நிலையில் காணப்பட்ட அவரை மீட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்த்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர். அவர் அதி தீவிர சத்திர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டு சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டார். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலதிக விசாரணை மேற்கொள்ளப்படுகிறது என்று பொலிஸார் தெரிவித்தனர். (வ-4,7,101,106)

## மரண அறிவித்தல்

**காசிப்பிள்ளை சரவணமுத்து**
(சின்னமணி)

(ஓய்வு பெற்ற ஆசிரியரும், பொற்கலம் தம்பை ஞானவைரவர் ஆலய முன்னாள் செயலாளரும், தெல்லிப்பழை ஓய்வூதியர் சங்க முன்னாள் செயலாளரும், சமாதான நீதிவானும்)



தையிட்டிப்புலம், வித்தகபுரம், தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட காசிப்பிள்ளை சரவணமுத்து நேற்று (16.11.2016) புதன்கிழமை பி.ப 4.30 மணிக்கு காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற காசிப்பிள்ளை-பூதாத்தைப்பிள்ளை தம்பதிகளின் இளைய புதல்வனும் காலஞ்சென்ற அம்பலவாணர்-தங்கமுத்து தம்பதிகளின் அன்பு மருமகனும் இராசமணியின் பாசமிகு கணவரும் பிறேமா (ஜேர்மனி), அருள்மொழி, பிறேமநந்தன் (நடத்துனர் C.T.Bகாரைநகர்), கலைவாணி (பிரதேச செயலகம் தெல்லிப்பழை), கிருபானந்தன் ஆகியோரின் தந்தையும் இதயகுமார்(ஜேர்மனி), மகாலிங்கம், சிவகலா (பிரதேச செயலகம், சங்கானை), கௌரிதரன் (ஆசிரியர், யா/ கீரிமலை நகுலேஸ்வரா வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் காலஞ்சென்றவர்களான செல்வநாயகம், கந்தையா, மயில்வாகனம் ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்ற கந்தசாமி (காந்தி) மற்றும் இரத்தினசிங்கம் (ஓய்வு பெற்ற ஆசிரியர்) ஆகியோரின் மைத்துனரும் றதுசன் (ஜேர்மனி), மயூவிக்கா, சுரேக்கா, சூரிக்கா, குகப்பிரியா, தர்சாயினி, கர்ணிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.11.2016) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப 2.00 மணிக்கு கீரிமலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
வித்தகபுரம். (J 6171) (16.11.16) 077 2719731

## ரூ. 76 லட்சம்...

அவற்றுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில், அந்த வீட்டில் வசிக்கும் 24 வயதுடைய இளம் பெண் ஒருவர் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். 76 லட்சம் ரூபா பணம் கஞ்சா விற்பனை செய்ததனால் பெறப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மாதகல் கிழக்கு வில்வளைப் பகுதியை அண்மித்துள்ள வீட்டில் அவை நேற்று மதியம் மீட்கப்பட்டன. இரகசியத் தகவல் ஒன்றின் அடிப்படையில் அந்த வீட்டுக்குச் சென்று பல இடங்களிலும் தேடுதல் நடத் தப்பட்டது. இதன்போதே மண்ணில் புதைக் கப்பட்டிருந்த நிலையில் கஞ்சாவும் ரொக்கப் பணமும் மீட்கப் பட்டன. பணம் பரல் ஒன் றுக்குள் வைத்தவாறும், கஞ்சா போதைப் பொருள் பொதி செய்யப்பட்டும் மண்ணில் புதைக்கப்பட்டிருந்தன.

வீட்டில் 3 பிள்ளைகளும் தாய் தந்தையருமாக 5 பேர் வசித்து வருகின்றனர். இவை புதைக்கப்பட்டமை வீட்டிலுள்ள அனைவருக்கும் தெரிந்திருக்கும். எனினும் முதன்மை நபராக அந்தப் பெண் மட்டும் தற்போது (நேற்றுமதியம்) கைது செய்யப்பட்டார். அவர்கள் கடற்றொழில் செய்பவர்களாக இருப்பதனால், இந்தியாவிலிருந்து படகு மூலமாக கஞ்சா போதைப் பொருளைக்கொண்டு வந்து விற்பனை செய்பவர்களாக இருக்கலாம் என்று சந்தேகிக்கிறோம் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, கைது செய்யப்பட்ட இளம் பெண்ணின் குடும்பத்தைச் சேர்ந்த இளைஞன் ஒருவர் உட்பட 8 பேர் வவுனியாவில் நேற்றுக் கைது செய்யப்பட்டனர். அவர்கள் 70 கிலோகிராம் கஞ்சாவைக் கொண்டு சென்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட் டனர். அவர்களை எதிர்வரும் 30 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு வவுனியா நீதிமன்று நேற்று உத்தரவிட்டது. (வ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமாகாண மரநடுகை மாதம்

“உலகில் உள்ள கானகங்களுக்கு நாம் இழைத்திடும் கொடும் செயல்கள் நாம் நமக்குள் ஒருவருக்கொருவர் இழைத்திடும் கொடும் செயல்களின் பிரதிபலிப்பே.”

– மகாத்மா காந்தி (இந்திய தேசபிதா)

கார்த்திகை
01–30, 2016
“சொந்த மண் சொந்த மரங்கள்”
“ஆளுக்கொரு மரம் நடுவோம்
நாளுக்கொரு வரம் பெறுவோம்”



வவுனியா–தோணிக்கல்லில் வீடொன்றில் வளர்த்த நாய் ஈன்ற குட்டிகளில் ஒன்று விசித்திர உருவத்தில் பிறந்துள்ளது. நாயை போன்றதும், மனிதனைப் போன்றதுமாக காணப்படும் இந்த குட்டி ஏனைய குட்டிகளை விட அதிக எடையுடன் காணப்பட்டது. பிறந்த சில மணிநேரங்களில் உயிரிழந்தது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-21)

# பொருத்தமற்ற நபர்களுக்கு முதலமைச்சரின் உதவிகள்

## பாதிக்கப்பட்ட மக்கள் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், நவ.17

வடக்கு மாகாண முதலமைச்சரால் பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட வாழ்வாதார உதவித் திட்டங்களில் உண்மையில் பாதிக்கப்பட்ட பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் உள்ளடக்கப்படவில்லை என்று குற்றஞ்சாட்டப்பட்டது.

கடந்த 10 ஆம் திகதி புதுக்குடியிருப்பு பிரதேச சபை அலுவலகத்தில் 89 பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன. புதுக்குடியிருப்பு பெண் முயற்சியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தால் வழங்கப்பட்ட பெயர் விவரங்களுக்கு அமைய முதலமைச்சர் நேரில் வந்து வாழ்வாதார உதவிகளை வழங்கினார்.

உதவித் திட்டங்களில் உள்ளடக்கப்பட்டவர்கள் மீண்டும் மீண்டும் உதவி பெற்றவர்களாவர். கூட்டுறவுச் சங்கத்திலுள்ளோரின் உறவினர்களாகவுமுள்ளனர்.

கைவேலிக் கிராமத்திலும் அயல் கிராமங்களிலும் வாழும் மாற்றுவலுவுள்ளோர், பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளன. வாழ்வாதார உதவிகளை வழங்கிய முதலமைச்சர்கூட எந்த அடிப்படையில் நபர்களை தெரிவு செய்தீர்கள் என்பதை கேட்கவில்லை. நாங்கள் மிகுந்த கவலை அடைந்துள்ளோம் – என்று பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்தனர்.

“கடந்த 10 ஆம் திகதி புதுக்குடியிருப்பு பிரதேச சபை அலுவலகத்தில் 89 பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன. வடக்கு முதலமைச்சர் அவற்றை வழங்கினார்.”

சமூக மட்ட அமைப்பு ஒன்றின் ஊடாகவே பயனாளிகளின் பெயர் விவரங்களை எடுத்தோம்.

அதைப் பிரதேச செயலாளர், கிராம சேவையாளர்கள் உறுதிப்படுத்திய பின்னரே உதவிகள் வழங்கப்பட்டன. அதில் தவறுகள் இடம்பெறவில்லை– என்று வடக்கு மாகாண முதலமைச்சரின் செயலாளர் விஜயலட்சுமி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

புதிதாக அமைக்கப்பட்டுள்ள எமது சங்கத்தில் உள்ள 89 பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு உதவிகள் வழங்குமாறு கோட்டிருந்தோம்.

எமது முன்னேற்றத்துக்கு இதுவரை கிடைத்த வாழ்வாதாரங்கள் போதுமானதாக இல்லை. நாம் எவரிடமும் கையேந்தாத அளவு உதவி செய்யுங்கள். அவற்றைக் கொண்டு நாம் எமது வாழ்வாதாரத்தை மேம்படுத்துகின்றோம் என்று கேட்டிருந்தோம். அதன் பிரகாரமே எமக்கு வாழ்வாதார உதவிகள் கிடைத்தன. தேவையற்ற குற்றச்சாட்டுக்களை சுமத்துவது வருத்தமளிக்கின்றது – என்று பெண் முயற்சியாளர் சங்கத்தின் தலைவர் தெரிவித்தார். (ற-21,7)

# 2 ஆயிரம் ஹெக்ரேயரில் சின்ன வெங்காய செய்கை

யாழ்ப்பாணம், நவ.17

யாழ்.குடாநாட்டில் இந்த முறை போகத்தின் போது 2 ஆயிரத்து 560 ஹெக்ரேயர் நிலப் பரப்பில் சின்னவெங்காயம் செய்கை செய்யப்படவுள்ளது. விவசாயிகள் தமக்குத் தேவையான விதை வெங்காயத்தை தற்போது பெற்றுக் கொள்வதில் ஈடுபட்டு வருகின்றனர் என்று விவசாயத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடந்த சிறுபோகத்தில் குடாநாட்டில் கூடுதலான விவசாயிகள் சின்ன வெங்காயச் செய்கையில் ஈடுபட்டனர். அதிகமான விவசாயிகள் பெரும் விளைச்சலைப் பெற்றுக்கொண்டனர். அறுவடை செய்த வெங்காயத்தை தற்போது தென்பகுதிக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றது. அதனால் குடாநாட்டு சந்தையில் சின்னவெங்காயத்தின் விலை தற்போது அதிகரித்துச் செல்கின்றன.

யாழ்ப்பாணம் திருநெல்வேலிச் சந்தையில் ஒரு கிலோ சின்ன வெங்காயம் 120 ரூபாவாக விற்கப்படுகின்றது. (ற-17)

# மாற்றுவலுவுள்ள தகுதியானோருக்கு சாரதி அனுமதிப் பத்திரங்கள் வழங்குக

## வட மாகாண சபை உறுப்பினர் ரவிகரன் கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ .17

மாற்று வலுவுடையவர்களில் சாரத்திய அனுமதிப் பத்திரம் பெறுவதற்குத் தகுதியானவர்களுக்கு சாரத்திய அனுமதிப்பத்திரங்களை வழங்க வேண்டும். அதனால் அவர்களின் வாழ்வாதாரம் முன்னேற்றமடையும்.

இவ்வாறு வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

உள்நாட்டு போரின் காரணமாக பொதுமக்கள், முன்னாள் போராளிகள் எனப் பலர் மாற்றுவலுவுள்ளோராக்கப்பட்டனர். அவர்களில் சாரத்திய அனுமதிப் பத்திரம் பெறக் கூடியவர்களை தெரிந்தெடுத்து அவர்களுக்கு சாரத்திய அனுமதிப் பத்திரங்களை பெற்றுக்கொடுக்க வடக்கு மாகாண சபை நடவடிக்கை எடுக்க வேண்டும்.



தற்போதைய சூழ்நிலையில் அநேகமான மாற்றுத் திறனாளிகள் சாரத்திய அனுமதிப்பத்திரம் பெறக்கூடிய நிலையில் உள்ளனர். அவர்கள் அதனை பெறமுடியாத நிலைமை காணப்படுகின்றது.

பலர் வேலை வாய்ப்புக்களை இதனால் இழக்கின்றனர். அவர்களின் வாழ்வாதாரம் மிகவும் பாதிக்கப்படுகின்றது.

அவர்களுக்கு ஊந்துருளி மற்றும் முச்சக்கர வண்டி வாகனங்களுக்கான சாரத்திய அனுமதிப் பத்திரங்களை வழங்கினால் மூலம் அவற்றை கொண்டு தங்களதுவாழ்வாதாரத்தை முன்னேற்ற முடியும்.

உரிய வகையில் சிறப்பு சட்ட வரைவுகளை கொழும்பு அரசு உருவாக்கி மாற்று வலுவுடையவர்களுக்கு சாரத்திய அனுமதிப் பத்திரத்தை வழங்க முன்வரவேண்டும். இது தொடர்பில் பிரேரணை ஒன்றை எதிர்வரும் 24 ஆம் திகதி கூடவுள்ள வட மாகாண சபையின் அமர்வில் கொண்டு வர தீர்மானித்துள்ளேன் – என்றார். (ற-21,8)

# மின்கம்பத்தை சீராக்குமாறு கோரிக்கை

வவுனியா, நவ.17

வவுனியா, சாந்தசோலை, கிறேசர் வீதியிலுள்ள மின்கம்பம் சரிந்து விழும் நிலையிலுள்ளது. இது தொடர்பாக பல தடவைகள் வவுனியா மின்சார நிலையத்துக்கு முறைப்பாடு செய்தும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இவ்வாறு பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் மாலை வடமாகாண மின்சார சபை மக்கள் தொடர்பகத்தின் தொலைபேசிக்கு அழைப்பு ஏற்படுத்தப்பட்டு குறித்த விடயம் தொடர்பாக முறைப்பாடு மேற் கொள்ளப்பட்டது. முறைப்பாட்டை ஏற்றுக்கொண்டவர் முறைப்பாடு மேற் கொள்ளப்பட்டு நான்கு மணித்தியாலத்தில் திருத்தப் பணிக்கு மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்தார். நேற்று பிற்பகல் ஒரு மணிவரை மின் கம்பத்தில் திருத்தவேலைகள் மேற் கொள்ளப்படவில்லை. கடந்த சில நாள்களாக பெய்த மழை காரணமாக இந்த மின்கம்பம் சரிந்துள்ளது. அருகிலுள்ள வீட்டின் மேல் விழும் அபாயம் உள்ளது. மின்கம்பம் கீழே விழுந்தால் இந்த வீதியிலுள்ள 5 வீடுகளுக்கு சேதம் ஏற்படும். இந்த வீதியால் பொதுமக்கள் பயணம் செய்வதையும் தெரிவித்தும்–அதிகாரிகள் திருத்தப்பணிகள் மேற்கொள்ள முன்வரவில்லை – என்று அவர்கள் தெரிவித்தனர். (ற-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எழு கலையின் கருத்தமர்வு

யாழ்ப்பாணம், நவ.17

எழு கலை இலக்கியப் பேரவையின் சிறப்புக் கருத்தமர்வும், தளவாசல் கலை, இலக்கிய, சமூக, பண்பாட்டுக் காலாண்டிதழ் பற்றிய பகிர்வும் நாளை மறுதினம் சனிக்கிழமை மாலை 3.30 மணிக்கு யாழ்ப்பாண இந்துக்கல்லூரியில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

எழு கலை இலக்கியப் பேரவையின் போசகர் இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் கலாநிதி சி.ரகுராம் அரச நிர்வாகத்தில் அடித்தள மக்களுக்கான தொடர்பாடல் என்ற தலைப்பில் சிறப்புக் கருத்துரை வழங்குவார் என்று தெரிவிக்கப்பட்டது. அத்துடன் தளவாசல் இதழ் பற்றிய கருத்துப் பகிர்வை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமூகவியல்துறை மூத்த விரிவுரையாளர் இ.இராஜேஸ்கண்ணன் வழங்கவுள்ளார். (வ-7)

## நாவலர் விழா

யாழ்ப்பாணம் நவ 17

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியும் சைவபரிபாலன சபையும் இணைந்து நடாத்தும் நாவலர் விழா நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணியளவில் கல்லூரியின் பிரார்த்தனை மண்டபத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணம் வலயக் கல்விப் பணிப்பாளர் ந.தெய்வேந்திரராஜா கலந்து கொள்வார் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-8)

## சமய தீட்சை

யாழ்ப்பாணம், நவ.17

கந்தர்மடத்தில் அமைந்துள்ள யாழ். இந்து சமயப் பேரவையின் நடராஜர் மண்டபத்தில் எதிர்வரும் 23ஆம் திகதி புதன்கிழமை காலை 7.00 மணிக்கு கிரியாக் கிரம ஜோதி. சிவசிறி. ச. சோமாஸ்கந்த சிவாச்சாரியாரால் சமய தீட்சைகள் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. விரும்புவோர் பங்கு கொள்ளுமாறு யாழ்ப்பாண இந்து சமயப் பேரவை செயலாளர் சி. சக்திகிரீவன் கேட்டுள்ளார். (வ-7)

## பெரும் கடற்கலங்கள் அமைக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், நவ.17

வடமராட்சி கிழக்கில் பெரிய கடற் கலங்களை அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன என்று பிரதேச செயலாளர் கே.கனகேஸ்வரன் தெரிவித்தார்.

ஆழ்கடல் மீன் பிடியை ஊக்குவிக்கும் பொருட்டு கடற்றொழில் அமைச்சு பெரிய அளவிலான கடற்கலங்களை மானிய விலையில் வழங்கவுள்ளன. அதற்கமைய 41 அடி நீளத்துக்கு மேற்பட்ட அளவிலான கடற்கலங்களை ஆழ்கடல் மீன்பிடிக்குப் பயன்படுத்த முடியும். பெரிய கடற் கலங் கள் மீனவர்கள் பல நாள்கள் கடலில் தங்கியிருந்து மீன்பிடிக்கக் கூடிய வகையில் நிர்மாணம் செய்யப்படவும் உள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ற-17)

## தம்பகாமம் நீர் ஏரியில் 4 லட்சம் மீன் குஞ்சுகள்



வடமராட்சி, நவ.17

வடமராட்சி கிழக்கு, தம்பகாமம் நன்னீர் மீன்பிடியாளர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் வகையில் அந்தப் பகுதியில் உள்ள நீர் ஏரியில் 4 லட்சத்து 50 ஆயிரம் மீன்குஞ்சுகள் வடமாகாண மீன்பிடி அமைச்சால் வைப்பிலிடப்பட்டன.

இந்த நிகழ்வு நேற்றுக் காலை இடம்பெற்றது. நிகழ்வில் வடமாகாண மீன்பிடி அமைச்சர் பா.டெனீஸ்வரன் கலந்து கொண்டு மீன் குஞ்சுகளை நன்னீரில் விடும் நிகழ்வை ஆரம்பித்தார்.

நன்னீர் மீன்பிடித்தொழிலை தமது ஜீவனோபாயத் தொழிலாகக் கொண்ட சுமார் 120 குடும்பங்கள் அப்பகுதியில் வாழ்கின்றன. அந்தக் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை அபிவிருத்தி செய்யும் நோக்குடனே மீன் குஞ் சுகள் குறித்த ஏரியில் வைப்பிலிடப்பட்டன என்று அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சித்திட்டத்துக்குச் சுமார் 10 லட்சம் ரூபா நிதி ஒதுக் கீடு செய்யப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (ற-109)

**நூல் வெளியீடு**

யாழ். கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் கணித, விஞ்ஞான தினமும் நூல் வெளியீட்டு விழாவும் இன்று காலை 10:30 மணிக்குகல்லூரியின்முதன்மை மண்டபத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக தாவரவியல் துறை விஞ்ஞான பீடத் தலைவர் திருமதி குலரஜனி நிறஞ்சன் கலந்து கொள்வர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-எ)

## தென்மராட்சி வீட்டுத் திட்டத்தில் 96 வீதம் நிறைவு

தென்மராட்சி, நவ.17

தென்மராட்சி பிரதேசத்தில் மீள் குடியமர்ந்த மக்களுக்கு வழங்கப்பட்ட 306 வீடுகளில் 96 வீதமான வீடுகளின் கட்டுமானம் பூர்த்தி செய்யப்பட்டு உரிமையாளர்கள் குடியமர்ந்துள்ளனர்.

ஏனைய வீடுகளும் இந்த மாத இறுதிக்குள் முழுமைப்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

தென்மராட்சி பிரதேசத்தில் 2011 ஆம் ஆண்டுக்குப் பின்னர் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட தனங்களப்பு, மறவன்புலவு, எழுதுமட்டுவாழ் தெற்கு, வடக்கு, கரம்பகம், கோயிற்குடியிருப்பு உள்ளிட்ட பகுதிகளில் 290 குடும்பங்களுக்கு வீட்டுத்திட்டம் வழங்கப்பட்டது. அத்துடன் வன்னி மற்றும் இந்தியா ஆகிய இடங்களிலிருந்து சொந்த இடங்களில் மீளக் குடியமர்ந்த 18 குடும்பங்களும் இந்தத் திட்டத்துக்குத் தெரிவு செய்யப்பட்டு மீள்குடியேற்ற அமைச்சினால் தலா 8 லட்சம் ரூபா பெறுமதியான 308 வீடுகளுக்கான அனுமதிகள் வழங்கப்பட்டன.

கடந்த ஜூன் மாதம் பயனாளிகளுக்கு வீடுகள் அமைக்க அனுமதி வழங்கப்பட்டு செப்ரெம்பர் 30ஆம் திகதிக்குள் வேலைகள் யாவும் நிறைவு செய்யப்படல் வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டது. கற்கள், மணலுக்கு பெரும் பற்றாக்குறை காணப்பட்ட போதும் பயானளிகளின் பெரு முயற்சியால் 30 சதவீதமான வீடுகள் செப்ரம்பர் மாதம் வேலைகள் முடிக்கப்பட்டன.

கடந்த மாதம் வரை வீடமைப்புத்தி திட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 96 சதவீதமானோர் வேலைகளை நிறைவு செய்து சொந்த வீடுகளில் குடியமர்ந்துள்ளனர். மிகுதி நான்கு வீதமானோரின் வீட்டு வேலைகள் நிறைவடையும் நிலையில் உள்ள போதிலும் அங்கு காணப்படும் சிறிய வேலைகளை முழுமை செய்து குடியமர்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

“கட்டடப் பொருள்களுக்குப் பற்றாக் குறை ஏற்பட்டபோதிலும் சிரமங்களை வெளிக்காட்டாமல் எமக்குப் பயனாளிகள் அனைவரும் ஒத்துழைப்பு வழங்கியிருந்தனர். பயனாளிகள் எம்மை சிறப்பாகச் செயற்பட்டு பிரதேசத்தில் மீள் குடியேற்ற அமைச்சால் மேற்கொள்ளப்பட்ட வீடமைப்புத் திட்டத்தை முழுமையாக வெற்றி பெறச் செய்துள்ளனர்” என்று தென்மராட்சி பிரதேச செயலாளர் தெரிவித்தார். (ற-9)

## விபத்தை ஏற்படுத்தி தப்பியவர் கைது

யாழ்ப்பாணம், நவ.17

முள்ளிப் பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் பாடசாலை அதிபரை மோதி கால்முறித்துவிட்டுத் தப்பிச் சென்ற சம்பவத்துடன் தொடர்புடைய கன்ரர் சாரதி நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார் என்று நெல்லியடிப்பொலிஸார் தெரிவித்தனர்.

பருத்தித்துறை – கொடிகாமம்– முள்ளி பிரதான வீதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வீதிவிபத்தில் பாடசாலை அதிபர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ் போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டார். குடமியன் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் அதிபராகக் கடமையாற்றும் மயில்வாகனம் லினாஸ்குமார் (வயது -39) என்பவரே காயமடைந்தார். பருத்தித்துறையில் இருந்து பாடசாலை சென்று கொண்டிருந்த வேளை சட்டவிரோதமாக மணல் ஏற்றி வந்தது என்று சந்தேகிக்கப்படும் கன்ரர் வாகனம் ஒன்று அதிபரை மோதிவிட்டுச் தப்பிச்சென்றது என்று தெரிவிக்கப்பட்டது.

நெல்லியடி போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்ட விசாரணையின் அடிப்படையில் பொது மக்களின் ஒத்துழைப்புடன் துன்னாலைப் பகுதியை சேர்ந்த குறித்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார். விபத்தை ஏற்படுத்திய கன்ரர் வாகனம் வன்னியில் உள்ள அவரது உறவினர் வீட்டில் மறைத்து வைத்திருந்த நிலையில் கைப்பற்றப் பட்டது. விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணையை மேற்கொண்டு வருகின்றோம். – என்று பொலிஸார் தெரிவித்தனர். (ற-217)

## வீட்டுக்குள் புகுந்து தீ வைத்தவரை அடையாம் காட்டியது மோப்பநாய்

### கோண்டாவிலில் சம்பவம்



யாழ்ப்பாணம், நவ. 17

யாழ்ப்பாணம், கோண்டாவில் இராமகிருஸ்ணா பாடசாலைக்கு அருகில் வீட்டுக்குள் புகுந்து உடமைகள் தீ வைத்துக் கொளுத்தப்பட்டன . அவ்வாறு கொளுத்தியவர் என்று சந்தேகிக்கப்படுபவரின் பாதணி சம்பவ இடத்திலிருந்து மீட்கப்பட்ட நிலையில், மோப்ப நாயின் உதவியுடன் விசாரணை மேற்கொண்டதிலிருந்து ஒருவரைக் கைது செய்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

வணிகர் ஒருவரின் வீட்டில் கடந்த சனிக்கிழமை பகல் வீட்டில் யாரும் இல்லாதநேரம் தீ வைக்கப்பட்டது. சுமார் 3 லட்சம் ரூபா பெறுமதியான பொருள் இழப்பு ஏற்பட்டது. வெளியே சென்றவர்கள் வீடு திரும்பியபோது சம்பவத்தைக் கண்டு பொலிஸாருக்கு முறையிட்டனர்.

அங்கு பொலிஸார் தேடுதல் நடத்தினர். இனம்தெரியாதவர் ஒருவர் வீட்டிற்குள் நுழைந்து அங்கிருந்த உடமைகளைத் தீயிட்டுக் கொளுத்தியதாகச் சந்தேகிக்கப்பட்டது. தீயிட்டவர் என்று சந்தேகிக்கப்படுபவரின் பாதணி ஒன்று மீட்கப்பட்டது. அதனடிப்படையில் அவர் கைது செய்யப்பட்டார்.

இந்த நிலையில் சம்பவ இடத்தில் மோப்ப நாய் சகிதம் தேடுதல் நடத்தப்பட்டது. மோப்பநாயும் சந்தேக நபரது இல்லத்திற்கே சென்று அடையாளப்படுத்தியது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர் விசாரணையின் பின்னர் நீதிவானிடம் முற்படுத்தப்பட்டார். அவரை எதிர்வரும் 24ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் மன்று உத்தரவிட்டது. (வ-4,101)

## கனகரத்தினம் மத்திய மகா வித்தியில் மாணவர் நாடாளுமன்ற கன்னி அமர்வு



யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் மாணவர் நாடாளுமன்ற கன்னி அமர்வு கடந்தவாரம் கல்லூரி கலைக் கூடத்தில் அதிபர் தலைமையில் இடம்பெற்றது.

இறைவணக்கத்துடன் அமர்வு ஆரம்பமானது. மங்கல விளக்கேற்றலைத் தொடர்ந்து பொறுப்பாசிரியர் சு.பரமேஸ்வரன் ஆசிரியரின் அறிமுகவுரை இடம்பெற்றது. தொடர்ந்து அதிபரினால் கல்வி அமைச்சின் பிரகடனம் வெளியிடப்பட்டது. சபாநாயகர் செல்வன் க.அபிசனின் சத்தியப்பிரமாணமும் பதவியேற்பும் இடம்பெற்றது. சபாநாயகரின் உரையைத் தொடர்ந்து பிரதமர் உள்ளிட்ட அமைச்சரவை உறுப்பினர்களின் சத்தியப்பிரமாணம் இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களின் சத்தியப்பிரமாணம் இடம்பெற்றது. சபாநாயகரின் ஒத்திவைப்பு வேளை பிரேரணையுடன் நாடாளுமன்ற அமர்வு நிறைவு பெற்றது. (வ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாதகலில் இருந்து கொழும்புக்கு கடத்திய கேரள கஞ்சா சிக்கியது

## வவுனியா, நொச்சிமோட்டையில்

வவுனியா, நவ.17

யாழ்ப்பாணம், மாதகலில் இருந்து கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்ட 70 கிலோ கேரளக் கஞ்சா நேற்றுமுன்தினம் இரவு வவுனியா நொச்சிமோட்டையில் கைப்பற்றப்பட்டது. குறித்த சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் எண்மர் வவுனியா பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

நேற்றுமுன்தினம் இரவு 11 மணி முதல் நள்ளிரவு 12.15 வரை ஓமந்தைப் பொலிஸாரும், வவுனியா பொலிஸாரும் இணைந்து வீதி ரோந்தில் ஈடுபட்டனர். நொச்சிமோட்டை பாலத்துக்கு அருகே ஹைஏஸ் ரக வாகனம் மறிக்கப்பட்டு சோதனையிடப்பட்டது. வாகனத்துக்குள் சந்தேகத்துக்கிடமான பொருள்கள் இல்லை. வாகனத்தின் இருக்கைகளைச் சோதனையிட்டபோது அதற்குள் கஞ்சா வைக்கப்பட்டு இருக்கை பொருத்தப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. இருக்கையின் மேலுள்ள உறைகளைக் கிழித்து 70 கிலோ கஞ்சா மீட்கப்பட்டது. வாகனத்தில் இருந்த எண்மர் கைது செய்யப்பட்டனர்.

கஞ்சா இந்தியாவில் இருந்து மாதகலுக்குக் கொண்டுவரப்பட்டு அங்கிருந்து கொழும்பு, கொச்சிக்கடையிலுள்ள கஞ்சா விற்பனையாளர்களிடம் கொண்டு செல்லப்பட்டமை விசாரணைகளில் தெரியவந்தது. கைது செய்யப்பட்டவர்களில் மூவர் சகோதரர்கள்- என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி எஸ்.பி.சி.எஸ். செனரத் தலைமையிலான பொலிஸ் குழுவே கஞ்சாவைக் கைப்பற்றியுள்ளது. (ற-21)

# உசுப்பேற்றுவதால் மீண்டும் பிரச்சினையே உருவாகும்

## வடக்கு சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம். நவ.17

உசுப்பேற்றுவது, உண்மையை மறைப்பது என்பது குற்றமான செயல். உண்மையில் என்ன நடக்கின்றது என்பதை அறிந்து கொள்ளுங்கள். உங்களால் முடிந்தால் உங்கள் கிராமத்துக்கு செல்லுங்கள். விதைவைகள், சிறுவர்களுக்கு உதவி செய்யுங்கள். சனசமூக நிலையத்தைச் சரியாக நடத்துங்கள். நீங்கள் இவற்றை செய்யாமல் உசுபேற்றி கதைப்பது மீண்டும் மீண்டும் கிடைக்காத பொருளுக்கு ஆசைபட துண்டுவதாகும். அது பெரும் பிரச்சினையை இந்த சமூதாயத்தில் ஏற்படுத்தும்.

இவ்வாறு வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் கடந்த திங்கட்கிழமை அரசியல் கைதி விவேகானதனூர் சதீசின் விடியலை தேடும் இரவுகள் நூல் வெளியீடு நடைபெற்றது. அதில் உரையாற்றியபோது வடக்கு அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

நான் வைத்தியராக இருப்பதால் விஞ்ஞான பூர்வமாக கதைக்க வேண்டும். ஒன்றுமே நடக்கவில்லை, ஒன்றுமேநடக்கவில்லை என்று கூறிக் கொண்டிருந்தால் எங்களுக்கும் இந்ததென்னிலங்கைக்கும் இடையில் ஒற்றுமை ஏற்படாது. பூகோள அரசியலை விளங்கிக்கொள்ள வேண்டும். நாங்கள் சிறிய தீவில் வாழ்கின்றோம். இன்று உலகத்தின் போக்கு என்ன?, வளர்ந்த நாடுகள் எவ்வாறு இனங்களுக்கிடையிலான உறவுகளையும் இனங்கள் தமது தனித்துவத்தையும் காப்பாற்றுகின்றன என்பதை அறிந்து கொள்ள வேண்டும். மிக முக்கியமான கூட்டங்களில்கலந்துகொள்கின்றபோது இதனை கவனத்தில் கொள்ள வேண்டும். உணர்ச்சி வசப்பட்டு பேசுவது நாங்கள் மீண்டும் தோற்றவர்களாகவும், குற்றவாளிகளாகவும் எங்களை துன்பப்படுத்திக் கொள்பவர்களாகவும் உருவாக்கும். இந்த நிலையில் இருந்து இன்னமொரு வளர்ச்சி படிக்கு செல்ல வேண்டும். இப்போது இருக்கின்ற உலகத்தை சரியாக புரிந்து கொள்ளுங்கள்.

உலக அரசியல் என்ன, உலக இனங்களுக்கிடையில் ஒற்றுமை ஏன் அவசியம், எவ்வாறான தனித்துவங்களை பேண வேண்டும், எவ்வாறான ஒற்றுமைகளை பேண வேண்டும் என்பதை விளங்கி கொள்ள வேண்டும். இங்கே போராட்டம் நடைபெற்றது எங்களுக்கு தெரியும். இந்த சமுதாயத்தை கட்டியெழுப்ப பலவற்றை செய்ய வேண்டியுள்ளது. இங்கே தலைவர்கள் இருக்கின்றார்கள். நாங்கள் எங்களால் செய்ய வேண்டியதை செய்வோம். உங்களுக்கும் சரியான வழிகள் இருக்கின்றன. ஒரு உயர் நிலையை அடைந்து நீங்களும் தலைவர்களாக வர வேண்டும்-என்றார். (ற-21,6)

# தனியார் துறைக்கு 5 நாள்கள் வேலை

## சனி, ஞாயிறு விடுமுறை தினங்களாகும்

தனியார்துறை ஊழியர்களுக்கு வாராந்தம் ஐந்து நாள்கள் (45 மணித்தியாலங்கள்) வேலை முறையொன்றை செயற்படுத்துவதற்கு அரசு தீர்மானித்திருப்பதாகத் தெரியவருகின்றது.

அதன் பிரகாரம் தனியார் துறை ஊழியர்கள் வாரத்தின் திங்கள் முதல் வெள்ளி வரை ஐந்து நாள்கள் (45 மணித்தியாலங்கள்) மாத்திரம் வேலை செய்வதற்கும் சனி மற்றும் ஞாயிறு தினங்களை அவர்களுக்கு விடுமுறைத் தினங்களாக்குவதற்கும் அரசு தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை- அரச ஊழியர்களின் தற்போதைய வாராந்த ஐந்து நாள் (40 மணித்தியாலம்) வேலை முறை தொடர்ந்து செயற்பாட்டில் இருக்கும். அத்துடன், ஒப்பந்த வேலைகளுக்காக தற்சமயம் வழங்கப்படும் ஆறுமாத கால எல்லையை ஒரு வருடமாக நீடிக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிய வருகின்றது. (த)

# 2,500 ரூபா தண்டப் பணம் சிறிய மீறல்களுக்கு அல்ல

## நிதியமைச்சர் ரவி தெரிவிப்பு

கொழும்பு, நவ 17

வரவு-செலவுத் திட்டத்தில் 2500 ரூபா தண்டப் பண யோசனை முன்வைக்கப்பட்டது, சாரதி அனுமதிப் பத்திரம் இன்றி வாகனம் செலுத்தும் குற்றச்சாட்டுக்களுக்கே தவிர, குறைந்தபட்ச வீதி ஒழுங்குகளை மீறுபவர்களுக்காக அல்ல என நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு தாஜ் சமுத்ரா ஹோட்டலில் நேற்று முன் தினம் நண்பகல் நடைபெற்ற, வரவு-செலவுத் திட்ட செயலமர்வொன்றில், கலந்து கொண்டு உரையாற்றுகையில் அமைச்சர் இதனைக் கூறியுள்ளார்.

அவர் தெரிவித்ததாவது:

வாகனமொன்று கோடு தாண்டிப் பயணித்தல், பொருத்தமற்ற இடத்தில் நிறுத்தி வைத்தல் போன்ற குற்றங்களுக்காக இந்த தண்டப் பணத்தை முன்மொழியவில்லை. அவ்வாறு செய்வதற்கு அரசுக்கு எதுவித தேவையும் இல்லை.

சட்டத்தைப் பாதுகாக்கும் சமூகமொன்றை உருவாக்குவது அவசியம். இதற்காக தண்டப் பணத்தை அதிகரிக்கும் தேவை உண்டு.

இது தொடர்பில், அமைச்சரவையின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டது. வாகனங்கள் சம்பந்தப்பட்ட தவறுகளுக்கு மாத்திரமன்றி, ஏனைய துறைகளுக்கும் சட்டத்தைக் கடுமையாக்க வேண்டும் என்ற யோசனை அமைச்சரவையில் முன்வைக்கப்பட்டது- என்றார். (த)

# தொழில் அமைச்சருக்கே தெரியாமல் சலுகை நீக்கம்

## நாடாளுமன்றில் அவரே கூறினார்

கொழும்பு, நவ. 17

ஊழியர்சேமலாப நிதியிலிருந்து 75 சதவீதத்தை வீட்டுக் கடனாகப் பெறுவதற்கு, ஏற்கெனவே வழங்கப்பட்டிருந்த சலுகையானது, 2017ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டத்தின் ஊடாக நீக்கப்பட்டுள்ளது. அது குறித்து தனக்கு எதுவுமே தெரியாது என்று தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சர் டபிள்யூ.டி.ஜே.செனவிரட்ன நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

நேற்று முன் தினம் இடம்பெற்ற வரவு-செலவுத்திட்டம் மீதான 3ஆவது நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

ஊழியர் சேமலாப நிதியத்தின் அங்கத்தவர்களில், 25 இலட்சம் அங்கத்தவர்களுக்குக் கிடைக்கும் இந்த சலுகை நீக்கப்பட்டது குறித்து நிதியமைச்சு தெளிவுபடுத்த வேண்டும்.

75 சதவீதக் கடன் பெறும் சலுகை நீக்கப்பட்டபோதும், சேமலாப நிதியிலிருந்து வீடுகட்டுவதற்கோ காணியொன்றைக் கொள்வனவு செய்வதற்கோ, வீடொன்றைத் திருத்து வதற்கோ 30 சதவீதம் கடன் பெறும் சலுகையில் மாற்றம் செய்யப்படவில்லை- என்றார். (த)

# தோல்வியுற்றோருக்கு ஏன் தேசியப் பட்டியல்?

## ஜனாதிபதி மைத்திரி விளக்கம்

சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் எனக்கு ஆதரவு வழங்கியவர்கள் மகிந்த ராஜபக்சவினால் அடையாளப்படுத்தப்பட்டு தோல்வியடையச் செய்விக்கப்பட்டனர். இவ்வாறு பாதிக்கப்பட்டவர்களுக்கே தேசியப்பட்டிலில் இடமளித்ததாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

இவ்வாறு நியமிக்கப்பட்டவர்களுக்கு எதிராகப் பல்வேறு விமர் சனங்கள் உள்ளன. எனக்கு நம்பிக்கைக்குரியவர்கள் அரசுக்குள் இருக்க வேண்டும் என்பதற்காகவே இந்தத் தீர்மானத்தை முன்னெடுத்தேன் என ஜனாதிபதி நேற்று முன் தினம் நடைபெற்ற நிகழ்வில் ஒன்றில் கூறினார். (த)

# 280 அரச ஊழியர்கள் மீது ஒழுக்காற்று விசாரணை

கொழும்பு, நவ .17

அரச சேவையாளர்கள் 280 பேருக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணை நடத்தப்படுவதாக அரச சேவைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

நிர்வாக உத்தியோகஸ்தர்கள், வைத்தியர்கள் உள்ளிட்ட அலுவலக பணியாளர்களும் அடங்குவதாக அரச சேவை ஆணைக்குழுவின் செயலாளர் காமினி செனவிரத்ன குறிப்பிட்டார்.

அநேகமாக விசாரணைகள், காலம் கடந்து முன்னெடுக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

கல்வித் துறையில் சேவையாற்றுபவர்களிடையே அதிகமான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டதாகவும், அரச சேவை ஆணைக்குழுவினால் முன்னெடுக்கப்படும் விசாரணைகளை துரிதப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுமணரத்ன தேரரின் அடாவடியை இனியும் பொறுத்திரார் தமிழர்கள்

## வியாழேந்திரன் எம்.பி. சீற்றம்

மட்டக்களப்பு, நவ 17

மட்டக்களப்பு மாவட்டத்தில் நீண்டகாலமாக சமயத் தொண்டு எனும் பெயரில் தமிழ் மக்களுக்கு கேடு விளைவித்து வருகின்றார் ஸ்ரீ மங்களராமய விகாராதிபதி அம்பிட்டிய சுமணரத்ன தேரர். இவர் பிக்கு எனும் போர்வையில் அடாவடித்தனம் செய்து வருகின்றார். இனியும் தமிழ் மக்களாகிய நாம் இதனைப் பொறுக்க மாட்டோம்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக் களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ச.வியா ழேந்திரன் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

உலக மக்களால் கௌரவமாகப் போற்றப்படும் பௌத்த மதத்துக்கும் அதன் மகத்துவத்துக்கும் ஒரு துளிகூடப் பொருத்தமில்லாத மிகக் கேவலமான செயற்பாடுகளிலும், இன நல்லுறவைச் சிதைக்கும் செயற்பாடுகளிலும் குறித்த பிக்கு ஈடுபட்டு வருவதை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இத்தகைய வன்முறையான செயற்பாடுகளால் அரச அதிகாரிகள் கடமைக்குச் செல்ல அஞ்சும் நிலை உருவாகியுள்ளது. அண்மைக் காலத்தில் மட்டக்களப்புமாவட்டத்தில்கிராமசேவையாளர்கள் மீதான தாக்குதல்களைக் கூறலாம்.

களுவாஞ்சிக்குடிப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட கிராமசேவையாளர் ஒருவர் படுகொலை செய்யப்பட்டமை, தொடர்ந்து கிரான் பிரதேச செயலகத்துக்குட்பட்ட பகுதியில் சட்டவிரோத மரக்கடத்தலைத்தடுக்கமுற்பட்ட கிராமசேவையாளரை இராணுவ அதிகாரிகள் தாக்கியமை போன்றவை இதற்கு உதாரணங்களாகும்.

இது ஒருபுறமிருக்க, இந்தப் பிக்குவின் இத்தகைய செயற்பாடுகள் இன்று நேற்று அல்ல பல காலமாகத் திட்டமிட்டுத் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றன. அரச அதிகாரிகளின் கடமைக்கு இடையூறு விளைவித்து அவர்களைத் தாக்குவதும், மிகக் கேவலமான வார்த்தைப் பிரயோகங்களைப் பயன்படுத்தி வசைபாடுவதும் இவரது வழக்கமான செயற்பாடுகளாகிவிட்டன.

சில வருடங்களுக்கு முன்னர் மின்சாரசபை ஊழியர் ஒருவரைத் தாக்கியமை, பெண் பொலிஸ் உத்தியோகத்தரை அவதூறாகப் பேசித் தாக்க முற்பட்டமை, அண்மையில் விமான நிலையத் திறப்பு விழா வுக்கென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மட்டக் களப்புக்கு வருகை தந்தபோது மங்களராமய விகா ரைக்கு வரவில்லை என நினைவுப்படிகத்தையும் உடைத் தெறிந்தமை என இவரின் அடாவடிகளைப் பட்டியலிடலாம். இத்தகைய அடாவடித் தனங்களுக்கு எதிராக எந்த நடவடிக்கையும் இதுவரையில் மேற் கொள்ளப்படவில்லை.

இனியும் தமிழ் மக்களாகிய நாம் மௌனமாக இருக்கமுடியாது. ஆகவே, இந்தச் சம்பவம் தொடர்பாக சம்பந்தப்பட்ட கிராமசேவையாளருடனும், பிரதேச செயலாளருடனும் பேசியுள்ளேன். நாம் என்றுமே மக்களோடு மக்களாக இருப்பவர்கள்.

சம்பவம் தொடர்பில் ஆரம்பத்திலேயே நடவடிக்கைகள் எவையும் மேற்கொள்ளாது வேடிக்கை பார்த் திருந்த பொலிஸ் அதிகாரிகள் தொடர்பாக பொலிஸ் ஆணைக்குழுவுக்கு அறிவித்துள்ளோம். இனியும் இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறாமல் தடுப்ப தற்கு இந்த விடயத்தை உடனடியாக எமது எதிர்க் கட்சித் தலைவர் சம்பந்தன் ஐயாவின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளேன். அதேவேளை, இந்த விடயத்தை ஜனாதிபதி, பிரதமர், பொலிஸ்மா அதிபர் ஆகியோருக்கு எழுத்து மூலமும் அறிவித்துள்ளோம்–என்றார். (த)

# அனைவரும் ஒன்றுபட்டாலே உரிமைகளை அடையலாம்

## வடக்கு அமைச்சர் டெனீஸ்வரன் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம். நவ. 17

பிரதேச வாதங்கள், சமய பேதங்கள், வாள்வெட்டுக்க ளால் எங்கள் கலாசாரங்கள் சீரழிக்கப் படுகின்றன. எங்கள் மக்கள் சின்னாபின்னமாகித் திக்குத் திசை தெரியாது தடுமாறிச் செல்வார்களேயானால் ஏன் எதற்காக இத்தனை உயிர்களையும் விதைத்தோம் என்ற கேள்வி எழும்.

இவ்வாறு வடக்கு மாகாண கிராமிய அபிவித்தி அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் கடந்த திங்கட்கிழமை அரசியல் கைதி விவேகானந்தனூர் சதீசின் விடியலைத் தேடும் இரவுகள் நூல் வெளியீட்டு விழா நடைபெற்றது.

அதில் உரையாற்றும் போதே வடக்கு அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

இழந்த உயிர்களுக்கு அர்த்தம் தேடவேண்டுமால் அதிருந்து மீண்டு வரவேண்டும். நாங்கள் ஒற்றுமைப்படவேண்டும். நாங்கள் பட்ட துன்பங்களை அடுத்த சந்ததிக்கு விட்டுச் செல்லப் போகிறோமா என்பதைச் சற்றுச் சிந்திக்க வேண்டும்.

சமயப் பிரச்சினைகள், தமிழ், முஸ்லிம் பிரச்சினைகள் எதிர்காலத்தில் தலை தூக்கினால் ஒரு அடியேனும் நாங்கள் முன்னோக்கி செல்ல முடியாது.

எங்கள் இனம் அடிப்படை உரிமைகளோடு வாழ வேண்டும். சுதந்திரமாக வாழவேண்டும். எதிர்கால சந்ததிகள் நிம்மதியாக வாழ வேண்டும் என்ற அவர்களுடைய இலக்கை அடைய வேண்டும் என்றால் பல விடயங்களை நாங்கள் கூர்மைப்படுத்த வேண்டும்.

அந்த இலக்கை அடைவதற்கு சில சாணக்கியமான அரசியல் போராட்டங்களில் ஈடுபட நாங்கள் கடமைப்பட்டவர்களாக இருக்கின்றோம். முன்னாள் போராளிகள் பல கஷ்டங்களுடன் வாழ்கின்றனர். அவர்களுக்குப் பல உதவிகளை செய்யவேண்டிய நிலையில் நாம் உள்ளோம்.

தற்போதுள்ள தலைமைத்துவங்கள் சரியான திட்டங்களைத் தீட்டி எமது இலக்கை அடைவதற்கு நாங்கள் அனைவரும் ஒற்றுமைப்படவேண்டும் –என்றார். (ற–21,7)


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

## திருமதி தர்மலக்ஷ்மி சூரியகுமார்



அன்பின் திருவுருவே, பண்பின் சிகரமே
பாசத்தின் உறைவிடமே பத்துமாதம்
சுமந்து பாரினிலே சீருடன் வாழ வழிகாட்டிய அன்னையே
எம்மையெல்லாம் ஆறாத்
துயரினில் ஆழ்த்திவிட்டு சாயீசன்பதமடைந்து
ஆண்டு ஒன்று ஆனதுவோ அம்மா!
நம்ப முடியவில்லையே அம்மா
நீங்கள் பாடும் பஜனைப்பாடல்கள்
எமது செவிகளில் ரீங்காரமிட்டுக்
கொண்டேயிருக்கின்றன அம்மா
ஆண்டு ஒன்று என்ன எத்தனை எத்தனை ஆண்டுகளானாலும்
எம் இதயத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் எம் அன்னைக்கு
எம் இதய அஞ்சலியைச் செலுத்தி
என்றும் உங்கள் நினைவுடனேயிருக்கும்



ந.சூரியகுமார் (கணவர்),
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
உறவினர்கள்.
இல.68, [illegible],
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

பூவுலகில்
24.02.1952

வானுலகில்
29.11.2015

(ஜெ/6078)(11.17.21)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அணிவகுப்பு உயர் சோதனை யாழ். பொலிஸ் நிலையத்தில்

யாழ்ப்பாணம், நவ.17
யாழ்ப்பாணம் தலைமைப் பொலிஸ் நிலையத்துக்குட்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான பொலிஸ் அணிவகுப்பு உயர் பரிசோதனை நேற்று நடைபெற்றது.
யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் யாழ். தலைமைப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜி.எஸ்.கேவாவிதான தலைமையில் உயர் பரிசோதனை நடைபெற்றது. யாழ். மூத்த பொலிஸ் அத்தியட்சகர் ஸ்ரனிஸ்லஸ் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார். பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான பரிசோதனைகள் 6 மாதத்துக்கு ஒரு தடவை தலைமைப் பொலிஸ் நிலையங்களில் நடைபெறும்.
பொலிஸாரின் அனைத்துச் செயற்பாடுகளும் பொலிஸ் அத்தியட்சகரால் பரிசோதனை செய்யப்படும்.
யாழ். தலைமைப் பொலிஸ் நிலையத்தில் உள்ள அனைத்துப் பொலிஸாரின் பதிவேடுகள், சீருடைகள் உள்ளிட்ட இதர பொருள்கள் அனைத்தும் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. (ந-106)

# சிறுவர் உண்ணும் இனிப்பின் காலாவதி திகதியில் மோசடி

## அவதானம் என அறிவுறுத்துகின்றது பாவனையாளர் அதிகார சபை

யாழ்ப்பாணம், நவ.17
குழந்தைகள் உண்ணும் சீரக இனிப்புப் போத்தலில் இரு உற்பத்தித் திகதிகள், காலாவதித் திகதிகள் அச்சிடப்பட்டுள்ளன. அவற்றைக் கொள்வனவு செய்யும் வர்த்தகர்கள், பொதுமக்கள் அவதானத்துடன் இருக்க வேண்டும். இவ்வாறு யாழ்ப்பாண மாவட்ட பாவனையாளர் அதிகார சபை அறிவுறுத்தியுள்ளது.
இவ்வாறான இனிப்புப் போத்தல்களது காலாவதித் திகதி நாளை மறுதினத்துடன் முடிவடைகின்றது என்றும் குறித்த அதிகாரசபைசுட்டிக்காட்டியது.
யாழ்ப்பாணம், குருநகரில் உள்ள கடையொன்றில் உற்பத்தித் திகதி, காலாவதித் திகதி வேறுபட்டுக் காணப்பட்ட சீரக இனிப்புப் பைக்கற்றுக்கள் 14 பாவனையாளர் அதிகார சபையால் நேற்றுமுன்தினம் கைப்பற்றப்பட்டன. அதையடுத்து பாவனையாளர் அதிகார சபை அறிக்கை ஒன்றை வெளியிட்டது. அதிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.
20 போத்தல்கள் கொண்ட பைக்கற்றுக்காக அவை பொதியிடப்பட்டன. பைக்கற்றின் வெளிப்புறத்தில் உள்ள உற்பத்தித் திகதி, காலாவதித் திகதியும், உள்ளிருக்கும் போத்தல்களில் உள்ள உற்பத்தித் திகதியும், காலாவதித் திகதியும் வேறுபட்டுள்ளன.




போத்தல்களில் மிகச் சிறிய எழுத்துக்களில் திகதிகள் குறிப்பிடப்பட்டன. போத்தல்களின் பொதியில் 10 மாதங்களுக்கு அதிகமான காலம் கொண்ட காலாவதித் திகதி குறிப்பிடப்பட்டது.
வர்த்தகர்கள் பொருள்களைக் கொள்வனவு செய்யும்போது வெளிப்புறத்தில் உள்ள காலாவதித் திகதியைப் பார்த்தே கொள்வனவு செய்வார்கள். இவ்வாறான பொருள்களைக் கொள்வனவு செய்யும்போது காலாவதித் திகதியை வர்த்தகர்கள் சரியாக உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். விற்பனை முகவர்களும் அதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.
சிறுவர்கள் உபயோகிக்கும் இனிப்புப் பண்டங்கள் மோசடியான முறையில் விற்பனைக்கு வழங்கப்பட்டிருத்தல், விநியோகித்தல், வழங்கல் போன்றவற்றுக்கு எதிராக இறுக்கமான நடவடிக்கை எடுக்கப்படும் - என்று அறிக்கையில் குறிப்பிடப்பட்டது.
(ந-21,10)

# பெண்கள் பங்களிப்பை அதிகரிக்க ஜேர்மன் உதவி

கொழும்பு, நவ.17
இலங்கை அரசியலில் பெண்களின் பங்களிப்பை அதிகரிக்க ஜேர்மன் தனது ஒத்துழைப்பை வழங்கவுள்ளது.
இவ்வாறு மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பைஸர் முஸ்தபா தெரிவித்தார். அண்மையில் ஜேர்மன் தூதர் ஜான் ரோட்டுடன் அமைச்சர் சந்தித்துக் கலந்துரையாடினார். அதன்பின்னர் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
குறித்த சந்திப்பின்போது அரசியலில் இலங்கைப் பெண்களின் பிரதிநிதித்துவம் எவ்வாறு உள்ளது என்பது தொடர்பில் உரையாடப்பட்டது.
பெண்களின் பிரதிநிதித்துவத்தை முன்னேற்ற தற்போதைய அரசு எடுத்துவரும் நடவடிக்கைகளை வரவேற்கின்றோம் என்று ஜேர்மன் தூதர் தெரிவித்தார்.
பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பது தொடர்பில் ஜேர்மன் அரசு ஊடாக தொழில்நுட்ப உதவியை வழங்க இணக்கம் தெரிவித்தார்.
இது தொடர்பாக எதிர்காலத்தில் சந்திப்புக்களை மேற்கொண்டு கலந்துரையாடப்படும்- என்றும் அமைச்சர் தெரிவித்தார். (ந-8)

# இறைச்சி விற்பனை நிலைய கேள்வித் தொகை அதிகரிப்பு

## இறைச்சியின் விலையும் அதிகரிக்கும் என மன்னார் நகர மக்கள் விசனம்

மன்னார், நவ.17
மன்னார் நகர சபைக்குட்பட்ட பகுதிகளில் இறைச்சி விற்பனை நிலையங்களுக்கான கேள்வித் தொகை அதிகரிக்கப்பட்டது என்று விசனம் தெரிவிக்கப்பட்டது.
மன்னார் பட்டின மாட்டிறைச்சி விற்பனை நிலையத்துக்கான 2017 ஆம் ஆண்டுக்கான சபையின் குறைந்த கேள்வித் தொகையாக 15 இலட்சத்து 97 ஆயிரத்து 200 ரூபா குறிப்பிடப்பட்டது.
பட்டின ஆட்டிறைச்சி விற்பனை நிலையத்துக்கு சபையின் குறைந்த கேள்வித்தொகையாக 3 இலட்சம் ரூபாவும், பள்ளிமுனை மாட்டிறைச்சி விற்பனை நிலையத்துக்கான குறைந்த கேள்வித் தொகையாக 3 இலட்சத்து 44 ஆயிரத்து 850 ரூபாவும், பெரியகமம் மாட்டிறைச்சி விற்பனை நிலையத்துக்கானகுறைந்த கேள்வித் தொகையாக 3 இலட்சத்து 13 ஆயிரத்து 500 ரூபாவும், மன்னார் நகர சபையால் அறிவிக்கப்பட்டது.
கேள்வித் தொகை அதிகரிப்பால் நுகர்வோர் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படும். ஒப்பந்த தொகை அதிகரித்துள்ளதால் விற்பனை நிலையத்தை நடத்துவோர் மாட்டிறைச்சியை அதி கூடிய விலைக்கும் விற்பனை செய்யும் நிலை ஏற்படும் - என்று மக்கள் தெரிவித்தனர்.
நகர சபையுடைய நடமுறைக்கு அமைவாகவே கேள்வி அறிவிக்கப்பட்டது. ஒருவருடம் 10 ஆயிரம் ரூபாவுக்கு கேள்வி கோரப்பட்டால் அடுத்த வருடம் 10 வீதத்தால் அது அதிகரிக்கப்பட வேண்டும் என்பது நடைமுறை. அதன் படியே இந்த கேள்வி அறிவிக்கப்பட்டது - என்று மன்னார் நகர சபையின் செயலாளர் விளக்கமளித்தார். (ந-21,56)

# கலை இலக்கிய விழாவும் பரிசளிப்பும்

வவுனியா, நவ.17
வவுனியா மாவட்ட தேசிய இலக்கிய கலை விழாவும், பரிசளிப்பு விழாவும் நேற்றுமுன்தினம் வவுனியா பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. பிரதேச செயலாளர் கா. உதயராஜா தலைமையில், பிரதேச கலாசார உத்தியோகத்தர் வீ.பிரதீபன் ஒழுங்கமைப்பில் நடைபெற்ற விழாவில் கலை, இலக்கியப் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்களும், பரிசில்களும் வழங்கப்பட்டன. கலை நிகழ்வுகளும் நடைபெற்றன. (ந-21)

சூப்பர் வட்டி
மூத்த பிரஜைகளுக்கு 60 மாத நிலையான வைப்பின் முதிர்வில்
17%
வ.வ.வி
ஓரியன்ட் நிலையான வைப்புகளுக்கு
13.09%
வ.செ.வி

| | மூத்த பிரஜைகளுக்கான வட்டி விகிதம் (வ.வ.வி) | | | |
|---|---|---|---|---|
| காலம் | மாதாந்தம் | வ.வ.வி | முதிர்வில் | வ.வ.வி |
| 3 மாதங்கள் | - | - | 13.50 | 14.20 |
| 6 மாதங்கள் | 12.00 | 12.68 | 14.00 | 14.42 |
| 1 வருடம் | 13.00 | 13.80 | 14.50 | 14.50 |
| 15 மாதங்கள் | 13.50 | 14.27 | 15.00 | 14.74 |
| 18 மாதங்கள் | 13.50 | 14.37 | 15.00 | 14.49 |
| 2 வருடங்கள் | 14.00 | 14.53 | 15.00 | 14.02 |
| 3 வருடங்கள் | 14.50 | 15.50 | 15.50 | 13.57 |
| 4 வருடங்கள் | 15.50 | 16.65 | 16.50 | 13.51 |
| 5 வருடங்கள் | 16.50 | 17.81 | 17.00 | 13.09 |

மேலதிக தகவல்களுக்கு அழையுங்கள்
பிரவீன் 0768 330 255

பிராந்திய முகாமையாளர்கள்
மேல், மத்திய மாகாணங்கள் - தஹமி 0772 093 993
தென் மாகாணம் - டெரன்ஸ் 0772 178 979
வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் - பிரவீன் 0768 330 255
சப்பிரகமுவ மற்றும் ஊவா மாகணங்கள் - எரந்த 0772 612 113

35 Years
ஓரியண்ட் பினான்ஸ் பிஎல்சி
(ஓரியண்ட் பினான்ஸ் பிரதான காரியாலயம்)
இல. 18, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.
தொ.பே: 117 577 685 பெக்ஸ்: 0117 577 678
ICRA Rating: BB+ (Stable)
Orient Finance

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# மீண்டும் 80களுக்குத் திரும்பிச் செல்கிறோம்

**பொ**லிஸாரால் அடையாளம் காணப்பட்டு, வெளி உலகுக்குக் காட்டப்பட்ட இளைஞர் குழு ஆவா. நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் இரு அமைச்சர்கள் இந்தக் குழு தொடர்பில் கருத்துத் தெரிவித்தார்கள். இருவரும் பாதுகாப்புத் தொடர்பான அமைச்சர்கள். ஒருவர் சட்டம் ஒழுங்கு அமைச்சர் சாகல ரட்ணாயக்க. மற்றையவர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தன.

ஆவா குழு ஒரு பயங்கரவாதக் குழு இல்லை என்றபோதிலும், அதில் இருந்தவர்கள் பல்வேறு குற்றச்செயல்களில் ஈடுபட்டவர்கள் என்று அமைச்சர் சாகல கூறினார். இதற்கு முன்னரும் இந்தக் குழு பற்றி அமைச்சர்களும், கூட்டு எதிரணியினரும் கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். இந்தக் குழு இராணுவப் புலனாய்வாளர்களால் உருவாக்கப்பட்டது என்று அமைச்சர் ராஜித கூறியிருந்தார். இது விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முன்னாள் உறுப்பினர்களால் உருவாக்கப்பட்டு நடத்தப்பட்டதாக கூட்டு எதிரணியினர் கூறியிருந்தனர்.

இப்போது அமைச்சர்கள் இருவரும் ஆவா குழு இராணுவத்தால் வழிநடத்தப்பட்ட ஒரு குழு அல்ல என்பதை நாடாளுமன்றில் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், அண்மையில் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்ட சிலரில் இராணுவத்தை விட்டுத் தப்பியோடிய ஒருவரும் உள்ளடங்கியுள்ளதால் இந்தக் குழுவிற்கும் இராணுவ அலுவலர்களுக்கும் ஏதாவது தொடர்புகள் இருக்கின்றனவா என்பதை விசாரித்து வருவதாகவும் இராஜாங்க அமைச்சர் ருவான் தெரிவித்தார்.

இந்தக் குழுவினர் கப்பம் பெற்றனர், குற்றங்களில் ஈடுபட்டனர் என்றும் அமைச்சர் சாகல நாடாளுமன்றத்தில் கூறினார். இணுவிலில் இரு இளைஞர் குழுக்களுக்கு இடையே ஏற்பட்ட மோதலைத் தொடர்ந்துதான் ஆவா குழு என்ற ஒன்று இயங்க ஆரம்பித்தது என்பதையும் அவர் சொல்லியிருக்கிறார்.

அவர் சொல்லியதுபோன்றே, அறச் சீற்றங்கொண்ட சில இளைஞர்கள், சில ஒழுக்கக்கேடானவர்களைத் தட்டிக் கேட்க முற்பட்டதில் இருந்துதான் இந்தப் பிரச்சினைகள் உருவாகின. சட்டத்தை எவர் தமது கையில் எடுத்துக் கொண்டாலும் அது தவறுதான். அதில் மாற்றுக் கருத்து ஏதுமில்லை. ஆனால், குற்றங்கள் நடைபெறும்போது அது குறித்துப் பாராமுகமாக - அசண்டையீனத்துடன் - நடந்துகொள்ளும் பொலிஸாரை நாம் கொண்டிருக்கையில், சீற்றம் கொண்ட இளைஞர்கள் சட்டத்தை கையில் எடுப்பது எங்கும் நடந்து வருவதேதான்.

அதற்காக அந்த இளைஞர் குழுவினரை இலக்கு வைத்து, அவர்களை ஒரு குற்றக் கும்பலாக உருவகித்து, பரப்புரை செய்தது பொலிஸாரின் குற்றம். உண்மையான குற்றவாளிகளை எல்லாம் விட்டுவிட்டு அல்லது அவர்களுடன் சேர்ந்து செயற்பட்டுக்கொண்டு, அப்பாவி இளைஞர்களைப் பிடித்து அவர்களின் மேல் அபாண்டமான பழிகளைச் சுமத்தி அவர்களைக் குற்றக் கும்பலாக உருவகித்தது பொலிஸார் செய்த வேலை.

இதுதான் 1980களிலும் நடந்தது. தரப்படுத்தலாலும், தொடர் இனச் சுத்திகரிப்பாலும் பாதிக்கப்பட்டு அறச் சீற்றம் கொண்டிருந்த தமிழ் இளைஞர்கள் சில வன்முறை வழிகளை நாடியபோது, அவர்களைப் பயங்கரவாதிகளாக உருவகித்து, மோசமான அடக்குமுறையையும் அரச பயங்கரவாதத்தையும் ஏவிவிட்டதுதான், இலங்கையில் ஆயுதப் போராட்டம் முனைப்புப்பெறக் காரணமாகியது. இலங்கை நரகவேதனையை அனுபவிக்க வேண்டி வந்தது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் அடிக்கடி கூறியதைப் போன்று, எதிரி எங்களைப் போராட நிர்ப்பந்தித்தான் என்பதுதான் நடந்தது. இப்போது நடப்பவற்றைப் பார்க்கும்போதும் அதே 80களின் வரலாறு மீளத் திரும்புகின்றது போன்றே தெரிகின்றது.

அறச் சீற்றங்கொண்ட அப்பாவி இளைஞர்களைப் பிடித்து, அவர்கள் மீது நிரூபிக்க முடியாத குற்றங்களைச் சுமத்தி, அவர்களைக் குற்றக் கும்பலாக அறிவித்ததுடன், அவர்களில் சிலர் புலிகள் இயக்கத்தை மீளுருவாக்கம் செய்ய முயன்றார்கள் என்றுகூறி அவர்களைப் பயங்கரவாதிகளாகவும் சித்தரிக்கும் கைங்கரியங்களே நடக்கின்றன. அப்படிக் கைது செய்யப்பட்டவர்கள் மிக மோசமாக வதைக்கப்படவும் செய்கிறார்கள்.

அரச இயந்திரத்தின் ஆதிக்க அடிப்படைகளான படைகளின் போக்கில் போருக்குப் பின்னரும் எந்த மாற்றமும் இல்லை என்பதையே இவை உணர்த்துகின்றன. அவை ஒரே நேர்கோட்டிலேயே எப்போதும் பயணிக்கின்றன. இதை உணர்ந்து திருந்தாதவரைக்கும், இலங்கையில் இனப் பூசலுக்குத் தீர்வு சாத்தியமாகப் போவதில்லை.

# மத்திய வங்கி விவகாரம்; நடந்தது என்ன?

## மூடி மறைக்கப்படும் மகிந்தவின் ஊழல்; அவரை ஆட்சிபீடமேற்ற துடிக்கும் சிங்கள ஊடகங்கள்;

எம்.ஐ.முபாறக்

இலங்கையின் வரலாற்றில் ஊழல், மோசடியற்ற ஆட்சியைக் காண்பதென்பது அரிதுதான். ஆட்சியாளர்களுக்கு ஏற்ப ஊழல்,மோசடிகளின் அளவுகளில் வித்தியாசம் இருக்குமே தவிர, ஊழல்,மோசடிகள் அறவே இல்லாத ஒரு நிலைமை இருக்கவே இருக்காது.

இலங்கையின் வரலாற்றில் அதிக ஊழல்கள் நிறைந்த அரசாக மகிந்தவின் அரசைத்தான் சொல்ல முடியும். அதன் காரணமாகவே அவரது ஆட்சி கவிழ நேர்ந்தது. ஊழலை ஒழிக்கப் போவதாகக் கூறிக்கொண்டு ஆட்சியைக் கைப்பற்றிய நல்லாட்சியும் அதற்கு விதிவிலக்கல்ல என்பது அது ஆட்சிபீடமேறி ஒரு மாதத்துக்குள் நிரூபிக்கப்பட்டுவிட்டது. இன்று இந்த ஆட்சிக்குத் தலையிடியாக இருந்து வருவது மத்திய வங்கி பிணைமுறி வழங்கலில் இடம்பெற்ற ஊழலாகும்.அந்த விடயம் அரசுக்குப் பெரும் நெருக்குதலை–அவப்பெயரை ஈட்டிக் கொடுத்துள்ளது.

### பிணைமுறி என்றால் என்ன?

அரசுக்கு நிதித் தேவை ஏற்படும்போது, மத்திய வங்கி அரசின் தரகராக இருந்து, மக்களிடம் இருந்து கடன் வாங்கி அதை அரசுக்கு வழங்கும் ஒரு முறைமைதான் இந்த "பிணைமுறி வழங்கல்" என்ற முறைமை.

மத்திய வங்கியில் பதிவு செய்யப்பட்டுள்ள 16 நிதி நிறுவனங்களிடம் இருந்தே மத்திய வங்கி அந்தக் கடனைப் பெற்றுக் கொள்ளும்.மக்கள் இந்த Primary Dealers ஊடாகவே மத்திய வங்கியிடம் பிணைமுறியைப் பெற்று, மத்திய வங்கிக்கு கடனைக் கொடுக்க முடியும். நூறு ரூபா துண்டுகளாக இந்தப் பிணை முறி விநியோகிக்கப்படும்.வட்டி விகிதத்துக்கு ஏற்ப பிணை முறிகளைப் பெற்றுக்கொள்ளும் மக்கள், இலாபத்தைஅடைவர்.இன்னும் எளிமையாகச் சொல்லப்போனால், மத்தியவங்கிக்கு அல்லது அரசுக்கு மக்கள் வட்டிக்குப் பணம் கொடுப்பதே பிணைமுறிவிநியோகமாகும்.

### மகிந்த போட்ட வீதிகளுக்காக....

தற்போது சர்ச்சையில் சிக்கியுள்ள பிணைமுறி எதற்காக வழங்கப்பட்டது என்பதை மக்கள் அறிந்து வைத்துக்கொள்ள வேண்டும். மகிந்த ஆட்சியில் வீதி அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொண்ட ஒப்பந்தக்காரர்களுக்கு முழுப்பணத்தையும் செலுத்தாமலேயே ஆட்சியில் இருந்து வெளியேறினார் மகிந்த. அந்த ஒப்பந்தக்காரர்கள் புதிய ஆட்சியாளர்களை நெருக்கத் தொடங்கினர். அவர்களுக்கு வழங்குவதற்கு 1350 கோடி ரூபா தேவைபட்டது. மத்திய வங்கி பிணைமுறி விநியோகத்தின் ஊடாக அந்த நிதியைத் திரட்டுவதற்கு அரசு தீர்மானித்தது.

நிதி அமைச்சர் ரவி கருணாநாயக,நிதி அமைச்சின் செயலாளர்,மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன், நெடுஞ்சாலைகள் அமைச்சர் கபீர் காசீம் மற்றும் பிரதமர் ரணில் விக்ரமசிங்க சார்பில் மாலிக் சமரவிக்ரம ஆகியோர் இது தொடர்பில் 2015 பெப்ரவரி மாதம் 25 ஆம் திகதிநிதி அமைச்சில் கூடி, எடுக்கப்பட்ட தீர்மானமே பிணை முறி விநியோகத் தீர்மானம்.

### மோசடி இடம்பெற்றது இப்படித்தான்

மத்திய வங்கிக்கு கடன் வழங்க அதிகாரம் பெற்ற 16 நிதி நிறுவனங்களுள் மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரனின் மருமகன் அர்ஜுன் ஆலோசியஸின் Perpetual Treasuries என்ற நிறுவனமும் ஒன்றாகும்.

1000 கோடி ரூபாவைத் திரட்டும் அந்த ரகசியத் திட்டத்தை மகேந்திரன், அவரது மருமகனுக்கு மாத்திரம் கூறிவைத்தார்.அதற்கு ஏற்ப 90 வீதத்துக்கும் அதிகமான பிணைமுறிகளை பெறுவதற்கு அவரது மருமகன் தயாரானார்.

ஏலத்துக்கான அந்த நாளான 2015 பெப்ரவரி 27ஆம் திகதி ஏல நேரத்தில் சூழ்ச்சி மேற்கொண்டு ஏனைய நிறுவனங்களை ஏமாற்றி ஏனைய பிணைமுறிகள் அனைத்தையும் Perpetual Treasuries நிறுவனம் வாங்கிக்கொண்டது.

தான் கொள்வனவு செய்த 90 வீதமான பிணைமுறிகளை அந்த நிறுவனம் மறுநாளே பெரும் இலாபத்துக்கு ஊழியர் சேமலாப நிதியத்துக்கு விற்று இலாபம் ஈட்டிக் கொண்டது.

இதனால் ஒவ்வொரு பிணைமுறியிலும் அந்த நிறுவனத்துக்கு 20 ரூபா இலாபம் கிடைத்ததோடு மத்திய வங்கி ஒவ்வொரு பிணைமுறியிலும் 10 ரூபா நட்டத்தை எதிர்கொண்டது.

இந்தப் பெரிய தொகையை வாங்குவதற்காக மத்திய வங்கி 660 கோடி ரூபாவையும், இலங்கை வங்கி 250 கோடி ரூபாவையும் குறித்த நிறுவனத்துக்கு வழங்கியிருந்தன. இலங்கை வங்கி, கடன் வழங்கலில் பின்பற்றப்படும் எந்த நடைமுறைகளையும் பின் பற்றாது 250 கோடி ரூபாவைக் கடனாக வழங்கியது.

இத்தனைக்கும் இலங்கை வங்கியும் மத்திய வங்கிக்கு கடன் வழங்கும் பிரதான 16 நிறுவனங்களுள் ஒன்றாகும்.

அதுமாத்திரமன்றி,மத்திய வங்கியிடம் இருந்தே 660 கோடி ரூபா கடன் பெற்று மத்திய வங்கி யின் பிணைமுறியை வாங்கும் அளவுக்கு அர்ஜுன மகேந்திரன் தனது பதவியை மருமகனுக்காக துஷ்பிரயோகம் செய்துள்ளார் என்பதும் இங்கு தெளிவாகின்றது.

### காய் நகர்த்திய மஹிந்த அணி

மஹிந்தவின் ஆட்சியில் இடம்பெற்ற மோசடிகள் அப்போது அம்பலப்படுத்தப்பட்டுக் கொண்டிருந்த வேளையில்தான் இந்த மோசடி விவகாரம் அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. பாதிக்கப்பட்ட ஏனைய நிறுவனங்களே அவர்களுக்கு இதை வழங்கியிருந்தன. இந்த மோசடி தொடர்பில் ஜீ.எல். பீரிஸ் விரிவான அறிக்கை ஒன்றைத் தயார் செய்து உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி உள்ளிட்ட பல முக்கிய நிதி நிறுவனங்களுக்கு அனுப்பி வைத்தார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



> இலங்கையின் வரலாற்றில் அதிக ஊழல்கள் நிறைந்த அரசாக மகிந்தவின் அரசைத்தான் சொல்ல முடியும். அதன் காரணமாகவே அவரது ஆட்சி கவிழ நேர்ந்தது. ஊழலை ஒழிக்கப் போவதாகக் கூறிக் கொண்டு ஆட்சியைக் கைப்பற்றிய நல்லாட்சியும் அதற்கு விதிவிலக்கல்ல என்பது அது ஆட்சிபீடமேறி ஒரு மாதத்துக்குள் நிரூபிக்கப்பட்டுவிட்டது.

அந்த அறிக்கையின் அடிப்படையில், பன்னாட்டு முதலீட்டார்கள் மத்தியில் ஒரு பதட்டம் ஏற்பட்டது. மத்திய வங்கியில் முதலீடு செய்யப்பட்டிருந்த சுமார் 200 கோடி ரூபா முதலீட்டை அவர்கள் மீளப் பெற்றுக்கொண்டனர்.
எல்லாவற்றுக்கும் மேலாக இந்த மோசடியால் மத்திய வங்கிக்கு 160 கோடி ரூபா ஒரு நாள் நட்டமாக ஏற்பட்டுள்ளது. அதேவேளை Perpetual Treasuries நிறுவனம் 512 கோடி ரூபாவை இலாபமாகப் பெற்றது. இந்த விவகாரம் தொடர்பாக பிரதமரால் நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுவின் அறிக்கையை அடுத்து இந்த வருடம் மே மாதம் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி தலைமையிலான நாடாளுமன்ற கோப் குழு விசாரணை நடத்தி பல உண்மைகளை வெளியே கொண்டு வந்துள்ளது.

**மோசடிக்காக ஆளுநர் கையாண்ட நுட்பம்**
மத்திய வங்கி ஆளுநர் நிதிச்சபையின் அதிகாரத்தைத் தாம் பயன்படுத்தினால் தனது மருமகனின் நிறுவனம் இலாபத்தைப் பெறாது என்பதை அறிந்திருந்ததால் நூறு வீதம் ஏல முறைமை மூலம், சட்டரீதியாகவே ஊழலைப் புரிவதற்கு முடிவெடுத்தார்.

**600 கோடி தவிர்ப்பு**
மத்திய வங்கிக்கு கடன் கொடுக்கும் 16 நிறுவனங்களுள் ஊழியர் சேமலாப நிதியமும் ஒன்று. அந்த நிதியத்திடம் 600 கோடி ரூபா நிதி உண்டு. ஆனால், தந்திர மாக அந்த நிறுவனம் இந்தக் கொடுக்கல் வாங்கலுக்குள் உள்வாங்கப்படவில்லை.
மொத்தத்தில் தனது மருமகனின் நிறுவனம் இலாபம் ஈட் டும் வகையில் அர்ஜுன் மகேந்திரன் காய் நகர்த்தி இருக்கின்றார் என்பது இதன்மூலம் தெளிவாகின்றது. இதன் விளைவாக Perpetual Treasuries நிறுவனம் 512 கோடி ரூபாவை அநியாய இலாபமாக ஈட்டியுள்ளது.

**ஆளுநரைக் காப்பாற்றுவதற்கு முயற்சிக்கும் பிரதமர்**
2015 ஜனவரியில் ஆட்சி மாற்றத்தைத் தொடர்ந்து அர்ஜுன் மகேந்திரன் மத்திய வங்கியின் ஆளுநராக பிரதமரால் நியமிக்கப்பட்டார். அமைச்சர்கள் ராஜித சேனாரத்னவும் சம்பிக்க ரணவக்கவும் அந்த நியமனத்தை எதிர்த்த போதிலும், பிரதமர் ரணில், மகேந்திரனை அந்தப் பதவிக்கு நியமித்தார்.
பிணைமுறி ஊழல் விவகாரம் பெரிதாக வெடித்த பிறகும்கூட, பிரதமர் அவரைப் பதவி விலக்க விரும்பவில்லை. அவரது பதவிக் காலத்தை மேலும் நீடிப்பதற்கே முயற்சித்தார். ஆனால், ஜனாதிபதி அதற்கு இடங்கொடுக்கவில்லை. இந்த மோசடி தொடர்பிலான கோப் குழுவின் இறுதி அறிக்கை தயாரிக்கப்பட்டபோதும், ஐக்கிய தேசியக் கட்சி மகேந்திரனைப் பாதுகாப்பதற்கே முயற்சிகளை மேற்கொண்டது.
ஒருவாறு கோப் குழுவின் அறிக்கை நாடாளுமன்றத்துக்கு கொண்டு வரப்பட்டு இன்று அது நாட்டு மக்களின் பேசு பொருளாக மாறிவிட்டது. தினமும் தொடர்ச்சியாக இது ஊடகங்களில் விவாதத்துக்கு விடப்படுகின்றது.
ஐக்கிய தேசிய கட்சியினர் இந்த அறிக்கையை ஒருபுறம் ஆதரித்துக்கொண்டு, மறுபுறம் மகேந்திரனைக் காப்பாற்றுவதற்கு மறைமுகமாக முயற்சி செய்வதை அவதானிக்கலாம்.

**மகிந்த ஆட்சியில் மத்திய வங்கி ஊழல்**
மகிந்த ஆட்சியில் இடம்பெற்ற ஊழல்களை எடுத்துப் பார்த்தால் இப்போதைய ஊழல் ஒரு சின்ன விடயம் தான். பிணைமுறி வழங்கலின்போது மத்திய வங்கிக்கு. 2012 ஆம் ஆண்டு 2420 கோடி ரூபாவும், 2013 ஆம் ஆண்டு 3230 கோடி ரூபாவும் 2015 ஆம் ஆண்டு 1960 கோடி ரூபாவும், நட்டம் ஏற்பட்டுள்ளது. இந்த மூன்று வருடங்களில் மாத்திரம் 7610 கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது.
இந்த ஆட்சியில் ஏற்பட்டுள்ள 160 கோடி ரூபா நட்டத்துக்கும் மஹிந்த ஆட்சியில் ஏற்பட்ட 7610 கோடி ரூபா நடத்துக்கும் இடையில் உள்ள பெரிய வித்தியாசத்தை உணரலாம்.

**வெளிநாடுகளில் கட்டடங்கள் கொள்வனவு**
மத்திய வங்கி அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் கட்டடம் ஒன்றைக் கொள்வனவு செய்தது. அதன்போது 75 கோடி ரூபா மோசடி செய்யப்பட்டது. பிரேசிலில் மற்றுமொரு கட்டடம் கொள்வனவு செய்யப்பட்டபோது அதில் 12.2 கோடி ரூபா மோசடி செய்யப்பட்டது.

**மகிந்தவை ஆட்சியில் அமர்த்துவதற்கு விரும்பும் சிங்கள ஊடகங்கள்**
மகிந்தவின் 10 வருட ஆட்சியில் மத்திய வங்கியில் இடம்பெற்ற மோசடிகளை மேலேகுறிப்பிட்டுள்ளவாறு அடுக்கிக்கொண்டே போகலாம். மத்திய வங்கிக்கு வெளியே சிறிலங்கன் எயார் லைன்ஸ், எவன் கார்ட், அரச மருந்தாக்கக் கூட்டுத்தாபனம் உள்ளிட்ட பல்வேறு நிறுவனங்களில் கோடிக்கணக்கான ரூபா நிதி மோசடி செய்யப்பட்டுள்ளது.
இப்போது நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள கோப் குழுவின் அறிக்கையில் 19 நிறுவனங்களில் 33 ஆயிரம் கோடி ரூபா ஊழல் செய்யப்பட்டுள்ளது என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.
அந்த 19 நிறுவனங்களுள் ஒன்றுதான் மத்திய வங்கி. ஆனால், இந்த மிகப் பெரிய தொகை மோசடி செய்யப்பட்டதை மூடி மறைத்துவிட்டு, மத்திய வங்கிக்கு ஏற்பட்டுள்ள 160 கோடி ரூபா இழப்பை மாத்திரம் மகிந்த அணியும் சிங்கள ஊடகங்களும் தூக்கிப் பிடிப்பது ஏன்?
மத்திய வங்கி மோசடி தவிர ஏனைய 18 நிறுவனங்களில் இடம்பெற்ற மோசடிகள் மகிந்த ஆட்சியில் இடம்பெற்றவை என்பதுதான் அதற்குக் காரணம். அந்த மோசடிகள் வெளிவராமல் தடுப்பதற்காகவே மகிந்த அணியும், சிங்கள ஊடகங்களும் இவ்வாறு மத்திய வங்கி விவகாரத்தைத் தூக்கிப் பிடிக்கின்றன.
சிங்கள ஊடகங்கள் மகிந்தவை ஆட்சிபீடம் ஏற்றுவதற்கு மிகவும் திட்டமிட்ட அடிப்படையில் செயற்படுகின்றன என்பதை இதன்மூலம் எம்மால் விளங்கிக் கொள்ளமுடிகின்றது.
ஊழல்கள் எந்த ஆட்சியில் இடம்பெற்றாலும் அவற்றுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்; குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் என்பதுதான் இந்த நாட்டு மக்களின் நிலைப்பாடாகும்.

## தமிழ் ஊடகவியலாளருக்கும் நல்லாட்சி அரசா?

மைத்திரி – ரணில் கூட்டு அரசு இரண்டு வருட பதவிக் காலத்தைப் பூர்த்தி செய்யும் நிலையில் உள்ளது. இந்த அரசை சிங்கள ஊடகவியலாளர்களும், மேற்குலகமும் நல்லாட்சி அரசு எனப் புகழ்ந்து, அதன் ஆயுளை நீடிக்க வேண்டுகின்றனர். நல்லாட்சி என்பதை அவர்களின் நலன் சார்கோணத்திலேயே சிந்திக்கின்றனர். தென்னிலங்கை மக்களைப் பொறுத்தவரை முன்னைய ஆட்சியாளரின் அச்சுறுத்தல்கள், ஊடக அடக்கு முறைகள், சீனச் சார்புக் கொள்கை என்பவை தற்போதைய ஆட்சியில் மாற்றம் பெற்றுள்ளதால், அவர்களுக்கும் மேற்குலகுக்கும் இன்றைய அரசு நல்லாட்சி அரசாகத் தென்படக் கூடும். ஆனால் இழப்புக்களை மட்டுமே சந்தித்த தமிழ் மக்களின் நிலைமை என்ன? வேறு வழியின்றி தற்போதைய அரசின் வெற்றியைத் தேர்தலில் தமிழ் மக் களும் தீரமானித்து இருப்பது உண்மைதான்.
எனினும் நிகழ்ந்தது என்ன? போர்க்குற்றங்களுக்கு நியாயம் கிடைத்ததா? தமிழ் மண்ணிலிருந்து இராணுவம் குறைக்கப்பட்டதா? தமிழ் அரசியல் கைதிகளுக்கு விடுதலை கிடைத்ததா? திட்டமிட்ட சிங்களக்குடியேற்றங்கள் குறைக்கப்பட்டனவா? கொலைகள், கொள்ளைகள் இன்றி நிம்மதியாக வாழவாவது வழி கிடைத்ததா? இனப்பிரச்சினைக்கான தீர்வுத்திட்டமாவது முன்வைக்கப்பட்டதா? உண்மையிலே தமிழர்களை வெளியுலகம் மறந்துவிடக்காரணமானதும் இந்த அரசுதான். ஒருபுறம் போதைப் பொருள்கள் பற்றிய போதனை, மறுபுறம் அவற்றின் திட்டமிட்ட குவிப்புகள், குற்றவாளிகளை உருவாக்கும் கடின முயற்சியில் தமிழ்ப் பிரதேசங்களில் படையினர், தமிழ் ஊடகவியலாளர்கள் இன்னமும் நல்லாட்சி அரசு என முத்திரை குத்தும்போது நெஞ்சு கொதிக்கிறது. நல்லாட்சி அரசு எவற்றைச் செய்தது என்றே இன்னமும் கேள்விகளை எழுப்புகின்றனர். இந்த அரசு சிங்கள ஊடகவியலாளர்களுக்கு நல்லாட்சி அரசாக இருக்கட்டும். தமிழ் ஊடகவியலாளருக்கு மைத்திரி – ரணில் கூட்டு அரசாகவே இருக்கட்டும். அப்பொழுது தான் தமிழ் மக்களுக்கு சுய விழிப்புணர்வு ஆவது கிடைக்கும்.

துருவாசன், உரும்பிராய்.

## ஊரோடு ஒத்து ஓடல் சிறப்பு

எவர் தான் தலைகீழாக நின்றாலும் நாங்கள் எமது வசதி வாய்ப்புக்கள் குறித்தே அதீக கவனம் செலுத்துவோம்; மற்றைய எவர் குறித்து நாம் கவலைப்படப் போவதில்லை என்று முரண்டு பிடிக்கும் ஒரு தரப்பினர் எமது சமூகத்தில் எப்போதுமே இருக்கின்றனர்.
பருவமழை இம்முறை உரிய நேரத்தில் ஆரம்பிக்காததால், தமது நெற்பயிர்ச் செய்கை குறித்து கடும் விசனத்தில் ஆழ்ந்திருந்த யாழ். மாவட்ட விவசாயிகள், கடந்த சில நாள்களாகப் பெய்யும் மழை காரணமாக தமது விவசாய முயற்சிகளில் ஆர்வத்துடன் ஈடுபடத் தொடங்கியுள்ளனர்.
ஆயினும், அவர்கள் பல்வேறு சிரமங்களின் மத்தியில் மேற்கொண்ட நெல்விதைப்பு, முளைவிட்டு பயிராக விடமாட்டோம் என்ற ரீதியில், எமது பகுதி கால்நடை வளர்ப்பாளர்கள் தமது சொந்தக் கால்நடைகளைக் கட்டி வைத்துக் கட்டுப்படுத்தாது, தற்போதும் கட்டாக்காலிகளாக நெல்விதைப்பு மேற்கொண்ட வயல்களில் உலவ அனுமதிப்பதால், நெற்செய்கையாளர்கள் பெரும் பாதிப்புக்களை எதிர்நோக்க நேர்ந்துள்ளதாகப் பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன.
உண்மையில் எம்மவர்கள் மனச்சாட்சியுள்ளவர்களென்றால், தாம் விவசாய முயற்சிகளில் ஈடுபடாவிட்டாலும், பல்வேறு சிரமங்களின் மத்தியில் பயிர்ச்செய்கை முயற்சிகளில் ஈடுபடுவோரது விவசாய முயற்சிகளுக்குப் பாதிப்பை ஏற்படுத்தாத விதத்தில் நடந்து கொண்டாக வேண்டும். அந்தவகையில், இன்றைய நாள்களின் மிக முக்கிய தேவை, தத்தமது கால்நடைகளை வீடுகளில் கட்டி வளர்ப்பதன் மூலம் நெற்செய்கையாளர்களுக்கு உதவுவதாகும். அவ்விதம் செயற்பட முன்வருவோமா?

ப.உருத்திரன், நாவற்குழி.

வாசகர் திருமுகம் பகுதிக்க எழுதுபவர்கள் தமது பெயர், முகவரி, தொடர்பு எண் என்பவற்றை நிச்சயம் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். சொந்தப் பெயரை வெளியிட விரும்பாதவர்கள் அது பற்றிக் குறிப்பிட்டு, புனை பெயரையும் எழுதி அனுப்பலாம். ஆனால் உண்மையான விவரங்கள் குறிப்பிடப்படாத வாசகர் திருமுகங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா. எழுதியவர்களின் விவரங்கள் குறித்த இரகசியங்கள் தேவைப்படும் பட்சத்தில் காக்கப்படும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆதரவு தருவார் ட்ரம்ப் அல் அசாத் நம்பிக்கை

வொசிங்ரன், நவ. 17
சிரியாவில் நிலைகொண்டிருக்கும் ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்புக்கு எதிராகவும், அரசுக்கு எதிரான ஆயுதக் குழுக்களுக்கு எதிராகவும் சிரிய அரசால் முன்னெடுக்கப்பட்டுவரும் போரில் தமக்கு ட்ரம்ப் நிச்சயம் ஆதரவு தருவார் என்று சிரிய ஜனாதிபதி அல் அசாத் நம்பிக்கை வெளியிட்டார்.




ஈராக், சிரியாவின் சில பகுதிகளைக் கைப்பற்றி அவற்றை ஒரு தனிநாடாக அறிவித்துள்ள ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு, சிரிய அரசுக்கு எதிரான ஏகப்பட்ட ஆயுதக் குழுக்கள் என இரு முனைப் போரில் சிரிய அரசு சிக்கித் தவிக்கிறது. ரஷ்யா, அமெரிக்கா போன்ற உலக வல்லரசுக்களின் உதவியுடன் சிரியா தனக்கெதிரான ஆயுதக் குழுக்களை ஓரளவு சமாளிக்கிறது.
அமெரிக்கத் தேர்தல் அண்மையில் நடைபெற்றது. குடியரசுக் கட்சியின் முக்கிய வேட்பாளரான டொனால்ட் ட்ரம்ப், ஹிலாரியை வீழ்த்தி அமெரிக்காவின் 45 ஆவது ஜனாதிபதியாகத் தேர்வானார். தேர்தல் பரப்புரையில் ட்ரம்ப், அமெரிக்காவின் வளர்ச்சிக்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுக்கப்படும். உலகத்தின் விவகாரங்களில் தலையீடு கணிசமான அளவு குறைக்கப்படும். அமெரிக்கப் படைகள் திரும்பிப் பெறப்படும் எனத் தெரிவித்திருந்தார். இதனால் ஈராக், சிரியாவில் நிலைகொண்டுள்ள அமெரிக்கப் படைகளை ட்ரம்ப் திருப்பிப் பெறுவார் என்ற கருத்து பொதுவாக நிலவுகிறது. இந்த நிலையிலேயே அசாத், ட்ரம்ப் தமக்கு ஆதரவு வழங்குவார் என்று நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.
உலகத் தீவிரவாதத்துக்கு எதிரான போரில் ட்ரம்ப் நிச்சயம் துணைநிற்பார். நானும் அவரும் ஏற்கனவே நண்பர்கள். எனவே ட்ரம்பின் ஆற்றலை நான் அறிவேன் என அசாத் மேலும் தெரிவித்தார். அயல் நாடான துருக்கி ஜனாதிபதி ரையிப் ஏர்டகனை ஒரு நோயாளி என்றும் அவர் விமர்சித்தார். (ம-எ)



## மொகமட் மோ… தூக்குத் தண்ட…

எகிப்தின் முன்னாள் ஜனாதிப்திய… மொகமட் மோர்ஸிக்கு விதிக்கப்பட்… குத் தண்டனை கைவிடப்பட்டது.
எகிப்தில் கிட்டத்தட்ட 30 ஆண்டுகள் … திபதியாக இருந்த ஹோஸ்னி முபார… ஆட்சி மக்கள் புரட்சியால் 2011 … ஆண்டு வீழ்ந்தது. அதன்பிறகு 2… ஆம் ஆண்டில் நடந்த தேர்தலில் … மட் மோர்ஸி ஜனாதிபதியானார். என… அவரது ஆட்சிக்கு எதிராகவும் போரா… வெடித்தது. 2013 ஜூலையில் அ… ஆட்சியை இராணுவம் கலைத்… அதைத் தொடர்ந்து 2014 ஆம் ஆ…



## அதிர்ந்தது காபூல்

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் நேற்றுக் காலை நிலநடுக்கம் ஏற்பட்டது.
காபூல் நகரின் சில பகுதிகளில் உணரப்பட்ட இந்த நிலநடுக்கம் ரிச்டர் அளவுகோலில் 5.3 ஆக பதிவாகியது. நிலநடுக்கத்தால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்து எவ்வித தகவல்களும் நேற்று மாலை வரை வெளியாகவில்லை. (ம-எ)

## “செருப்பு அணிந்த குரங்கு” மிச்செல் மீது விமர்சனங்கள்

வொசிங்ரன், நவ.17
அமெரிக்காவின் முதற் பெண்ணான மிச்செல் ஒபாமாவை செருப்பு அணிந்த குரங்கு என அரச அதிகாரி ஒருவர் சமூகவலைத் தளத்தில் பதிவேற்றி விமர்சித்துள்ளமை அமெரிக்காவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள் ளது. வேர்ஜினியா பகுதியைச் சேர்ந்த அரசு ஊழியர் ஒருவர், ட்ரம்பின் ஆட்சியை வரவேற்று தனது முகப்புத்தகத் தில், வெள்ளை மாளிகையில்உள்ள கறுப்பினப் பெண், குதிச்செருப்பணிந்த குரங்கில் இருந்து ஆட்சி மாற்றமடைகிறது எனப் பதிவிட்டார். சில நிமிடங்களில் அதனை அழித்துவிட்ட போதிலும் பலர் குறித்த பதிவை ஆவணப்படுத்தியுள்ளனர். அவரது பதிவு இன வன்முறையைத் தூண்டும் செயல் என கடுமையான விமர்சனத்துக்கு உள்ளாகியதை அடுத்து அவர் பகிரங்க மன்னிப்புக் கோரினார். (ம-எ)



## அகதிகள் படகு விபத்து; 100 …

ரோம், நவ. 17
லிபியாவில் இருந்து இத்தாலி நோக்கிப் பயணமாகிய அகதிகள் படகொன்று மத்திய தரைக்கடலில் விபத்துக்குள்ளானதில் 100 பேர் காணமல் போயுள்ளனர் என அறிவிக்கப்பட்டது.
ஈராக், சிரியா, துருக்கி, ஈரான், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளில் நிலவும் போர்ச் சூழல் காரணமாக அங்குள்ள ஏராளமான மக்கள் லிபியா நோக்கி படையெடுத்து லிபியாவில் இருந்து மத்தியதரைக் கடலின் வழியாக இத்தாலிக்குச் செல்கின்றனர். அவ்வாறு செல்லும்போது படகுகள் கவிழ்ந்து விபத்துக்குள்ளாவதும் நூற்றுக்கணக்கானோர் உயிரிழப்பதும் வழமையாக மாறிவிட்டது. இவ்வாறான ஒரு விபத்து நேற்றுமுன்தினமும் இடம்பெற்றுள்ளது.
விபத்துக்குள்ளான படகில் 127 பேர் பயணித்தனர். அவர்களில் 23 பேர் மட்டுமே மீட்கப்பட்டுள்ளனர். 100 பேருக்கும் அதிகமானவர்களைக் காணவில்… அமைப்பு… ஆயிரத்த… உயிரிழந்… றன.



# இந்தியாவில் அரங்கேறியிருப்பது ஊழலுக்கு எதிரா…

## இது மோடியின் முழக்கம்

இந்தியா முழுவதும் 500, 1000 ரூபாய் நோட்டுகள் செல்லாது என்று அறிவிக்கப்பட்டிருப்பது ஊழல், கறுப்புப் பணத்துக்கு எதிராகத் தொடுக்கப்பட்டுள்ள புனித போர் என்று இந்தியப் பிரதமர் மோடி முழங்கித் தள்ளியுள்ளார்.
இந்திய நாடாளுமன்ற குளிர்கால கூட்டத் தொடர் நேற்றுத் தொடங்கியது. இந்த கூட்டத்தொடரை சுமுகமாக நடத்துவது தொடர்பாக மக்களவை சபாநாயகர் சுமித்ரா மகாஜன் கடந்த திங்கட்கிழமை அனைத்துக் கட்சிக் கூட்டத்தை நடத்தினார். இதைத் தொடர்ந்து மத்திய அரசின் சார்பில் நேற்று அனைத்துக் கட்சிக் கூட்டம் நடத்தப்பட்டது. குறித்த கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே மோடி அவ்வாறு தெரிவித்தார்.
எல்லை தாண்டிய தீவிரவாதத்தின் பின்னணியில் கறுப்புப் பணம் புழங்குகிறது. மத்திய அரசின் நடவடிக்கைகளுக்கு [illegible] வேண்டும். [illegible] கருத்துக்களையும் மக்கள் மத்தியில் பரப்ப வேண்டாம். ஏழை, சாதாரண மக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ர்ஸிக்கு விதிக்கப்பட்ட
னை கைவிடப்பட்டது

யான ... ட தூக் ... ஜனா ... ரக்கின் ... ஆம் ... 2012 ... மொக ... னினும் ... ராட்டம் ... அவரது ... த்தது. ... ஆண்ட

நடந்த தேர்தலில் முன்னாள் இராணுவத் தளபதி அப் தெல் பத்தா அல் சிசி ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இதனிடையே முன்னாள் அதிபர் முகமது மோர்ஸி மீது பல்வேறு பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்யப்பட்டது. இதில் 2011 ஆம் ஆண்டில் சிறையை உடைத்து பலரைக் கொலை செய்த வழக்கில் அவருக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. மோர்ஸியின் தரப்பால் இந்த தீர்ப்பை எதிர்த்து மேல் முறையீடு செய்யப்பட்டது. இதனை விசாரித்த நீதிமன்றம், மோர்ஸியின் தூக்குத் தண்டனையைக் கைவிட்டுத் தீர்ப்பிட்டது. (ம-ள)

பேரைக் காணவில்லை

ல்லை என ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகள் ... உறுதிப்படுத்தியது. இந்த வருடத்தில் மாத்திரம் 4 ... து 271 பேர் மத்திய தரைக்கடல் பயணத்தில் ... ந்துள்ளனர் என புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின் (ம-ள)



ன புனிதப் போர்



தமது பணத்தை மாற்ற நீண்ட வரிசையில் நிற்கத் தயாராகவே உள்ளனர்.
கறுப்புப் பணத்தை பதுக்கி வைத்திருந்த பணமுதலைகள் தொடை நடுங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஊழலையும், கறுப்புப் பணத்தையும் இல்லாது செய்ய இன்னும் சில திட்டங்கள் உள் என என மோடி மேலும் தெரிவித்தார். (ம-ள)


# UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
# VACANCIES

Applications are invited by me up to 23rd December, 2016 from suitably qualified persons for the following posts.

**1. POST OF CHIEF SECURITY OFFICER, GRADE II (University of Jaffna)**

**Qualifications:**

1. An Officer not below the rank of Assistant Superintendent of Police, Captain of the Army or an officer of equivalent rank in the other Armed Services.

**OR**

2. A Person who possesses a degree from a recognized University/ Higher Educational Institutions with not less than five (05) years experience in Security work.

**OR**

3. A holder of the post of Security Inspector, Grade I or above in the University Security Services and confirmed in the present post with not less than eight (08) years satisfactory service in those grades.

**Salary Scale:**
U-EX 1(II)Rs.26,020-3X585-27,775(EB) 28,420; 12X645-36,160/-p.m.

**Selection:** By Structured Interview.

**2. POST OF MARSHAL, GRADE II [ Vavuniya Campus]**

**Qualifications:**

1. A Graduate from a recognized University.
2. Physique: Height : 5' 5"
   Chest : 32" deflated

**Note**:-
Preference will be given to those with Police Armed Forces background and active participation in Sports Activities, Social Welfare Activities within the University at National Level.

**Salary Scale**: U-MN 2 (II) – Rs. 19.470-18X245-23,880/- p.m.

**Selection** : By Interview

**3. PUBLIC HEALTH INSPECTOR, GRADE III (University of Jaffna)**

**Qualifications:**

Should have passed the Public Health Inspectors examination conducted by the Department of Health.

**Salary Scale**:U-MT1 (IIIA)-Rs.16,535–7x155;10x185-19,470p.m.

**Selection** : By Interview

**4. CARE TAKER CUM REPAIRER, GRADE II (University of Jaffna)**
**(DANCING INSTRUMENTS)**

**Qualifications:**

i. a) G.C.E. (Ordinary Level) Examination in 6 subjects at not more than 2 sittings;

**OR**

b) A Pass in 8th Standard and who have satisfactorily completed 5 years' permanent service in the UGC or a Higher Educational Institution.

ii. Knowledge and ability in –
Repairing Kandyan and Low Country Drums, Davul, Tammettam, Uddekki, Raban etc. Should have at least two years experience in repairing the above instruments in a Higher Educational Institution, Government Department or a Public Corporation.

iii. Experience in maintenance of issue registers and storage of instruments.

**Note:** Preference will be given to those with knowledge and ability in playing dancing instruments.

**Salary Scale**: U-MN 1(III)A- Rs.16,070 – 17 x 155 – 18,705 p.m.

**Selection** : By Practical Test and Interview.

**(ii) CARE TAKER CUM REPAIRER, GRADE II (University of Jaffna)**
**(MUSICAL INSTRUMENTS)**

**Qualifications:**

i. a) G.C.E. (Ordinary Level) Examination in 6 subjects at not more than 2 sittings;

**OR**

b) A Pass in 8th Standard and who have satisfactorily completed 5 years' permanent service in the UGC or a Higher Educational Institution.

ii. Applicants should have at least 5 years' experience and ability in repairing and fixing of strings in a Violin, Sitar and Esraj etc., and applying cement and fixing hides etc., in Tabla and Murudangam; and repairing Harmonium and other local instruments in a Higher Educational Institution or in a Government Department or in a recognized institute.

Iii. Experience in maintenance of issue registers and maintenance and storage of musical instruments.

**Note:** Preference will be given to those with a basic knowledge in music.

**Salary Scale**: U-MN 1(III)A- Rs.16,070 – 17 x 155 – 18,705 p.m.

**Selection** : By Practical Test and Interview

**5. MECHANIC, GRADE II (Faculty of Technology, Kilinochchi Premises)**

**Qualifications :**

i. Pass in the 8th Standard
ii. Should be conversant with
   a. Reading scales, micrometers and recording fractional dimensions.
   b. Specialized types of fitting of plant and machinery of steam, motor and diesel or the operation of workshop machinery such as lathes milling machines and shaping machines;

**AND**

   c. Reading and understanding drawings.

iii. Not less than 2 years' experience as a Mechanic or Machine Operators.

**Salary Scale** : U-PL3(III) Rs.15,650-16x140-17,890p.m

**Selection** : By Trade Test and Interview

**6. CURATOR (LANDSCAPE) GRADE III (University of Jaffna/ Vavuniya Campus)**

**Qualifications:**

1. Should possess a four year special Degree in Agriculture or Agricultural Technology & Management and majoring in Crop Science/Horticulture/Floriculture/Forestry from a recognized University /HEI with not less than one (01) year of experience in landscaping in a State/Corporation or reputed Private Sector organization in supervisory capacity.

**OR**

2. Should possess a four year special Degree in Botany of a recognized University/HEI with not less than two (02) years of experience in Landscaping in State/Corporation or reputed Private Sector organization in supervisory capacity.

**Salary Scale**:
U-EX1(II) -Rs.26,020-3X585-27,775(EB)28,420;12X645-36,160/-p.m.

**Selection** : By Structured Interview.

**AGE LIMIT : Not more than 45 years for the above all posts.**

***Note:Age limit is not applicable for applicants in the Government departments/ State Corporation and statuary bodies.***

**STATUTORY BENEFITS**

1. Allowances approved by the University Grants Commission.
2. Membership in Universities Provident fund and Pension Scheme in the University Scheme.
3. Gratuity payment.
4. Employment trust fund.
5. Free Medical Care.

Application should be made on the forms available in the office of the Senior Assistant Registrar/ Establishments (Non-Academic) of this University on payment of Rs.100/- for each application form at the Shroff's counter of this University or the forms available in the University website (www.jfn.ac.lk) annex with the Money Order/ Postal Order to the value of Rs.100/-. Those who wish to obtain the forms by post should send a Money Order/ Postal Order to the value of Rs.100/- in the name of the Bursar, University of Jaffna, together with a self-addressed Rs.10.00 stamped envelope of 23x10cm. in size. Only Applications sent on the specified form will be accepted **(Please annex copies of relevant documents)**

Duly completed application should be sent under registered cover to reach the **Senior Assistant Registrar/ Establishments Branch (Non Academic), University of Jaffna, Thirunelvely, Jaffna on or before 23.12.2016.**

Applicants from Government Departments/ State Corporations Statutory Bodies should forward their applications through their respective Heads of Departments/ Corporations/Boards.

Applications received after the closing date and illegible and incomplete applications will be rejected without intimation.

**REGISTRAR,**
**University of Jaffna,**
**16.11.2016**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நட்சத்திரப் பலன்கள்

ஜோதிட சாஸ்திரத்தில் மிக மிக முக்கியமானது நட்சத்திரம் ஆகும். பஞ்ச அங்கங்களில் நட்சத்திரமும் ஒன்றாகும். ஒருவர் எந்த நட்சத்திரத்தில் பிறந்துள்ளாரோ அந்த நட்சத்திரம் எந்த ராசியில் விழுகிறதோ அதுவே அவரது ஜென்ம ராசியாகும். ராசி மொத்தம் 12 ஆகும். மொத்த நட்சத்திரம் 27 ஆகும். இங்கு ஒவ்வொரு நட்சத்திரமும் 4 பாதங்களாகப் பிரிக்கப்பட்டு 1,2,3,4 பாதங்கள் என்று குறிக்கப்படுகின்றன.

**அஸ்வினி நட்சத்திரப் பலன்கள்**

இந்த நட்சத்திரத்தின் அதிபதி கேது ஆகும். வாக்கு வாகினியாம். பேச்சுக்கும், சொல்லுக்கும் எழுத்துக்குமான கலைவாணி பிறந்த நட்சத்திரம் ஆகும். இந்த நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் சாந்தமான குணமும், அழகும், அறிவாற்றலும் மிக்கவர்கள். எப்பொழுதும் சுறுசுறுப்பும், உற்சாகமும் உள்ளவர்கள். இவர்களை அவ்வளவு எளிதில் மற்றவர்கள் புரிந்து கொள்ள முடியாது. நம்பிக்கையான இவர்களின் சொல்லுக்கும், செயலுக்கும் சம்பந்தமே இருக்காது.

**அச்சுவினி நட்சத்திரம் : 1ம் பாதம்**

இவர்கள் சபலபுத்தியுள்ளவர்கள். சற்று கஞ்சத்தனம் உடையவர்கள். பிறரை ஏமாற்றும் இவர்கள், தங்கள் ஏமாற்றத்துக்கு தாங்களே காரணமாவார்கள். பிறருக்கு துன்பத்தை கொடுப்பார்கள். எப்பொழுதும் ஸ்திர சிந்தனை இல்லாமல் செயற்படுவார்கள், மற்றவர்களை தூக்கி எறிந்து பேசும் இயல்புடையவர்கள், உறவினர்களை வெறுப்பர்.

**அச்சுவினி நட்சத்திரம் : 2ம் பாதம்**

தர்மத்துக்கும் மனசாட்சிக்கும் கட்டுப்பட்ட இவர்கள் ஓரளவு சாஸ்திரம் அறிந்தவர்கள். கெட்டிக்கார தன்மையும் மற்றவர்களை சீர்தூக்கி பார்த்து மதிப்பீடு செய்வதில் ஆர்வம் உள்ளவர்கள். எப்பொழுதும் சுறுசுறுப்பும் ஊக்கமும் உடையவர்கள். தனக்கு நிகர் எவருமில்லை என்ற எண்ணம் உடையவர்கள். தாயிடம் பிரியமாக இருப்பர்.

**அச்சுவினி நட்சத்திரம் : 3ம் பாதம்**

கதை, கவிதை, கட்டுரை எழுதுவதில் ஆர்வம் உடைய இவர்கள், கணக்கு பார்ப்பதில் கறாராக இருப்பர். மூலநோயால் அவதிப்படுவர். பொருள் நஷ்டம் அடைவர். எப்பொழுதும் வருத்தப்பட்டுக் கொண்டு இருப்பார்கள். உற்றார், உறவினர்கள், நண்பர்களால் நன்மையடைவர்.

**அச்சுவினி நட்சத்திரம் : 4ம் பாதம்**

பெண்களின் மனதை தொடுபவர்களாகவும், நல்ல பரந்த மனம் உடையவர்களாகவும் இருக்கும் இவர்கள் ஜோதிடக் கலையிலும் ஆர்வம் உடையவர்களாக இருப்பர். உண்மையை மட்டுமே உரைப்பவர்களாகவும், மிகுந்த புத்திசாலிகளாகவும் திகழும் இவர்கள் பணக்காரர்களாக வசதியுடன் விளங்குவர். காலில் எப்பொழுதும்பிரச்சினை இருந்து கொண்டே இருக்கும்.

**நாளை**

**கார்த்திகை-03**

வெள்ளிக்கிழமை -18.11.2016

திதி: சதுர்த்தி மு.ப. 11.39

நட்சத்திரம்: திருவாதிரை மு.ப.11.46

ராகுகாலம்:10.38-12.08 வரை

சுபநேரம்:06.08-07.38 வரை

# டோக்கியோ ஒலிம்பிக் போட்டிக்கான இலங்கையின் திட்டங்கள் பலிக்குமா?

2020 ஆம் ஆண்டு ஜப்பானின் தலைநகர் டோக்கியோவில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் தொடருக்காக இலங்கை தற்போதிருந்தே நாடளாவிய ரீதியில் சில திட்டங்களை முன்னெடுக்க ஆரம்பித்துள்ளது.

பிரேஸிலின் ரியோ டி ஜெனிரோ நகரில் அண்மையில் ஒலிம்பிக் தொடர் நடைபெற்று முடிவடைந்தது. அமெரிக்கா, சீனா, பிரிட்டன் போன்ற நாடுகள் வழக்கம்போல பதக்கங்களை வேட்டையாடிய போதிலும் இலங்கைக்கு ஏமாற்றமே மிஞ்சியது. ஒரு வெண்கலப் பதக்கத்தையேனும் இலங்கை பிரதிநிதித்துவம் செய்த வீர, வீராங்கனைகள் கைப்பற்றவில்லை.

இந்தப் பின்னடைவுக்கு இலங்கையின் அபிவிருத்தியையோ அல்லது சனத்தொகையையோ காரணம் காட்டிவிட முடியாது. இலங்கையை விடப் பின்தங்கிய கொசோவோ, சோமாலியா, மங்கோலியா, எத்தியோப்பியா, கென்யா, சிம்பாப்வே போன்ற நாடுகள் கூட பதக்கங்களை குறிப்பாக தங்கப் பதக்கங்களைக் கைப்பற்றின.

ரியோ ஒலிம்பிக் தொடர் முடிவடைந்த பிற்பாடு இலங்கையின் பின்னடைவை ஏற்றுக்கொண்ட விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர, 2020 ஆம் ஆண்டு டோக்கியோவில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் தொடரிலும் அதற்குப் பின்னர் நடைறெவுள்ள ஒலிம்பிக் தொடரிலும் இலங்கை பதக்கம் வெல்ல கணிசமான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித்திருந்தார். அவருடைய திட்டங்கள் வெறும் பேச்சளவில் நின்றுவிடவில்லை. சில ஆக்கபூர்வமான திட்டங்கள் படிப்படியாக முன்னெடுக்கப்பட ஆரம்பித்துள்ளன என்றே எண்ணத் தோன்றுகிறது.




ஒலிம்பிக் தொடரை நடத்தும் நாடு ஐந்து விளையாட்டுக்களை புதிதாகச் சேர்த்துக் கொள்ள இடமுண்டு. இந்த அடிப்படையில் ஜப்பானால், டோக்கியோ ஒலிம்பிக் தொடரில் கராத்தே சேர்க்கப்பட்டுள்ளது. ஜப்பானின் கராத்தே அக்கடமிகளும் பயிற்சிகளும் உலகத் தரமானவை என்பது அனைவரும் அறிந்ததே. எனவே சில பதக்கங்களைக் கருத்தில்கொண்டு இலங்கை வீரர்கள் சிலர் ஜப்பான் பயிற்சியாளர்களின் கீழ் பயிற்சிபெற ஒப்பந்தம் செய்யப்பட்டனர். சில ஜுடோ வீரர்களும் பன்னாட்டுப் பயிற்சிகளுக்காக அனுப்பப்பட்டுள்ளனர்.

இதைவிட மிகப்பெரிய திட்டமொன்று தேசியமட்டத்தில் சிறுவர்கள் மத்தியில் குறிப்பாக பதின்ம வயதின் ஆரம்பத்தை எட்டப்போகும் சிறுவர்கள் மத்தியில் சத்தமின்றி மேற்கொள்ளப்படுகிறது.

இந்த மாதம் 29 ஆம், 30 ஆம் திகதிகளில் தேசிய ரீதியில் அனைத்துப் பாடசாலைகளிலும் உள்ள 7 ஆம் தரத்தில் கல்விகற்கும் (12 வயது) மாணவர்கள், மாணவி யரின் உடல்தகுதி, விளையாட்டுத்திறன் என்பன பரிசோதிக்கப்படவுள்ளன. அவர்களின் உடல்நிறை, உயரம், உடல் தகுதி, திறன், ஆளுமை என்பனவும் கணக்கிடப்பட்டு மிகப்பெரிய அறிக்கையொன்று ஒவ்வொரு மாகாணத்தினாலும் சமர்ப்பிக்கப்படவுள்ளது. தேசிய ரீதியான ஒப்பீட்டில் சிறந்த 10 ஆயிரம் வீர, வீராங்கனைகளைத் தேர்ந்தெடுத்து ஒரு விளையாட்டுக்கு ஆயிரம் பேர் என்ற அடிப்படையில் அவர்கள் பயிற்றுவிக்கப்படவுள்ளனர். நீண்டதும் முறையானதுமான பயிற்சியின் பின்னர், அவர்களில் ஆகச்சிறந்த பெறுபேற்றை வெளிப்படுத்துபவர்களைத் தேர்ந்தெடுத்து பன்னாட்டுத் தொடர்களில் இலங்கையைப் பிரதிநிதித்தவம் செய்வதற்கு அனுப்பப்படவுள்ளனர்.

இவற்றின் அடிப்படையில் பன்னாட்டு தடகளத்திலும், பெருவிளையாட்டிலும் ஏனைய நாடுகளுக்கு சவால் விடக்கூடியதும் நெருக்கடியை வழங்கக்கூடியதுமான முதல் அடியை இலங்கை எடுத்து வைத்துள்ளது என்பதை ஏற்கத்தான் வேண்டும். திட்டங்கள் ஓரிரு வாரங்களில் முடங்கி விடுமா அல்லது இலக்கை அடையும் வரை நீடித்துச் செல்லுமா என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.

ரியோ ஒலிம்பிக் தொடரில் இலங்கையின் சார்பாக களமிறங்கிய வீர, வீராங்கனைகளை விட அவர்களை முகாமை செய்யச் சென்ற அதிகாரிகள் அதிகம். இந்த நிலை டோக்கியோவில் ஏற்படாது என்று நம்புவோம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தி.சோபிதன்



# மானுட அவலமாகச் சித்திரிக்கப்படும் குருநகர் புனித யாகப்பர் ஆலயம் மீதான தாக்குதல்

அன்று 1993ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 13ஆம் திகதி சனிக்கிழமை(தீபாவளி நாள்) காலை 7.20 மணிக்கு அவ்வூர் மக்களின் இறை வழிபாட்டுக்காக ஆலயம் அமைதியாக இருந்தது. மக்கள் ஒன்று கூடியிருந்த நேரம் பார்த்து குடாநாட்டு வான்பரப்புக்குள் பிரவேசித்த விமானப்படையின் சீன நாட்டுத் தயாரிப்பான 'சுப்பர் சொனிக்' விமானங்கள் இரண்டு குண்டுகளை வீசின. அங்கு வழிபாட்டுக்கு வந்த மக்கள் இவ்வாறான கொடூரமான நிலை தங்களுக்கு ஏற்படும் என்று நினைத்திருக்க மாட்டார்கள். திட்டம் இவ்வளவு எளிதாக நிறைவேறும் என்று. குருநகர் புனித யாகப்பர் ஆலயம் மீது இரு குண்டுகள் வீசப்பட்டன. இவ்வாலயத்தில் வழிபாடு செய்து கொண்டிருந்தவர்களில் ஒன்பது பேர் உயிரிழக்க இருபத்தைந்திற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்ததுடன், தேவாலயமும் பலத்த சேதமடைந்தது.

குருநகர் புனித யாகப்பர் தேவாலயம்மீதான தாக்குதலை அரசியற் தலைவர்களோடு உலகநாடுகள் பலவும் வன்மையாகக் கண்டித்திருந்தன. தேவாலயத்தின் மீதான குண்டு வீச்சினால் மண்டபத்தைத் தாங்கிய தூண்கள் துண்டங்களாகின. அந்தத் தூண்கள் இன்றும் யாகப்பர் சிலையின் அருகே ஞாபகச் சின்னமாக வைக்கப்பட்டுள்ளன. புனித யாகப்பர் ஆலயத்தில் உயிர் நீத்த மக்களின் நினைவாக குருநகர் மக்களால் ஆலயப் படிக்கட்டில் 'நீதிக்கான நினைவாலயம்' என்னும் நினைவுச் சின்னம் பொறிக்கப்பட்டுள்ளது.

குருநகர்க் கிராமம் யாழ்ப்பாண நகரத்திலிருந்து தெற்குப் புறமாக இரண்டு மைல் தூரத்தில் கடற்கரையோரமாக அமைந்துள்ளது. குருநகர்ப் பகுதியில் 1861ஆம் ஆண்டுஅடிக்கல்நடப்பட்டு1881ஆம்ஆண்டு புனித யாகப்பர் ஆலயம் அமைக்கப்பட்டது. இவ்வாலயச் சூழலில் 1973ஆம் ஆண்டு இறந்த 'அருட்திரு யோசவ்றேயை' ஆலயத்தில் அடக்கம் செய்யப்பட்ட நினைவுக்கல்லும் உள்ளது.

தமது கஷ்டங்களையும் துன்பங்களையும் போக்க இறைவனிடம் மன்றாட மக்கள் தேவாலயத்துக்கு வந்திருந்தனர். அந்த மக்கள் தமது குறைகளையும் துன்பங்களையும் அந்த தேவாலயத்தில் உள்ள ஆண்டவரிடம் கூறி மன்றாடிக் கொண்டிருந்தனர்.

ஒரு சிறு குழந்தையுடன் வருகை தந்த தாய் தனது துன்பங்களைத் தாங்க முடியாது ஆண்டவனிடம் முறையிட்டுக் கொண்டிருந்தார்.அந்த நேரத்தில் தான் வந்தான் அரக்கன் போர் விமான உருவில். புனித இடம் என்று தெரிந்திருந்தும் அத் திருக்கோவிலை நோக்கி அந்த அரக்கன் அங்கு வழிபாட்டிலிருந்த மக்களை அழித்து விடுவதற்காக தான் சுமந்து வந்த குண்டை தேவாலயம் மீது எறிந்துவிட்டு வேகமாக அவ்விடத்தை விட்டுச் சென்று விட்டான்.






அவன் எறிந்த குண்டால் அங்கு நிலைகுலைந்து இறந்து கிடந்த அந்தத் தாய் மற்றும் எம் உறவுகளைப் பற்றியும் அங்கு காயங்களினால் குருதி வெள்ளத்தில் கிடந்தவர்கள் பட்ட துன்பங்களையும் யார்தான் அறிவார்கள்?

அந்த கட்டட இடிபாடுகளுக்குள்ளே சிக்கிக் கிடந்த உடல்களை மீட்கும் போது அம்மக்கள் பட்ட துயரங்கள் அவர்களின் சாவு வரை அவர்களின் இதயங்களிலிருந்து அகலாது என்பதில் எந்த மாற்றுக் கருத்துக்கும் இடமில்லை.

அன்றைய தினம் பிஞ்சுக் குழந்தையாய் தனது தாயுடன் பிரார்த்தனையில் ஈடுபட்ட அந்த குழந்தை தனது தாயைப் பறி கொடுத்து இன்று வரை வாழ்ந்து வரும் துன்பத்தை எவராலும் ஈடுகட்ட முடியாது.

> ஒரு சிறு குழந்தையுடன் வருகை தந்த தாய் தனது துன்பங்களைத் தாங்க முடியாது ஆண்டவனிடம் முறையிட்டுக் கொண்டிருந்தார். அந்த நேரத்தில்தான் வந்தான் அரக்கன் போர் விமான உருவில். புனித இடம் என்று தெரிந்திருந்தும் அத் திருக்கோவிலை நோக்கி அந்த அரக்கன் அங்கு வழிபாட்டிலிருந்த மக்களை அழித்துவிடுவதற்காக தான் சுமந்து வந்த குண்டை தேவாலயம் மீது எறிந்துவிட்டு வேகமாக அவ்விடத்தை விட்டுச் சென்று விட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரலாற்றில் இன்றைய தினம்

794 - ஜப்பானியப் பேரரசர் கான்மு-தனது இருப்பிடத்தை நாறாவிலிருந்து கோயோடோஸுக்கு மாற்றினார்.
1558 - எலிசபெத் யுகம் தொடங்கியது. இங்கிலாந்தின் முதலாம் மேரி இராணி சாவடைய அவரது ஒன்றுவிட்ட சகோதரி இங்கிலாந்தின் முதலாம் எலிசபெத் இராணியானார்.
1800 - அமெரிக்க காங்கிரஸின் முதலாவது அமர்வு வொஷிங்டன் நகரில் இடம்பெற்றது.
1831 - கிரான் கொம்பியாவிலிருந்து ஈக்குவேடருர்ம். வெனிசுலாவும் பிரிந்தன.
1869 - எகிப்தில் மெடிரேறனியன் கடலையும், செங்கடலையும் இணைக்கும் சுயஸ் கால்வாய் திறந்து வைக்கப்பட்டது.
1933 - சோவியத் யூனியன் அமெரிக்காவால் அங்கீகரிக்கப்பட்டது.
1992 - பிரேமதாஸா பதவி விலக எதிரணி வற்புறுத்து. தளபதி கிளான்சி கொலையையடுத்து எழுந்துள்ள நிலை.
- யாழ்.மாவட்டத்தில் காணி சுவீகரிப்பு, பயன்பாடு பிரதேச செயலர் வசம்.
1996 - வவுனியா வந்த அகதிகள் திரும்பிச் செல்வதில் முனைப்பு; பாதுகாப்பு கெடுபிடி காரணமாம்.
- புலிகளுடன் அரசு பேச்சு நடத்த வேண்டும் என றொனி டிமேல் வலியுறுத்து.
1999 - தோணிக்கல் பகுதியில் எறிகணைக்கு சிறுமி சாவு; மூவர் காயம்.
- நளினிக்கு வழங்கிய தண்டனையை குறைக்குமாறு சோனியா பரிந்துரை.
2006 - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அடியோடு அழிக்க அரசு சதியென சிவாஜிலிங்கம் தெரிவிப்பு.

## தேன் சிட்டு

தேன் சிட்டுப் பறக்கிறது
தேனைத் தேடித் திரிகிறது
வான் வெளியில் அதன் பாதை
வண்ணப் பூக்கள் அதன் தோழர்!

சிட்டாய்ப் பறந்து செல்கிறது
சின்னச் சிறகை விரிக்கிறது
பட்டுப் போன்ற உடம்பில்
பளபளப்பும் தெரிகிறது!



சிறுவர் பக்கத்துக்கான ஆக்கங்கள், ஆலோசனைகள் வரவேற்கப்படுகின்றன. editor@uthayan.com என்ற மின் அஞ்சல் முகவரிக்கு அல்லது **361. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்** என்ற தபால் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம்.

## பொன்மொழிகள்

- கபடம் இல்லாத நாத்திகன் வஞ்சகனை விடச் சிறந்தவன் ஆவான்.
- காமம், பொன்னாசை இவைகளால் ஆளப்படும் அற்பர்கள் பொருட்படுத்தப்படக்கூடியவர்கள் அல்லர்.
- எவர் ஒருவருடைய நெஞ்சு ஏழை மக்களுக்காகத் துயரத்தில் அழுமோ, அவரையே நான் மகாத்மா என்பேன்.
- அன்பு நெறியில் சென்று உலகம் உய்வடைந்திட வழிகளைக் கூறும் முறை மதம் எனப்படும்.

## தங்கத் தூண்டில்

பாபு, சுந்தர் இருவரும் அண்ணன் தம்பிகள். மீன் பிடித்து வாழ்க்கை நடத்தி வந்தனர். ஒருநாள் நண்பகல் நேரம் அவர்கள் இருவரும் வீட்டில் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். அப்போது பிச்சைக்காரன் ஒருவன் அங்கே வந்தான். எலும்பும் தோலுமாக இருந்த அவனைப் பார்க்கவே பரிதாபமாக இருந்தது.

அவர்களிடம் அவன், "சாப்பிட்டுப் பல நாள்கள் ஆகின்றன. ஏதேனும் உணவு தாருங்கள்!" என்று கெஞ்சினான். இரக்கப்பட்ட பாபு அவனுக்கு உணவு தந்தான்.

இதைப் பார்த்த சுந்தர், "அண்ணா! இப்படிப்பட்ட சோம்பேறிகளிடம் இரக்கம் காட்டக்கூடாது என்று எரிச்சலுடன் சொன்னான். அடுத்த நாளும் அந்தப் பிச்சைக்காரன் அங்கே வந்தான். அவனுக்கு பாபு உணவு கொடுத்தான். மீண்டும் இவன் இங்கே வந்து பிச்சை எடுக்கிறானே என்று கோபம் கொண்டான் சுந்தர்.

"சோம்பேறிப் பயலே! அடுத்தமுறை உன்னை இங்கே பார்த்தால் தொலைத்து விடுவேன்!" என்று கத்தினான் சுந்தர். மூன்றாவது நாளும் பிச்சை கேட்டு அங்கே வந்தான். அவனைக் கண்டதும் கோபத்தால் துடித்த சுந்தர் அங்கிருந்த தூண்டில் ஒன்றை எடுத்துக் கொண்டான். அவனைத் தரதரவென்று இழுத்துக் கொண்டு ஏரிக் கரைக்கு வந்தான்.

"இப்படிப் பிச்சை எடுத்து இழிவான வாழ்க்கை நடத்துகிறாயே உனக்கு மீன்பிடிக்கக் கற்றுத் தருகிறேன். இந்தத் தூண்டிலை வைத்துப் பிழைத்துக் கொள்!" என்றான். அவனுக்கு மீன் பிடிக்கக் கற்றுக்கொடுத்து விட்டு அங்கிருந்து சென்றான். அதன்பிறகு அந்தப் பிச்சைக்காரன் அவர்கள் வீட்டுக்கு வருவதே இல்லை.

பல ஆண்டுகள் சென்றன. செல்வந்தர் ஒருவர் அழகிய குதிரைகள் பூட்டப்பட்ட வண்டியில் அங்கே வந்தார். அவர் கையில் தங்கத்தால் செய்யப்பட்ட சிறிய தூண்டில் ஒன்று இருந்தது. பாபுவும், சுந்தரரும் அவரைப் பார்த்தனர். தங்கத்தூண்டிலை சுந்தரிடம் தந்தார் அவர். "என் அன்புப் பரிசாக வைத்துக் கொள்ளுங்கள்"– என்றார்.

தன் வீட்டுக்கு வந்த பிச்சைக்காரன்தான் அவன் என்பது பாபுவுக்குத் தெரிந்தது.

கோபத்தால் துடித்த அவன், "நீ சாகப்பிழைக்க இங்கே வந்தாய். உனக்கு உணவு தந்து காப்பாற்றியவன் நான். எனக்குத்தான் இந்தத் தங்கத் தூண்டில் உரியது. என்னிடம் தா" என்று கத்தினான். ஆனால், அவரோ, "இது உங்கள் தம்பிக்குத் தான் உரியது."என்று உறுதியாகச் சொன்னார். இதை பாபு ஏற்றுக் கொள்ளவில்லை. வழக்கை நீதிமன்றத்துக்குக் கொண்டு சென் றான். நடந்ததை எல்லாம் விசாரித்தார் நீதிபதி.




பாபுவைப்பார்த்து அவர், "நீ இவருக்கு உணவு அளித்துக் காப்பாற்றியது உண்மை தான். நீ செய்த உதவி இவர் வாழ்க்கையில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை. உன் தம்பியோ இவர் வாழ்வதற்கு வழிகாட்டினார். அதைப் பயன்படுத்தி இவர் இந்த நிலைக்கு உயர்ந்தார். நிலையான உதவி செய்த சுந்தருக்கு இவர் தூண்டிலைப் பரிசு அளித்தது சரியே. இந்தத் தங்கத் தூண்டில் சுந்தருக்கே உரியது. இதுவே என் தீர்ப்பு"–என்றார்.

## விடுகதைகள்

1. விளக்கைச் சுமந்தபடி விடிய விடியப் பறப்பான். அவன் யார்?
2. தட்டினால் தாளம் வரும். உடைத்தால் தாகம் தீரும்; அது என்ன?
3. விளக்கைச் சுமந்தவனுக்கு விடிய விடிய தூக்கமில்லை; அவன் யார்?
4. இவள் வாய் திறந்தால் அழகு; இவளோ ஆடினால் அழகு. அவர்கள் யார்?
5. ஓரெழுத்தில் உயிர் வாழ்வேன்; ஈரெழுத்தில் அழிந்து விடுவேன். நான் யார்?

விடைகள்
1. மின்மினிப்பூச்சி 2. தேங்காய் 3. மெழுகுவர்த்தி
4. குயில்-மயில் 5. தீ-நீர்

## வர்ணம் தீட்டுவோம் வாங்க....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







1. தலை முடியை ஒன்றாக கூட்டி பொனி ரெய்ல் போடவும். இதற்கு மொத்தமாக வூல் பாண்டை பயன்படுத்தவும்.
2. தலை முடியை பொலிவாக்கிக் கொள்ளவும்.
3. கூட்டிக் கட்டிய தலைமுடியை பகுதியாகப் பிரித்து ரோல் செய்து, வூல் பாண்டுக்குப் பின்னால் கிளிப் செய்யவும்.
4. இவ்வாறு அனைத்து தலை முடியையும் கிளிப் செய்யவும். அலங்காரம் தயார்.

# சீதாப்பழம்



1. மாச்சத்து, நார்ச்சத்து நிறைந்தது.
2. விட்டமின் பி அதிக அளவில் இருக்கிறது.
3. விற்றமின் சி, சத்துக்கள் ஓரளவு இருக்கின்றன.
4. உடலுக்குத் தேவையான பொட்டாசியம் உள்ளது.
5. கல்சியம், இரும்பு முதலான தாதுஉப்புக்கள் இருக்கின்றன.
6. ஆரம்பநிலை காசநோயைக் கட்டுப்படுத்தும்
7. உயர் ரத்த அழுத்தத்தைத் தடுக்கும்.
8. எலும்புகள், பற்கள் உறுதியாகும்.
9. நீர்ச்சத்து அதிகம், உடலுக்குக் குளிர்ச்சி தரும்.
10. இதயத்தைப் பாதுகாக்கும்.

# நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | மருதனார்மடம் | சாவகச்சேரி | கன்னாதிட்டி | நெல்லியடி | திருநெல்வேலி | [illegible] | கொடிகாமம் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 70 | 50 | 60 | 60 | 30 | 40 | – | 50 |
| கத்தரி | 60 | 60 | 80 | 100 | 50 | 60 | – | 35 |
| கரட் | 80 | 80 | 80–120 | 100 | 120 | 140 | – | 100 |
| மரவள்ளி | 60 | 60 | 35 | 60 | 50 | 60 | – | 60 |
| பயிற்றை | 120 | 80 | 100 | 100 | 100 | 160 | – | 60 |
| பாகல் | 140 | 120 | 160 | 120 | 120 | 180 | – | 70 |
| கருணைக்கிழங்கு | 60 | 80 | 80 | 100 | 60 | 120 | – | 80 |
| பெ.வெங்காயம் | 100 | 90 | 100 | 100 | 100 | 100 | – | 80 |
| சி.வெங்காயம் | 120 | 120 | 100 | 120 | 90 | 140 | – | 70 |
| பூசணி | 40 | 30 | 40 | 50 | 30 | 70 | – | 30 |
| தக்காளி | 80 | 60 | 60 | 60 | 50–60 | 80 | – | 40 |
| வாழைக்காய் | 50 | 60 | 50 | 50 | 40 | 80 | – | 40 |
| கீரை | 20 | 20 | 30 | 20 | 20 | 40 | – | 20 |
| பொன்னாங்காணி | 20 | 30 | 30 | 25 | 20 | 40 | – | 10 |
| பச்சை மிளகாய் | 60 | 50 | 50 | 50 | 60 | 80 | – | 70 |
| புடோல் | 70 | 40 | 50 | 60 | 60 | 60 | – | 50 |
| கோவா | 70 | 60 | 80 | 80 | 60 | 80 | – | 50 |
| வெண்டி | 80 | 80 | 60 | 60 | 40 | 40 | – | 30 |
| போஞ்சி | 160 | 180 | 200 | 140 | 160 | 220 | – | 120 |
| லீக்ஸ் | 120 | 120 | 100–120 | 120 | 120 | 160 | – | 100 |
| தேங்காய் | 50 | 35 | 50 | 40 | 30 | 40 | – | 30 |
| உருளைக்கிழங்கு | 120 | 110 | 120 | 110 | 100–120 | 120 | – | 120 |
| தேசிக்காய் | 500 | 550 | 600 | 500 | 550 | 600 | – | 200 |
| வல்லாரை | 20 | 15 | 10 | 15 | 10 | 20 | – | 10 |
| கறிமிளகாய் | 120 | 100 | 160 | 100 | 120 | 140 | – | 70 |
| இராசவள்ளி | – | – | – | – | – | – | – | 120 |
| முருங்கைக்காய் | 80 | 60 | 80 | 40 | 80 | 80 | – | 100 |



# நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | [illegible] | பருத்தித்துறை | சாவகச்சேரி | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 500 | – | 800 | 600 | 800 |
| நண்டு | 250 | 400 | 200 | – | 400 | 300 | 500 |
| கணவாய் | 600 | 600 | 400 | – | 700 | 700 | – |
| பாரை | 550 | 200 | 400 | – | 300 | 600 | 400 |
| சுறா | 500 | 200 | 500 | – | 800 | – | 600 |
| சீலா | 300 | 400 | 300 | – | 400 | 400 | – |
| விளை | 650 | 400 | 300 | – | 450 | 600 | 450 |
| முரல் | 300 | 200 | 300 | – | 600 | 350 | – |
| கும்பிளா | 400 | 200 | 400 | – | 400 | 500 | – |
| கிளாக்கன் | 800 | 1000 | 300 | – | 600 | – | – |
| ஒரா | 400 | 250 | 300 | – | 450 | 200 | 400 |
| திரளி | 300 | 200 | 100 | – | 200 | 150 | 350 |
| நகரை | 250 | 200 | 100 | – | 300 | – | 400 |
| சூடை | 150 | 150 | 100 | – | 120 | 200 | – |
| ஒட்டி | 300 | 100 | 200 | – | 300 | 300 | – |
| திருக்கை | 150 | 250 | 200 | – | 400 | 200 | 150 |
| மதனம் | 150 | 200 | – | – | 300 | – | 250 |
| கொய் | 100 | 100 | 50 | – | 80 | 100 | – |
| பாலை | 400 | 100 | 300 | – | 400 | 400 | – |
| வாழை | 100 | 100 | – | – | 300 | 300 | – |

# இறால் கொழுக்கட்டை



## தேவையான பொருள்கள்

பச்சரிசி – 100 கிராம்
பொரி அரிசி – 50 கிராம்
இறால் – 50 கிராம்
வெங்காயம் – 50 கிராம்
பச்சை மிளகாய் – 2
உப்பு – தேவையான அளவு
துருவிய தேங்காய் – ஒரு கப்
எண்ணெய் – 100 கிராம்
இஞ்சி பூண்டு விழுது – ஒரு தேக்கரண்டி
மஞ்சள் தூள் – அரை தேக்கரண்டி
மிளகாய் தூள் – ஒரு தேக்கரண்டி
கரம் மசாலா – ஒரு தேக்கரண்டி
கொத்தமல்லி இலை – 15 கிராம்
புதினா – 15 கிராம்



## செய்முறை

அரிசியையும், பொரி அரிசியையும் கரகரப்பாக அரைத்துக் கொள்ளவும்.
வெங்காயம், பச்சை மிளகாய், கொத்தமல்லி இலை, புதினா இவற்றை சிறியதாக நறுக்கிக் கொள்ளவும்.
வாணலியில் எண்ணெய் ஊற்றி இறாலை வதக்கவும்.
இறாலில் மஞ்சள் தூள், மிளகாய்த் தூள், காரம் மசாலா, இஞ்சி, உள்ளி விழுது சேர்த்து 5 நிமிடம் நன்கு கிளறவும்.
5 நிமிடத்துக்குப் பிறகு அதில் நறுக்கிய வெங்காயம், மல்லி, புதினா, துருவிய தேங்காயை சேர்த்து மேலும் 3 நிமிடம் கிளறவும்.
இறால் விழுது தயாரானவுடன் அதனை ஆறவிடவும்.
ஆறியவுடன் அதில் அரைத்த அரிசி மாவைச் சேர்த்து கிளறி உருண்டையாக பிடித்து 15 நிமிடம் அவிக்கவும். வெந்ததும் எடுத்து பரிமாறவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ரஜினி, விஜய்க்கு அடுத்த இடத்தை பிடித்த சிம்பு

கௌதம் மேனன் இயக்கத்தில் சிம்பு, மஞ்சிமா மோகன், பாபா கேல், சதீஷ் உள்ளிட்டோர் நடித்த அச்சம் என்பது மடமையடா படம் கடந்த நவம்பர் 11ஆம் திகதி வெளியானது.

500, 100 ரூபா நோட்டுக்கள் செல்லாது என்ற அறிவிப்பால் இதன் வசூலுக்கு தடை ஏற்படும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனாலும் இந்தப் படம் ரசிகர்களிடையே வரவேற்பைப் பெற்று வசூலை அள்ளி வருகிறது.

3 நாள்களில் மட்டும் தமிழகமளவில் ரூ. 14 கோடியை இந்தப் படம் வசூல் செய்துள்ளதாம்.

மேலும் சென்னை வசூலில் முதல் வார முடிவில் ரஜினியின் கபாலி, விஜயின் தெறி ஆகிய படங்களுக்கு பிறகு 3வது இடத்தை பிடித்துள்ளதாம். இதற்குப் பிறகுதான் இருமுகன், வேறு சில படங்கள் உள்ளதாக தெரிய வந்துள்ளது என சினிமா வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.



## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



**மேடம்:** சொந்தப் பணியில் மட்டும் கவனம் செலுத்தவும். தொழில் வியாபாரத்தில் ஆதாயம் சராசரி அளவில் இருக்கும். பணியாளர்கள் பணிச் சுமையை சமாளிக்க முடியாமல் திணறுவர். உறவினர் வகையில் திடீர் செலவு ஏற்படலாம்.

**இடபம்:** இஷ்டதெய்வ வழிபாடு சிறப்பாக நடந்தேறும். தொழில் வியாபாரத்தில் வியத்தகு வளர்ச்சி உருவாகும். தாராள லாபம் கிடைக்கும். மனைவி விருப்பம் அறிந்து நிறைவேற்றுவீர்கள். மாணவர்கள் அக்கறையுடன் படிப்பர்.

**மிதுனம்:** எவரிடமும் வாக்குவாதம் செய்ய வேண்டாம். தொழில் வியாபாரத்தில் மிதமான லாபம் கிடைக்கும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர். பெண்களுக்கு தாய் வீட்டாரின் ஆதரவு உண்டு.

**கடகம்:** மனதில் இருந்த தயக்கம் விலகும். தொழில்வியாபாரவளர்ச்சியால்தாராளபணவரவு கிடைக்கும். பணியாளர்கள் விண்ணப்பித்த கடனுதவி கிடைக்கும். மாணவர்கள் கல்வி வளர்ச்சி காண்பர்.

**சிங்கம்:** மனதில் தன்னம்பிக்கை வளரும். தொழில் வியாபாரத்தில் இடர் விலகி வளர்ச்சி அதிகரிக்கும். பணியாளர்கள் பணிச்சுமையில் இருந்து விடுபடுவர். உறவினருக்கு கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவீர்கள்.

**கன்னி:** உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும். உழைப்புக்கேற்ப வருமானம் கிடைக்கும். ஆரோக்கிய வியத்தில் அக்கறை தேவை.

**துலாம்:** உங்களின் யதார்த்த பேச்சு சிலர் மனதை கஷ்டப்படுத்தலாம். தொழில் வியாபாரத்தில் போட்டி அதிகரிக்கும். லாபம் சுமார். பெண்கள் நகை, பணத்தை விழிப்புடன் பாதுகாக்கவும். திடீர் வெளியூர் பயணம் செல்ல நேரிடலாம்.

**விருச்சிகம்:** இஷ்ட தெய்வ வழிபாடு சிறக்கும். நீண்டநாள் எதிர்பார்ப்பு இனிதே நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் கூடுதல் மூலதனம் செய்வீர்கள். லாபம் பன்மடங்கு உயரும். புத்திரர் விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள்.

**தனுசு:** திறமையுடன் செயற்பட்டு பணியை எளிதாக்குவீர்கள். தொழில் வியாபாரத்தில் வளர்ச்சிக்கான வாய்ப்புக் கிடைக்கும். நிலுவைப் பணம் வசூலாகும். ஆரோக்கியம் பலம் பெறும். பணியாளர்களுக்குச் சலுகை கிடைக்கும்.

**மகரம்:** மாறுபட்ட சூழ்நிலையை எதிர்கொள்வீர்கள். தொழில் வியாபாரத்தில் இடையூறுகளை சரிசெய்வது நல்லது. லாபம் சுமாராக இருக்கும். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும். மாணவர்களுக்கு படிப்பில் அக்கறை தேவை.

**கும்பம்:** வீண் பேச்சை தவிர்ப்பது நல்லது. தொழிலில் ஆதாயம் சராசரி அளவில் இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமையால் அவதிப்படுவர். உறவினர் வருகையால் வீட்டுச் செலவு அதிகரிக்கும். குடும்பத்தினரின் ஆதரவு கிடைக்கும்.

**மீனம்:** பேச்சில் இனிமை நிறைந்திருக்கும். தொழில் வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி ஏற்படும். சேமிக்கும் விதத்தில் வருமானம் வரும். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர். நண்பர்கள் மூலம் உதவி கிடைக்கும்.




“என் பொண்டாட்டிக்கு வைர நெக்லஸ் வாங்கிக் கொடுத்தேன்.. அதுக்கு ஆறு மாசம் என்கிட்ட பேசவேயில்ல... ஏன் சொல்லு?

“என்ன! நெக்லஸ் டுப்ளிகேட்டா...”

“யோவ்... பேசாம இருக்குறதுக்கு தான்யா அந்த டீலு...”

## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 1 | 5 | 6 | | 2 | |
| 2 | | | | 8 | | 5 | | 4 |
| | | 8 | | | 2 | | | |
| | | | | | | 7 | | 2 |
| | 3 | | | 7 | | | 9 | |
| 9 | | 6 | | | | | | |
| | | | 5 | | | 9 | | |
| 5 | | 3 | | 1 | | | | 6 |
| | 1 | | 8 | 9 | 3 | | | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 9 | 8 | 3 | 7 | 4 | 2 | 5 | 1 |
| 5 | 3 | 1 | 9 | 2 | 6 | 4 | 8 | 7 |
| 2 | 7 | 4 | 5 | 8 | 1 | 6 | 9 | 3 |
| 3 | 8 | 5 | 4 | 1 | 2 | 7 | 6 | 9 |
| 4 | 1 | 6 | 7 | 9 | 5 | 8 | 3 | 2 |
| 9 | 2 | 7 | 8 | 6 | 3 | 5 | 1 | 4 |
| 1 | 4 | 2 | 6 | 5 | 9 | 3 | 7 | 8 |
| 7 | 5 | 9 | 2 | 3 | 8 | 1 | 4 | 6 |
| 8 | 6 | 3 | 1 | 4 | 7 | 9 | 2 | 5 |

சுடோக்கு ஒரு எண் விளை யாட்டு. தர்க் கரீதியான ஒழுங்கு படுத் தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட் டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற் கனவே நிரப்பப் பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப் படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.







**கருத்து கணேசன்**

இழந்ததை உடனே கொடுத்தால் அதன் அருமை நமக்கு புரியாதென்பதாலேயே சிறு இடைவெளி விட்டு கொடுக்கிறார் கடவுள்.




ஓவரா பேசற வாயும்....

ரோட்ல சுத்தற நாயும்....

எப்ப வேணாலும் அடி வாங்கும்....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சூழ்ச்சிகள் குறித்து அரசு மிக அவதானம்

அவதானம் செலுத்தியுள்ளனர். இவ்வாறு அமைச்சரவை இணைப் பேச்சாளரும், ஊடகத் துறை அமைச்சருமான கயந்த கருணாதிலக நேற்றுத் தெரிவித்தார். நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்றுப் புதன்கிழமை நடைபெற்ற வாராந்த அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர்கள் சந்திப்பின்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: நாடு பொருளாதார முன்னேற்றமொன்றை நோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கின்றது. நாட்டினுள் இன மற்றும் மதவாத ரீதியிலான சக்திகள் செயற்பட்டு வருகின்றன. அவ்வாறான சக்திகள் நாட்டை மீண்டும் குழப்பத்தை ஏற்படுத்தும் சூழ்ச்சியில் ஈடுப்பட்டுள்ளன. அண்மையில் இடம்பெற்ற சம்பவங்கள் இதனை எடுத்துக் காட்டுவதாக அமைந்திருக்கின்றன. ஜனாதிபதி மற்றும் பிரதமர் இருவரும் இது தொடர்பில் கவனம் செலுத்தியுள்ளனர். இந்த விடயம் தொடர்பில் நேற்று (நேற்றுமுன்தினம்) அமைச்சரவையிலும் பேசப்பட்டது.

இவ்வாறான நிலமைகளைத் தவிர்த்துக் கொள்வதற்காக அரசு என்ற அடிப்படையில் தேவையான சட்ட மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளை நாம் மேற்கொண்டுள்ளோம். நாட்டின் நல்லிணக்கத்தைப் பாதுகாக்கும் வகையில் அரசினாலும் பாதுகாப்புத் தரப்பினாலும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவ்வாறான சக்திகள் குறுகிய இலாபங்களுக்காக செயற்படுவது பற்றி புரிந்துகொண்டும் நாட்டைப் பற்றிச் சிந்தித்தும் செயற்படுமாறு ஊடகங்களிடம் நாம் கேட்கின்றோம். இதை நாட்டின் நலன் நிமித்தமான பொறுப்பு என்று கருதி செயற்படுங்கள் - என்றார். (த-5)

## தியேட்டரிலிருந்து வெளியேறினார் தவராசா

தனது அலுவலகத்தினைக் கைவிட்டு வெளியேறினார்.

வடக்கு மாகாணசபை எதிர்க்கட்சித் தலைவர் பதவியிலிருந்து தவராசாவை விலக்கிக் கொள்ளுமாறும் பதிலாக கட்சியின் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த மாகாண சபை உறுப்பினர் தவநாதனை அந்தப் பதவிக்கு நியமிக்குமாறும் ஈ.பி.டி.பி. கட்சியின் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ்தேவானந்தா, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிடம் அனுமதிகோரியிருந்தார். இந்த நிலையிலேயே தவராசா தியேட்டரிலிருந்து வெளியேறினார்.

தனது பாவனைக்காக டக்ளசினால்வழங்கப்பட்டிருந்த பொலிஸ் திணைக்களத்திற்குச் சொந்தமான பிக்கப் வாகனத்தினையும் கொழும்பில் உள்ள பொலிஸ் தலைமையகத்தில் கொண்டு சென்று சி.தவராசா கையளித்ததாக அறிய முடிந்தது.

கைதடியிலுள்ள வடக்கு மாகாண சபைக் கட்டடத் தொகுதியில் மாகாண எதிர்க்கட்சித் தலைவருக்கு என அலுவலகம் ஒன்று உள்ளது. (வ-4,101)

## 26 வருடங்களாக இப்படி ஓர் அவல வாழ்க்கையா?

### நலன்புரிநிலைய மக்களிடம் நேற்று தென்பகுதி மக்கள் ஏக்கத்துடன் கேள்வி

ணக்கக் குழுவின் ஏற்பாட்டில் வந்திருந்த தென்பகுதி மக்கள், வலி. வடக்கு மக்கள் இடம்பெயர்ந்து தங்கியுள்ள சபாபதிப்பிள்ளை நலன்புரி நிலையம், கண்ணகி நலன்புரி நிலையம் என்பவற்றை நேரில் சென்று பார்வையிட்டனர். முகாம்களில் தங்கியுள்ள மக்களுடன் கலந்துரையாடினர்.

2004 ஆம் ஆண்டு இடம்பெற்ற சுனாமிப் பேரலையின் போது பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசினால் நிவாரணங்கள் வழங்கப்பட்டு அவர்களின் குடியிருப்புக்கள் திருத்தியமைக்கப்பட்டுள்ளன. ஆனால் நீங்கள் ஏன் இவ்வாறு முகாம்களில் வசிக்கின்றீர்கள்? உங்கள் சொந்த இடங்கள் எங்கே உள்ளன? அரசு உங்களுக்குரிய நடவடிக்கைகள் எதுவும் எடுக்கவில்லையா? என்று நலன்புரி நிலைய மக்களைக் கேட்டனர்.

அதற்கு முகாம் மக்கள், 26 ஆண்டுகளாக இங்குதான் தங்கியுள்ளோம். நாட்டில் இறுதிப்போர் நிறைவடைந்தும் இன்று வரை எமது சொந்த இடங்கள் விடுவிக்கப்படவில்லை. எமது பிரதேசங்கள் அனைத்தும் இராணுவத்தின் முழுமையான கட்டுப்பாட்டில் உள்ளன. இது தொடர்பில் அரசுக்கும் பன்னாட்டுச் சமூகத்துக்கும் பலமுறை தெரிவித்திருக்கின்றோம். எமது நிலங்களை விடுமாறு போராட்டங்களிலும் ஈடுபட்டோம்.

எமக்குரிய தீர்வை முந்தைய அரசும் தற்போதைய நல்லாட்சி அரசும் முன்வைக்கவில்லை. எமது நிலங்களை விடுமாறு நாம் போராடும் போதெல்லாம் அரச தலைவர்கள், தென்பகுதி மக்கள் இதற்கு எதிராக குரல் கொடுக்கின்றனர் என்று தெரிவிக்கின்றனர்-என்று கூறினர்.

இதற்குப் பதிலளித்த தென்னிலங்கை மக்கள், நாம் ஒருபோதும் அவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடவில்லை. நீங்கள் உங்களுடைய சொந்த மண்ணிலேயே மீண்டும் வாழ விரும்புகின்றீர்கள். அதனைத் தடுக்க எவருக்கும் உரிமை இல்லை. தென்னிலங்கையில் உள்ள சில அரசியல்வாதிகளும் இனவாதிகளுமே இவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர்.

வட பகுதி மக்கள் எவ்வாறானவர்கள் என்பதை அறிய விரும்பின் தென்பகுதி மக்களை வடக்குக்கு நேரில் செல்லுங்கள் அங்கு முகாம்களில் வாழும் மக்கள் படும் துன்பங்களையும் துயரங்களையும் நேரில் சென்று பாருங்கள் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்திருந்தார். அதனையும் தென்பகுதி இனவாதிகள் சிலர் விமர்சித்தனர். ஆனால் நாம் தற்பொழுது நேரில் வந்து உங்களின் நிலமையை நேரில் கண்டு மிகவும் மனம் வருந்துகின்றோம். இவ்வாறு அல்லல்படும் மக்களையா பயங்கரவாதிகள் என்கின்றனர் என்று தெரிவித்து தமது கவலையை வெளியிட்டனர். (த-5-8)

## வடபகுதி மக்கள் குறித்து தெற்கு இனவாதிகள் புரளி

### நேரில் வந்து பார்வையிட்ட பின் தென்னிலங்கை மக்கள் விசனம்

மாத்தறையிலிருந்து நல்லிணக்கக் குழுவின் ஏற்பாட்டில் வந்திருந்த தென்பகுதி மக்கள், யாழ்ப்பாணத்தில் பல்வேறு இடங்களையும் பார்வையிட்டனர். தமது நல்லிணக்க நிகழ்வுகளை நிறைவு செய்துகொண்டு தமது சொந்த இடங்களுக்கு திரும்பும் முன் தமது அனுபவங்கள் தொடர்பில் விவரிக்கையில்,

நாம் வடக்குக்கு வரும்போது மிகவும் பயத்துடனேயே வந்தோம். எமது நிகழ்வின் முதலாவது நாளன்று யாழ். மாவட்டச் செயலகத்தில் ஒன்று கூடினோம். அப்போது மாவட்டச் செயலக அதிகாரிகள் யாழ். மக்கள் மிகவும் இனிமையானவர்கள், வரவேற்பதில் சிறந்தவர்கள் என்று எம்மிடம் கூறினர்.

அப்போது எமக்கு இருந்த பயம் அகன்றபோதிலும் மனதளவில் எமக்குள்ளே சிறிய படபடப்பு இருந்தது. நாம் யாழ்ப்பாண மக்களின் வீடுகளில் அவர்களுடன் எமது பொழுதைக் கழித்தோம். அப்போது அவர்கள் எம்மை வரவேற்ற விதம், அவர்கள் எங்கள் மீது காட்டிய அக்கறை அனைத்தும் எம்மை வியப்பில் ஆழ்த்தியது. அந்த நொடியிலிருந்தே வடக்கு மக்கள் மீது இருந்த பயம் நீங்கி அவை அனைத்தும் தென்னிலங்கை இனவாதிகளின் பொய்ப் புரளி என்பதை நாம் உணர்ந்தோம்.

வடக்கு மக்கள் மீது நாம் கொண்டிருந்த தவறான புரிந்துணர்வு அனைத்தும் இல்லாது போய்விட்டது. வடக்கு மக்கள் நாம் தங்கி நின்ற குறுகிய நாள்களில் காட்டிய அன்பு மேன்மையானது. அவர்கள் எங்களை மீண்டும் வாருங்கள். நீங்கள் எப்போதும் எங்களிடம் வரலாம். வரும்போது உங்கள் குடும்பங்கள், உறவினர்கள் எல்லோரையும் கூட்டி வாருங்கள் என்று கூறியுள்ளனர். நாம் இதனை வரவேற்கின்றோம். இதே மனோ நிலை தென்பகுதி மக்களிடமும் வரவேண்டும்.

அடுத்த மாதமளவில் வட பகுதி மக்கள் எமது பிரதேசத்துக்கு வருவார்கள் என நினைக்கின்றோம். அவர்களை நாம் வரவேற்பதற்காகக் காத்திருக்கின்றோம் - என்றனர். (த-5-8)

## சி.ஐ.டி. பொறுப்பாளரை கைது செய்யவேண்டும்

### மனித உரிமை அமைப்புக்கள் சுவிஸ் அரசிடம் வலியுறுத்தல்

மெண்டிஸ் 2008 முதல் 2009 வரை பயங்கரவாத விசா ரணைப் பிரிவின் தலைவராகச் செயற்பட்டவர். குற்றப் புலனாய்வுப் பிரிவின் பிரதிப் பொலிஸ்மா அதிபராகவும் செயற்பட்டவர். இந்த இரு அமைப்புகளும் சித்திரவதைக்குப் பெயர் போனவை. ஜெனிவா அமர்வில் கலந்துகொள்வதற்கு அவரை அனுப்பியதன் மூலமாக இலங்கையின் சித்திரவதைக்குள்ளானவர்களின் உணர்வுகளுக்கு அவமானத்தை அரசு ஏற்படுத்தியுள்ளது.

பன்னாட்டு அதிகார வரம்பின் அடிப்படையில் சுவிஸ் அரசு மெண்டிஸை தடுத்து வைத்து விசாரணைகளை மேற்கொள்ளுமாறு நாங்கள் கேட்டுக் கொள்கின்றோம். அவருக்கு எதிரான சித்திரவதைகள் குறித்த குற்றச்சாட்டுகள் பற்றிய முழுமையான விசாரணைகள் இடம்பெறும்வரை அவர் இலங்கை திரும்புவதற்கு அனுமதிக்கக் கூடாது என்று அந்த அமைப்புக்கள் கேட்டுக் கொண்டுள்ளன.

இதேவேளை, இறுதிக் கட்டப் போரின் போது ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடகத்துறையுடன் தொடர்புடைய பணியாளர்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்ட கொடூரமான வன்முறைகள் தொடர்பில் தேசிய புலனாய்வுத் துறையின் தலைமை அதிகாரியிடம் விசாரணை நடத்தப்பட்ட வேண்டும் என்று எல்லைகள் அற்ற ஊடகவியலாளர் அமைப்பும், இலங்கையின் ஜனநாயகத்திற்கான ஊடகவியலாளர் அமைப்பும், சித்திரவதைகளுக்கு எதிரான ஐ.நா. குழுவிடம் கோரிக்கை விடுத்துள்ளன. (வ-5)

## எலிக்காய்ச்சலால் கிளிநொச்சியில் விவசாயி சாவு

இருக்குமாறு சுகாதாரப் பகுதியினர் எச்சரித்துள்ளனர்.

கிளிநொச்சி மருத நகரைச் சோந்த மாரிமுத்து விசுவநாதன் (வயது - 57) என்பவரே நேற்றுமுன்தினம் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை வயல் விதைப்பில் ஈடுப்பட்டார். பின்னர் காய்ச்சல் காரணமாக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். இந்தநிலையில் 3ஆவது நாள் அவர் உயிரிழந்தார். உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் உடல் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. அவரது உடற்பாகங்கள் இழையவியல் பரிசோதனைக்காகக் கொழும்புக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என்று கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனவே இது தொடாபில் பொது மக்களை அவதானமாக இருக்குமாறும், குறிப்பாக விவசாயிகள் இந்த விடயத்தில் மிக விழிப்பாக இருக்குமாறு மாவட்ட சுகாதாரத் துறையினர் எச்சரித்துள்ளனர்.

எலிக்காய்ச்சல் ஒரு பக்ரீரியா எனும் நுண்ணுயிர் வகையைச் சேர்ந்த கிருமியால் உருவாகிறது. இந்தக் கிருமி தொற்றிய எலிகளின் சிறுநீர் ஊடாகவே குறித்த பக்ரீரியா வெளிச் சூழலுக்கு வந்து சேர்கிறது. இவ்வாறு வெளியேறிய பக்ரீரியாவானது வயல்களில் காணப்படும் சிறு கிடங்குகளில் நிற்கும் நீரிலும், வயல்களில் தேங்கியுள்ள நீர்ப்பரப்புகளிலும் தங்கிவிடுகிறது. அந்தப் பக்ரீரியா ஏற்கனவே தோலில் இருக்கும் காயங்கள் மற்றும் வயலில் வேலை செய்யும்போது ஏற்படக்கூடிய சிறு தோல் சிராய்ப்புக் காயங்கள், புண்கள், தோல் உராய்வுகள் என்பன வழியாக மனித உடலுக்குள் நுழைகிறது.

வயல்களுக்கு அண்மையில் நீர் தேங்கியுள்ள குளம், குட்டைகளில் குளிக்கும்போது அந்த நீர்நிலைகளில் காணப்படும் பக்ரீரியாவானது கண்களில் உள்ள மென்சவ்வுகள் ஊடாக மனித உடலுக்குள் நுழைகிறது. அதனால்தான் வயல்களில் இறங்கி வேலைசெய்யும் விவசாயிகளுக்கு இந்த நோய் தொற்றும் அபாயம் அதிகமாக உள்ளது. அத்தோடு வேறுதேவைகளுக்காக வயல்களில் இறங்கும் ஏனையவர்களுக்கும் இந்தநோய் தொற்றும் அபாயம் காணப்படுகிறது.

இந்தக் கிருமித் தொற்றுக்கு உள்ளாகியிருந்தால், பின்வரும் அறிகுறிகள் காணப்படும். அதாவது, காய்ச்சல், உடம்பு உளைச்சல், அல்லது உடல்வலி, தலையிடி, உடல் களைப்பு, அல்லது உடல் அலுப்பு போன்ற முக்கிய நோய் அறிகுறிகளுடன், கண் சிவத்தல், வாந்தி, கடும் மஞ்சள் நிறத்தில் சிறுநீர் வெளியேறுதல், சிறுநீருடன் இரத்தம் கலந்து வெளியேறுதல், சிறுநீர் வெளியேறுவது குறைதல் ஆகியனவும் நோய் அறிகுறிகளாக இருக்கலாம். ஆனால் சில நோயாளிகளுக்கு எந்த ஒரு குணம் குறியும் தென்படாது. எனவே உடனடியாக வைத்தியசாலையை நாடி உரிய சிகிச்சை பெறவேண்டும் என்று மருத்துவர்கள் அறிவுறுத்துகின்றனர். (வ-4,3)

## பிக்குவைக் கண்டித்து கறுப்புப் பட்டிப் போர்

ஒன்றிணைந்து கறுப்புப் பட்டி எதிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 14 பிரதேச செயலகப் பிரிவுகளிலும் கடமையாற்றும் சுமார் 350க்கு மேற்பட்ட கிராம அலுவலர்கள் இந்தக் கறுப்புப் பட்டி எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். சிறுபான்மை இன அரச அலுவலர்களையும், சிறுபான்மை சமூகங்களையும் இழிவுபடுத்தும் வகையில் நடந்துகொண்ட மட்டக்களப்பு மங்களராமய விகாராதிபதி அம்பிட்டிய சுமணரத்ன தேரருக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு கோரியே இந்தப் போராட்டம் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-[illegible])

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனித்தன்மைக்குரிய பிராந்திய நாமமாக டிஜே (Teejay) அறிமுகம்



புடைவைகைத்தொழிற்றுறையில் இதுவரைகாலமும் சிறப்பான உற்பத்திகளை சந்தைக்கு வழங்குவதில் முன்னணியில் திகழ்ந்த ரெக்சேட் ஜெர்சே (Textured Jersey) அண்மையில்தனது புதிய தனித்தன்மைக்குரிய பிராந்திய வர்த்தக குறியீட்டு நாமமாக டிஜே (Teejay) இனை அறிமுகம் செய்துள்ளது.
அந்தவகையிலே தற்போது அறிமுகம் பெற்றுள்ள வர்த்தக குறியீட்டு நாமமானது குழுமத்துக்குள் தனித்தன்மைகளை வெளிப்படுத்தி நிற்பதுடன் அனைத்துவகையான நிறுவன நடைமுறை அம்சங்களையும் ஒருங்கிணைப்பதாக அமையும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
இதன்பிரகாரம் தாய் நிறுவனமாக விளங்கும் டிஜே லங்கா பி.எல்.சி ஆனது தனது அதிகார வரம்பினுள் கொள்வனவு செய்த நிறுவனங்களை டிஜே பிறிண்ட எனவும் டிஜே இன்டியா எனவும் குழுமத்தின் வர்த்தக குறியீட்டு நாமம் கொண்டு இனிவரும் காலங்களில் அழைக்கப்படும்எனதெரிவித்துள்ளது.
16 வருடங்களுக்கு முன்பதாக ஆரம்பிக்கப்பட்ட டிஜே இன்றுவரை நீண்ட பயணத்தை கடந்து வந்துள்ளது. வர்த்தகரீதியில் நோக்குமிடத்து, சிறந்த வாடிக்கையாளர் பங்காளியாக விளங்குகிறது.
தற்போதைய புதிய வர்த்தக குறியீட்டு நாமமானது சரியான தடத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ள மற்றுமொரு நகர்வாகும் என ஹொங்கொங்கை தளமாகக்கொண்ட டிஜே நிறுவனத்தினதும் பசுபிக் டெக்ஸ்டைல்ஸினதும் தலைவராக திகழும் பில்லாம் இன் உரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**புடைவை கைத்தொழிற்றுறையில் ஆசிய பிராந்தியத்தின் மிகப் பெரிய ஊடு பின்னப்பட்ட புடைவை (Weft Knit Textile) உற்பத்தி நிறுவனமான டிஜே (Teejay) எனும் புதிய வர்த்தக குறியீட்டு நாமத்தை வெளியிட்டது.**




"பிசினஸ் டுடே சஞ்சிகையினால் மிகச்சிறந்த 30 நிறுவனங்களுள் ஒன்றாக இந்நிறுவனம் தரப்படுத்தப்பட்டுள்ளதுடன் வருமானத் திரள்வின் அடிப்படையில் எல்.எம்.டி. சஞ்சிகையின் முதல் 50 நிறுவனங்களில் ஒன்றாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது."

# இலங்கைக்கு 221.85 பில்லியன் ரூபா கடன் உதவி

## சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுக்குழு அனுமதி

இலங்கைக்கான கடன் உதவியாக 221.85 பில்லியன்ரூபாக்களைவழங்குவதற்கான அனுமதியை சர்வசே நாணய நிதியத்தின் நிறைவேற்றுக்குழு வழங்கியுள்ளது.
நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவின் அறிவுறுத்தலுக்கு அமைவாக ஏழு தவணைகளில் இந்தக் கடன் தொகையை வழங்குவதற்கு சர்வதேச நாணய நிதியம் திட்டமிட்டுள்ளது.
இதன்படி ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செய்ற்பாடுகளுக்கிடையே ஏற்படும் நிலுவைத் தொகையைச் செலுத்துவதற்கு தேவை ஏற்டும் படசத்திலே பயன்படுத்துவதற்கான முன் ஏற்பாடகவே இந்தக் கடன் உதவி வழங்கப்படவுள்ளது.
இந்தநிலையிலே கடன் உதவிக்கான அனுமதி வழங்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் சர்வதேச நாணய நிதியமானது நாட்டின் நிதிக்கொள்கை மற்றும் நிலுவை தொடர்பில் எதிர்பார்க்கும் சில நோக்கங்கள் குறித்த யோசனைகளை முன்வைத்துள்ளது.
பிரதானமாக வருமானத்தை அதிகரித்து



வரவு மற்றும் செலவில் இடைவெளியைக் குறைத்தல், மத்திய வங்கியின் சர்வதேச இருப்பு குறைவடைதலைத் தடுத்தல், மொத்ததேசியஉற்பத்திபுடன்ஒப்பிடுகையில் அரச கடனை குறைத்தல், கடனால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களை தடுத்தல், அரச நிதி முகாமைத்துவம் மற்றும் அரச திட்டங்களின் செயற்பாடுகளை மேம்படுத்தல்என்பன இந்தயோசனைகளினுள் உள்ளடக்கப்பட்டுள்ளது.
அத்துடன் பண வீக்கத்தைக் கட்டுப்படுத்துவதை இலக்காகக் கொண்டு நெகிழ்ச்சித் தன்மையுடைய செலாவணி விகிதத்தை அறிமுகப்படுத்தல் மற்றும் அனைத்து மக்கள் பிரிவினருக்குமான நிரந்தரப் பொருளாதார அபிவிருத்தியை அடைதல் போன்ற விடயங்களும் உள்வாங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இவைதவிர மேற்குறிப்பிட்ட இலக்குகளை அடைவதற்கு முன்னெடுக்கப்பட வேண்டிய நான்கு விடயங்கள் தொடர்பிலும் சர்வதேச நாணய நிதியம் சுட்டிக்காட்டியுள்ளது.
அரச நிதி ஒருங்கிணைப்பை முன்னெடுத்துச் செல்லுதல், வருமானத்தை உரிய முறையில் பயன்படுத்துதல், அரச நிதி முகாமைத்துவத்தின் போது திருத்தம், அரச திட்டங்களை மீளக்கட்டமைத்தல், நெகிழ்ச்சித் தன்மையுடைய பண வீக்கம் மற்றும் நெகிழ்ச்சித் தன்மையுடைய செலாவணி விகிதத்தைப் பேணுதல் மற்றும் வர்த்தக, முதலீட்டுத் துறைகளை மீளக் கட்டமைத்துக் கொள்ளுதல் என்பனவே அந்த விடயங்களாக குறித்துக் காட்டப்பட்டுள்ளது.




# டீசலுக்கு மாற்றீடான புதிய வகை எரிபொருள்

தேங்காய் தூள் மற்றும் எல்கி ஆகியவற்றை பயன்படுத்தி டீசலுக்கு மாற்றீடான புதிய வகை எரிபொருள் ருகுணு பல்கலைக்கழக விவசாய விஞ்ஞான பீடத்தின் மூத்த விரிவுரையாளர் சின்னா ரூபசிங்கவின் தலைமையிலான குழுவினால் கண்டறியப்பட்டுள்ளது.
இதன்பிரகாரம் டீசலுக்கு இணையான வினைத்திறனை புதிய எரிபொருள் கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
உலகில் தற்போது நிலவி வருகின்ற மிகப் பிரதானமான பிரச்சினைகளுள் ஒன்றாக எரிபொருளுக்கான அருமைத்தன்மையும் அதன் பற்றாக்குறையும் காணப்படுகின்றது.
அதனை நிவர்த்திப்பதற்கான முயற்சியில் பல நாடுகளும் ஈடுபட்டு வருகின்றது. இந்தநிலையிலே இலங்கையை சேர்ந்த விஞ்ஞானிகளால் கண்டறியப்பட்டுள்ள புதிய எரிபொருளைத் தயாரிக்கும் முறைமையானது உலக நாடுகள் தற்போது எதிர்நோக்கியிருக்கும் எரிபொருள் நெருக்கடிகளைச் சரிசெய்யும் தீர்வாக அமையலாமென நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளது.



CSE COLOMBO STOCK EXCHANGE

பங்குச் சந்தை தகவல்கள்

| 16/11/2016 | | | |
|---|---|---|---|
| www.cse.lk | | | |
| சுட்டிகள் | | இன்று | நேற்று |
| ASPI | -57.13 | 6,349.03 | 6,406.16 |
| S&P SL20 | -51.87 | 3,531.92 | 3,583.79 |
| வியாபாரப்புரள்வு | | 514,076,192 | 470,275,296 |
| உள்நாடு- கொள்வனவு | | 387,186,432 | 245,734,784 |
| விற்பனை | | 307,616,448 | 120,288,584 |
| வெளிநாடு- கொள்வனவு | | 126,889,744 | 224,540,512 |
| விற்பனை | | 206,459,728 | 349,986,688 |



| அதிகூடிய பங்குப்பரிமாற்றம் கம்பனி | குறியீடு | இறுதி விலை | பங்குகள் | புரள்வு (Rs) |
|---|---|---|---|---|
| ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் | JKH.N0000 | 147 | 1,559,622 | 229,263,331 |
| டயலொக் | DIAL.N0000 | 10.5 | 3,669,820 | 39,575,737 |
| பிரவுன்ஸ் இன்வெஸ்ட்மென்ட்ஸ் | BIL.N0000 | 1.3 | 21,201,483 | 29,682,066 |
| டெக்ஸ்டைல் ஜேர்ஸி | TJL.N0000 | 45 | 611,904 | 27,545,870 |
| ஹற்றன் நஷனல் வங்கி | HNB.X0000 | 190 | 85,253 | 16,198,073 |
| ஆசிரி ஹோல்டிங்ஸ் | ASIR.N0000 | 28.3 | 361,191 | 10,450,258 |
| சிலோன் கிரேன் எலெவேட்டர்ஸ் | GRAN.N0000 | 87 | 117,381 | 10,329,153 |
| கொமர்சியல் வங்கி | COMB.N0000 | 141.6 | 66,301 | 9,454,262 |
| பீப்பில் லீசிங் & பைனான்ஸ் | PLC.N0000 | 17.5 | 459,216 | 8,044,594 |
| சம்பத் வங்கி | SAMP.N0000 | 262 | 29,844 | 7,838,921 |

அறிவித்தல்கள்
பங்குலாபம்
சிலோன் ... (CCS) - பங்கு ஒன்றிற்கு Rs. 8.00
லங்கா ... (LHCL) பங்கு ஒன்றிற்கு Rs. 1.00
... வங்கி (COMB) - பங்கு ஒன்றிற்கு Rs. 1.50

| சந்தைக் குறிகாட்டிகள் | |
|---|---|
| கம்பனிகள் | 294 |
| பரிமாற்றத்தில் | 223 |
| விலை உழைப்பு | 13.02 |
| [illegible] | 1.5 |
| [illegible] | [illegible] |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முஸ்லிம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
செயலாளர் ஞானசார தேரர் எச்சரிக்கை விடுத்துச் சில மணி நேரங்களில், அந்த அமைப்பின் செயலாளர் அப்துல் ராசிக் பொலிஸாரி னால் கைதுசெய்யப்பட்டார். கடந்த 3ஆம் திகதி மாளிகாவத்தையில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது அப்துல் ராசிக் தெரிவித்த கருத்துக்கள் தொடர்பில் மேற்கொள்ளப் பட்ட முறைப்பாட்டுக்கு அமைவாகவே அவர் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்தது. ஏனைய மதத்தை அவமதிக்கும் விதத்தில் அவர் கருத்துக் களை வெளியிட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர். கடந்த 3ஆம் திகதி முஸ்லிம் களின் திருமணம் மற்றும் விவாகரத்து தொடர்பான சட்டங்களில் மாற்றங்களை மேற்கொள்ள அரசு முயல்வதாகத் தெரிவித்து தவ்ஹீத் ஜமாத் கொழும்பில் ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டிருந்தது. ஆர்ப்பாட்டத்தின் போது ராசிக் சர்சைக் குரிய கருத்துக்களை வெளியிட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர். அப்துல் ராசிக்கைக் கைது செய்யவேண்டும் அல்லது மாளிகாவத்தையிலிருந்து இரத்தக் களரியை ஏற்படுத்துவோம் என்று பொதுபலசேனாவின் பொதுச் செயலாளர் ஞானசார தேரர் செவ்வாய்க்கிழமை எச் சரிக்கை விடுத்திருந்தார். (வ-5)

## அநாதரவான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உயிரிழந்தவர்களின் குடும்பத் தினரும் அநாதரவாக உள்ளனர். இவ்வாறு உள் நாட்டலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்தன தெரிவித்தார்.
நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றியபோதே அவர் மேற்கண்ட வாறு குறிப்பிட்டார்.
"மக்கள் விடுதலை முன்னணி யின் கலவரத்தில் அரசுக்கு எதிராகப் போராடி உயிரிழந்தவர் களை நினைவுகூர இடமளித்திருப்பது போன்று போரினால் உயிரிழந்த வர்களை நினைவுகூர இடமளிப்பது குறித்து அரசு கவனம் செலுத்தியுள்ளது. 1971, 1988, 1989, 1990ஆம் ஆண்டு கலவரங்களின் போது அரசுக்கு எதிராகப் போராடி இறந்த வர்களை நினைவுகூர இடமளிக்கப் பட்டுள்ளது. போரின் போது இறந்தவர்களை நினைவுகூர இடமளிப்பது குறித்து கவனம் செலுத்தி வருகின்றோம். கலவரம், போரின்பின் பாதிக்கப்பட்ட வர்களின் வாழ்வாதார மேம்பாடு தொடர்பில் கவனம் செலுத்தவேண்டியது அவசியம் - என்றார். (த-5)


### வேலையாள்கள் தேவை

1. NCT (QS) / NDT (கணியவியலாளர்) or other Equivalent Qualifications
2. Technical Assistant
3. Technical Trainees

தொடர்புகளுக்கு:-
0779583944
E-mail:-beststarcon@hotmail.com
(J/6170)(10.17.19)

### தேவை

எமது நிறுவனத்துக்குப் பின்வருவோர் உடனடியாகத் தேவைப்படுகின்றனர்.

1. தொழில்நுட்ப உத்தியோகத்தர் (Technical Officer) HNDE / NCT (Civil)
2. தொழில்நுட்ப உதவியாளர் (Technical Assistant) HNDE / NCT (QS) படித்துக்கொண்டு இருப்பவர்கள்.

21.11.2016 திங்கட்கிழமை சுயவிரக் கோவையை பின்வரும் விலாசத்துக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.
5th Mile Post, Kopay Center Kopay, Jaffna.

3. உப ஒப்பந்தகாரர் (Sub contractors) -
தொடர்பு கொள்ளவும் 076 979 2771


## கண்ணீர் அஞ்சலி

முல்லை மாவட்ட சி.க.கூ. சமாசத்தின் தலைவர்
திரு. நா.குமாரசிங்கம் அவர்களின் மைத்துனர்
**அமரர் பசுபதி வசந்தகுமார்**

அவர்கள் 14.11.2016 அன்று இறைபதமடைந்துள்ளார். அவரது மறைவையொட்டி துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தி னருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**முல்லை மாவட்ட
சி.க.கூ. சங்கங்களின் சமாச பணிப்பாளர்
சபையினர், பணியாளர்கள்,
அங்கத்துவ சங்கங்கள்.**

(J/6168) (10.17.19)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி தர்மாம்பாள் நடராஜ ஐயர்



தோற்றம்: 06.11.1929
மறைவு: 15.11.2016

யாழ்.மாவிட்டபுரத்தைப் பிறப்பிட மாகக் கொண்ட திருமதி தர்மாம்பாள் நடராஜ ஐயர் 15.11.2016 செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர் களான ஐயாசாமிக்குருக்கள் - சொர்ணாம்பாள் தம்பதிகளின் கனிஷ்ட புத்திரியும், காலஞ்சென்ற நடராஜ ஐயர் அவர்களின் அன்பு மனைவியும், வெண்கட்ரமண ஐயர் (கண்ணன்), தட்ஷணாமூர்த்தி (மூர்த்தி), பத்மாவதி (பட்டு), நரசிம்மன் (கோபி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், வீணாகானவிது பூஷணி (ஜெயா), செல்வி, சண்முகானந்த சர்மா (தம்பி), மாலா ஆகியோரின் மாமியாரும், அபிராமி, பவித்ரா, ராஜாராம், பாலகுமார், ராஜேஷ்வரி, மீனாம்பிகா, லலிதாம்பிகா, பத்மப்ரியா,மெல்பினா ஆகியோரின் பாசமிகு பாட்டியும், சாஷ்விதா, ஸ்ரேயாஷ், வருண்,அமிதேஷ், ஸாகர், ஸபர்ணா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (17.11.2016) வியாழக்கிழமை காலை 8 மணிக்கு யாழ்ப்பாணம் பிரதான வீதியிலுள்ள வைற்ஹவுஸ் மலர்ச்சாலையில் அஞ்சலிக்கு வைக்கப்பட்டு பிற்பகல் ஒரு மணிக்கு கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(J/6159) (11,18,21)

தகவல்: குடும்பத்தினர்.

கண்ணன் - 0094 7737 58832,
பட்டு - 0027 74310 8840

### திருமதி கௌரிதேவி அருந்தவராஜா



தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் வசிப் பிடமாகவும் கொண்ட திருமதி கௌரிதேவி அருந்தவராஜா கடந்த (15.11.2016) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் கந்தையா அருந்தவராஜாவின் (முன்னாள் நலன்புரி உத்தியோகத்தர், ஸ்ரீ லங்கா சீமெந்து கூட்டுத் தாபனம், காங்கேசன் துறை மற்றும் முன்னாள் மாவட்ட ஆணையாளர், சென் ஜோன் அம்புலன்ஸ் படை) பாசமிகு மனைவியும் காலஞ்சென்றவர்க ளான கனகசபை-தனலஷ்மி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கந்தையா-இளையபிள்ளை தம்பதிக ளின் அன்பு மருமகளும் கிருஷ்ணமூர்த்தியின் அன்புச் சகோதரி யும் காலஞ்சென்ற திருமதி மார்ஷல் ஹாட்லி தம்பையா மகேஸ் வரி மற்றும் திருமதி வீரபாகு புவனேஸ்வரி, திருமதி இராம லிங்கம் தவமணி, திருமதி இராமநாதன் பரமேஸ்வரி, திருமதி கிருஷ்ணமூர்த்தி ரட்ணஜோதி ஆகியோரின் மைத்துனியும் காலஞ்சென்ற கிருஸ்ணா மற்றும் நித்தியநர்மதன், காயத்திரி, சயந்திரி ஆகியோரின் அன்புத் தாயும் விஷ்ணுபாலன், பமித்திரா ஆகியோரின் பாசமிகு மாமியாரும் சியானுகா, கிஷான் ஆகியோ ரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.11.2016) வியாழக்கிழமை பி.ப 3.00 மணியளவில் இல. 39/19, மில் லேன், பிரம்படி ஒழுங்கை , கொக்குவிலில் நடைபெற்று பூத வுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத் திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
[illegible]
[illegible]
077 3212512, 077 3099040

(ஜே.6166) (16.17.19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈரவிழிகளுடன் இரண்டு ஆண்டுகள்

எமது அன்பிற்கும்
பாசத்திற்குமுரிய பாசமகன்
அமரர்
**சுரேந்திரன் சதீஸ்கண்ணா**



மலர்வு 19.07.1980
உதிர்வு 10.12.2014


திதி: சங்கடஹர சதுர்த்தி

வசந்தம் வீசும் வாழ்வுப் பாதையிலே
சுகந்த வீசும் உறவுகள் சூழ்ந்து
செல்லப்பிள்ளையாக வாழ்ந்தவேளை
இளமையிலே முடிவெழுதி கவர்ந்ததேனோ?
மாறாத சோகமுடன் மனமுருகி புலம்புகின்றோம்
கனத்த இதயமுடன் கண்ணீரால் அஞ்சலிக்கின்றோம்
ஆண்டுகள் இரண்டு ஆனபோதும்
ஆறவில்லை எம்மனம் காயவில்லை எம் ஈரவிழிகள்.

(ஜே.6169) (16.17.19)

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்



மலர்வு 11.06.1937
உதிர்வு 11.11.2016

### வேலன் கிருஸ்ணர்

அந்திரான் சண்டிலிப் பாயைப் பிறப்பிடமாகக் கொண்ட வேலன் கிருஸ்ணர் 11.11.2016 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தவமணியின் அன்புக்கணவரும் சுரதீபன் (பிரான்ஸ்), பிரதீபன் (பிரான்ஸ்) ஆகியோரின் தந்தையும் சந்திரசேகரம் (சுவிஸ்) அவர்களின் சிறிய தந்தையும் மகாலக்ஷ்மி (பிரான்ஸ்), பாலதர்சினி (பிரான்ஸ்), அசோகநாயகி (சுவிஸ்) ஆகியோரின் மாமனாரும் சுபஸ்ரிகா (பிரான்ஸ்), ஆருஜன் (பிரான்ஸ்), லூபின்சன் (சுவிஸ்) ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.11.2016) வியாழக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


அந்திரான்.
சண்டிலிப்பாய்.

தகவல்:
மகன் (தேவராசா)

(ஜே/6162)(17.19.20)

### இராசையா இராஜேஸ்வரன்

(உரிமையாளர் - கருடா தேநீர்ச்சாலை, நவீன சந்தை யாழ்ப்பாணம்)



தாவடி பாடசாலையடியைப் பிறப்பிடமாகவும், ஈச்சமோட்டையை வசிப் பிடமாகவும் கொண்ட இராசையா இராஜேஸ்வரன் 15.11.2016 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் இராசையா - நல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சிவகுரு சண்முகலிங்கம் மற்றும் கனகமணி தம்பதியரின் மருமகனும் கோமதிதேவியின்(மதி) அன்புக் கணவரும் ஜெயந்தா(France), திவாகரன், சஜந்தன் ஆகியோரின் தந்தையும் சபேசனின் மாமனும் சஜேய், சஞ்சேய் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

96, ஈச்சமோட்டை வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

021 222 2491/ 075 040 3137

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT


## மரண அறிவித்தல்

### முருகவேல் சுந்தரராஜன்



தோற்றம் 15 . 04 . 1960

மறைவு 15 . 11 . 2016

சுழிபுரம் பறாளாய் வீதியைப் பிறப்பிடமாகவும் ஜேர் மனியை வசிப்பிடமாகவும் கொண்ட முருகவேல் சுந்தரராஜன் ஜேர்மனியில் 15.11.2016 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகவேல்- சரோஜினி தம்பதியரின் பாசமிகு புத்திரனும், திரு.திருமதி சிவலிங்கம் மாங்கையற்கரசி தம்பதியரின் அன்பு மருமகனும், சிவபுஷ் பாவின் ஆருயிர்க் கணவரும், சறோன், சந்தோஷ் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 30.11.2016 அன்று ஜேர்மனியில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உற வினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி.அருணாசலம்
த.வேதநாயகம்
021 225 1408
குணாளன் சிவகங்கா
078 613 0613

பறாளாய் வீதி,
சுழிபுரம்.

(ஜே.6158) (13.17.21)


### உப...

குருநாகல் ரத்கருவ பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இரவு இந்தச் சம்பவம் நடைபெற்றது.

குருநாகல் ரத்கருவ பிரதேசத்தில் கடத்தி வந்த காரொன்று உள்ளதாக நேற்றுமுன்தினம் இரவு 6.30





மணி அளவில் குருநாகல் பொலிஸ் நிலையத் தொலை பேசி இலக்கத்திற்குத் தகவல் கிடைத்தது. இதனை அடுத்துக் கடமையில் இருந்த பொலிஸார் அந்த இடத்துக்குச் சென்று பரிசோதனை மேற்கொண்ட போது சம்பவத்துடன் தொடர்புடைய இரு சந்தேகநபர்களைக் கைது செய்ய முயற்சி மேற்கொள்ளப் பட் டுள்ளது. இதன்போது சந்தேக நபர்கள் பொலிஸார் மீது துப்பாக்கிச் சூடு நடத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி குருநாகல் குற்றவிசாரணைப் பிரிவில் சேவையாற்றுகின்ற உப பொலிஸ் பரிசோதகர் எல். எச்.பி, தசாநாயக்க உயிரிழந்தார். இரு பொலிஸ் அதிகாரிகள் குருநாகல் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். ஒரு பொலிஸ் அதிகாரி அவரச சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருவதாகவும் குருநாகல் போதனா வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதுவரை ஒரு சந்தேகநபர் கைது செய்யப்பட் டுள்ளதுடன் வாகன போலி இலக்கத் தகடுகள் இரண்டும், 9 மில்லி மீட்டர் கைத்துப்பாக்கியும் கைப்பற்றப்பட்டுள்ளன. (த-5)

### வடக்கில்....

எந்தவொரு வன்முறையும் உருவாவதற்கு அனுமதிக்கமாட்டோம். தமிழ் மக்களின் அனைத்து உரிமைகளை யும் பாதுகாக்க இந்த அரசு செயற்படும்.

இவ்வாறு அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற 2017 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தி இரண்டாம் வாசிப்பு மீதான நான்காம் நாள் விவாதத்தில் உரை யாற்றியபோதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

நேற்றைய விவாதத்தை ஆரம்பித்து உரையாற்றிய எதிர்க்கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், புதிய அரசமைப்பு, வடக்கு - கிழக்கில் நிறுவப்படும் புத்தர் சிலைகள், தமிழ் அரசியல் கைதிகள் விவகாரம், காணாமற்போகச் செய்தல் என்பன குறித்து கருத்துக்களை முன்வைத்தார்.

இதனைத் தொடர்ந்து உரையாற்றிய ஜோன் அமரதுங்க, நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் மிகவும் உணர்ச்சிகரமாக இந்த விவாதத்தில் உரையாற்றும் போது பேசினார். எவ்வாறிருப்பினும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான தற்போதைய இணக்கப்பாட்டு அரசானது புதிய அரசமைப்பை உருவாக்குவதில் நியாயபூர்வமான முன்னெடுப்புகளை உறுதி செய் யும். அனைத்து விடயங்களிலும் நாம் நியாயபூர்வமான செயற்பாடுகளையே மேற்கொள்வோம்.

கடந்த அரசு செய்த தவறுகளுக்கு நாம் பொறுப்புக்கூற முடியாது. ஆனால், அவ்வாறான விடயங்கள் மீள இடம் பெற இடமளிக்கப்பட மாட்டாது. தமிழ் மக்களின் அனைத்து உரிமைகளையும் பாதுகாக்க நாம் செயற்படுவோம். அமைதியான முறையில் அனைத்தும் மேற்கொள்ளப் படும். வடக்கில் மீண்டும் எந்தவொரு வன்முறையும் உருவாவதற்கு இடமளிக்க முடியாது- என்றார்.

இதையடுத்து, கருத்தொன்றை முன்வைத்த நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், அமைச்சரே, நான் உணர்ச்சிபூர்வமாக உரையாற்றவில்லை. உண்மையான விடயத்தைத் தான் கூறினேன். அதைப் புரிந்து கொள்ளவேண்டும் - என்றார். (த-5)

### சுமணரத்ன...

பன்குடா வெளியில் அரசமரம் உள்ள காணிக்குள் நுழைந்து அவர் அடாவடித்தனம் புரிந்ததால் பதற்ற நிலை தோன்றியது.

குறித்த இடத்தில் பௌத்த மத அடையாளங்கள் காணப் படுவதாகவும், கடந்த காலங்களில் அங்கு பௌத்த வழி பாட்டுத் தலம் இருந்ததாகவும் கூறிய அவர், காணிக்குள் அத்துமீறி நுழைந்து அமர்ந்துகொண்டார்.

தனியாருக்குச் சொந்தமான அந்த இடத்தில் பௌத்த வழிபாட்டுத் தலம் அமைக்கப் போவதாகவும் தேரர் கூறினார். இந்தத் தகவல் உள்ளூரில் பரவியதையடுத்து பிரதேச மக்கள் அங்கு ஒன்று கூடினர். அந்தப் பகுதியில் உள்ள சில சிங்களவர்களும் அங்கு வந்திருந்தனர்.

இதனையடுத்து தேரர் காணிக்குள் உட்பிரவேசித்தமை தொடர்பாக கரடியனாறுப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட் டது. குறித்த இடத்துக்கு வந்த பொலிஸார் தேரருடன் பேச்சில் ஈடுபட்டபோதிலும் அது பயனளிக்கவில்லை. அங்கு வருகைதந்த தொல்பொருள் ஆய்வுத் திணைக் கள அதிகாரிகளும் தேரரிடம் பேச்சில் ஈடுபட்டனர். ஆயினும் தேரர் அவர்களின் பேச்சை அலட்சியம் செய்தவண்ணம் இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மாவட்டச் செயலாளர் குறித்த இடத்துக்கு வருகைதர வேண்டும் எனக் கூறினார்.

இதனையடுத்து குறித்த பிரதேசத்தில் வீதியில் ஊர்வலமாக வருவதற்கும், வீதியை மறித்து ஆர்ப்பாட்டம் செய் வதற்கும், மேற்படி தனியார் காணிக்குள் அத்துமீறிச் .செல்வதற்கும், அங்கு புதிய கட்டடம் அமைப்பதற்கான வேலைகளைச் செய்வதற்கும் நீதிமன்றில் பொலிஸாரால் தடை உத்தரவு பெறப்பட்டது.

குறித்த இடத்துக்கு வருகை தந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சா.வியாழேந்திரன், பொலிஸார் நீதிமன்ற உத்தரவை உடனடியாகச் செயற்படுத்தி பிக்கு [illegible] அனைவரையும் [illegible] உடனடியாக வெளியேற்ற நடவடிக்கையெடுக்கவேண்டும் எனத் தெரிவித்தார்.

இதையடுத்து பொலிஸாருக்கும், பிக்குவுக்கும் இடையில் பேச்சு நடைபெற்றதையடுத்து அவர்கள் அங்கிருந்து வெளியேறி மட்டக்களப்பு மாவட்டச் செயலகத்துக்குச் சென்றனர். (த-ய-46)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் முத்தையா இராசரத்தினம்

(ராசா அண்ணை)

திதி: சங்கடஹர சதுர்த்தி - 17.11.2016



தோற்றம் 10 . 05 . 1935

மறைவு 29 . 11 . 2015

நிஜமாக நீங்கள் மறைந்து ஓராண்டு ஆனதோ
உங்களை நினைத்து தினம் தினம்
நாம் ஏங்கித் தவிக்கின்றோம்
ஐயா உங்களை என்றும்
எம் உள்ளத்தில் வைத்துப் பூஜிப்போம்

ஈவினை
புன்னாலைக்கட்டுவன் வடக்கு,
கட்டுடை, மானிப்பாய்.

நினைவுகளுடன் என்றும்
மனைவி, பேரமக்கள் மற்றும்
பேரப்பிள்ளைகள்.



## எம் நெஞ்சத்து நினைவுகளில் நீங்கா ஈராண்டு நினைவஞ்சலி

திருமதி
### பத்மலோஜினி கனகலிங்கம்



அன்னை மடியில்
11.01.1948

இறைவனடியில்
10.12.2014

கணவனை கடவுளென மதித்து
குடும்பத்தை கோயிலென பூசித்த தெய்வமே!
அன்பென்னும் நீர் பொழிய அள்ளி வீசி
கள்ளமற்ற உள்ளத்தோடு கருத்து வைத்து
பண்பாக மகிமையோடு மக்களெமை வளர்த்து
புண்ணியவதி என பலபேர் ஏற்றிப் போற்ற
ஆண்டிரண்டு கழிந்ததம்மா நீங்கள் நற்கதி சேர்ந்து
உங்கள் செயலும், உங்கள் நினைவும் என்றும்
எம் நெஞ்சை விட்டு நீங்காதம்மா

உங்கள் ஆத்ம சாந்திக்காக தினமும் இறைவனைத் தொழுது நிற்கும்

தர்மலிங்கம்- கனகலிங்கம்
67/45 தர்மலிங்கம் அவெனியூ,
கொட்டடி,யாழ்ப்பாணம்.
021 222 7796, 077 935 2583

[illegible] உமது நினைவுடன் [illegible]
அன்புக் கணவர், மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்



## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி
### இராஜேஸ்வரி சுந்தரலிங்கம்



தோற்றம்
20.06.1948

மறைவு
10.12.2014

திதி: சதுர்த்தி

அன்பு வழியில் எம்மை அரவணைத்து
ஆருயிராய் நேசித்து ஆசீர்வதித்து
இன்பமிக நல்லறமாம் இல்லறத்தை
ஈடேற்றிய எம்மிதயத் தெய்வமே!
இரண்டாண்டுகள் ஆனபோதும்
ஆறவில்லை எம் துயரம்

என்றும் நினைவில்
கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

[illegible]
077 931 9434

(ஜெ.6153) (13.18.21)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓய்வூதிய இலக்கத்தை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்

## ஓய்வூதியர் சங்கங்களிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ.17
ஓய்வூதியர்களையும், ஓய்வூதியர்களின் பின் உரித்தாளிகளையும் இனங்கண்டு அவர்களுக்கு விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய இலக்கம் பெற்றுக் கொடுக்க வடமாகாண உள்ளூராட்சி அமைச்சு மற்றும் மாவட்டத்தில் இயங்கும் ஓய்வூதியர் சங்கங்கள் முன் வரவேண்டும்.
இவ்வாறு ஓய்வூதியர்கள் கோரிக்கை விடுத்தனர்.
அவர்கள் தெரிவித்ததாவது–
வடக்கு மாகாண உள்ளூராட்சி சபைகளில் கடமையாற்றி ஓய்வு பெற்ற பணியாளர்கள் பலருக்கு இவ்வாறான ஓய்வூதிய இலக்கம் கிடைக்கவில்லை. அவர்கள் சாவடைந்த பின்னர் ஓய்வுதியம் பெறுவதில் அவரது பின் உரித்தாளிகள் அலுவலகங்களுக்கு அலைய வேண்டிய நிலை காணப்படுகிறது. அரசால் அறிவிக்கப்பட்ட 20 வருட சேவையைப் பூர்த்தி செய்தவர்கள் சுய விருப்பத்தின் பேரில் இளைப்பாறும் திட்டத்தின்கீழ் ஓய்வுபெற்ற உள்ளூராட்சிப் பணியாளர் களே இதில் அதிகளவு பாதிக்கப்பட்டுள்ளனர்.
அரச சேவையில் உள்ள பணியாளர்கள் சேவையில் இருக்கும் போது விதவை ஓய்வூதிய நிதியத்துக்கான இலக்கம் உரிய திணைக்களத்தால் வழங்கப்படுகிறது. அவை குறைந்தது 9 மாதங்களில் ஓய்வூதியர்களின் கைகளில் கிடைக்க வேண்டும். ஆனால் சிலர் இந்த இலக்கங்களுக்காக வருடக் கணக்கில் காத்திருக்க வேண்டிய நிலை காணப்படுகிறது.
( சாவகச்சேரியில் 2010 ஆம் ஆண்டு சாவடைந்த ஓய்வூதியர் ஒருவரின் பின் உரித்தாளிக்கு விதவைகள் அநாதைகள் ஓய்வூதிய இலக்கம் கிடைக்காததால் இன்னமும் அவரது பின் உரித்தாளிக்கு ஓய்வூதியம் கிடைக் கவில்லை)
2006ஆம் ஆண்டு யாழ்.பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர் அலு வலகத்தால், ஓய்வு பெற்று இதுவரை ஓய்வூதிய இலக்கம் வழங்கப்படாதவர்களின் விவரங்களை அனுப்புமாறு கோரப்பட்டது. கோரிக்கையை ஏற்று உள்ளூராட்சி சபைகள் விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய இலக்கம் பெறுவதற்கான அனைத்து விவரங்களையும் விதவைகள், அநாதைகள் ஓய்வூதியர் பிரிவுக்கு அனுப்பியிருந்தனர்.
விவரங்கள் அனுப்பப்பட்டுப் பத்து வருடங்களாகியும் இதுவரை ஓய்வூதியரின் பின் உரித்தாளிக்கான விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய இலக்கங்கள் வழங்கப்படவில்லை.- என்றனர்.

(ற-21,9)

## மரண அறிவித்தல்

### வடிவேலு சுபாஸ்கரன் (சுபாஸ்)



பிறப்பு: 13.09.1976
இறப்பு: 13.11.2016

யாழ்.அச்சுவேலி தெற்கு முத்துமாரியம்மன் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வடிவேலு சுபாஸ்கரன 13.11.2016 ஞாயிற்றுக்கிழமை அகாலமரணம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வடிவேலு மற்றும் சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மகனும், பாலசிங்கம் - அற்புதா தம்பதிகளின் அன்பு மருமகனும், கவிதாவின் அன்புக் கணவரும், திவிசன், கஜன்ராஜ், கரிஸ் ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற சுதாகரன், சுபாசினி, சுதர்சன், ஜெகந்சன் ஆகியோரின் அருமைச் சகோதரரும், அர்யுன், இனிதா, கணேசதாஸன், சுபாசினி, சோபியா ஆகியோரின் அன்பு மைத்துனரும், சுசானாவின் அன்பு மாமனாரும், அதேஷின் அன்புப் பெரிய தந்தையும், சந்தோஸ், தனுஸ்கா ஆகியோரின் அன்பு சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.11.2016) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் ஒரு மணியளவில் அச்சுவேலி முழக்கன் இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


முத்துமாரியம்மன் கோயிலடி,
அச்சுவேலி தெற்கு.
(J/6155) (11,17,21)
தகவல்:
குடும்பத்தினர்.

## ஆவணக் காப்பகத்தின் 41ஆவது நிகழ்வு

சமகாலக் கலை, கட்டடக்கலை மற்றும் வடிவமைப்புக்கான இலங்கை ஆவணக் காப்பகத்தின் 41ஆவது நிகழ்வு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு 199, கோயில் வீதி, நல்லூரில் அமைந்துள்ள அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. நிகழ்வில் 'சப்புமல் நிறுவனம்' என்ற தலைப்பில் அந்த நிறுவனத்தின் இயக்குநரும் ஒளிப்படக் கலைஞருமான றொஹான் டி சொய்சா, இலங்கையின் மிக முக்கிய நவீன கலை இயக்கமான '43 குழு ஓவியர்கள்' பற்றியும், அவர்களது வரலாற்று முக்கியத்துவம் பற்றியும் அவர்களது படைப்புகளின் சேகரிப்பு மையமாகிய சப்புமல் நிறுவனத்தை அடியொற்றி உரை நிகழ்த்தவுள்ளார். கலை ஆர்வலர்கள் அனைவரும் தவறாது கலந்து பயன்பெறுமாறு இலங்கை ஆவணக் காப்பகத்தின் முகாமையாளர் விமலா வேல்தாஸ் கேட்டுள்ளார். (ற-7)

## மரண அறிவித்தல்

கண்மகிழ
05 . 07 . 1936



கண்நெகிழ
14 . 11 . 2016

### "கலைமகளின் கலைச்சிகரம்" தில்லை சின்னையா

(ஓய்வு நிலை உத்தியோகத்தர், சந்தைப்படுத்தல் திணைக்களம்)

அல்வாய், மனோகராவைப் பிறப்பிடமாகவும் அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட "கலைமகளின் கலைச்சிகரம்" தில்லை சின்னையா அவர்கள் (ஓய்வு நிலை உத்தியோகத்தர் சந்தைப்படுத்தல் திணைக்களம்) 14.11.2016 திங்கட்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான தில்லை - ஆச்சிமுத்து தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான இளையதம்பி - பூரணம் தம்பதியரின் அன்பு மருமகனும் சரஸ்வதியின் அன்புக் கணவரும் திருமாறன்(சுவிஸ்), திருமலர், திருமாவளவன்(சுவிஸ்), திருமகள்(ஜேர்மனி), திருவளர்ச்செல்வி (ஜேர்மனி),காலஞ்சென்ற கவிதா ஆகியோரின் அன்புத் தந்தையும் கல்யாணி(சுவிஸ்), நவநீதன், சர்மிளா (சுவிஸ்), மகிழ்ரூபன் (ஜேர்மனி), தெய்வேந்திரன்(ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும் திவாகர்(கனடா), சிவன்ஜா (ஆசிரியை -சென் பற்றிக் கல்லூரி), பானுஜா (கனடா), வரதாபரன் (I.O.M) , குமரலிங்கம் (கனடா), கவிஷனா (சுவிஸ்), பிரித்தி(சுவிஸ்), ஓவியா(ஜேர்மனி), ஆதவன் (ஜேர்மனி), ஆகாஷ் (ஜேர்மனி), திலக்ஷன்(ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேரனும் பிரியஹர்சினி, சனாதனன், டினுஷன்(கனடா) ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.11.2016) வியாழக்கிழமை மு.ப. 11.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


**இல.15, நொத்தாரிஸ்லேன்,**
**அரியாலை, யாழ்ப்பாணம்**
(J/6154)(12,17,21)
தகவல்:
**குடும்பத்தினர்.**

ம. நவநீதன் 077 995 5860

## பதினேழாம், பன்னிரெண்டாம் ஆண்டு நினைவலைகள்



செல்வன்
பாலகிருஷ்ணன் பிரதீபன்
தோற்றம் : 17.04.1981



செல்வன்
சிவநாதன் ரவிசங்கர்
தோற்றம் : 02.02.1981



செல்வன்
சுந்தரலிங்கம் சிவோத்தமன்
தோற்றம் : 23.03.1981



செல்வன்
பூரணமூர்த்தி கந்தர்வன்
தோற்றம் : 11.05.1981



செல்வன்
மரியரட்ணம் குணரட்னம்
தோற்றம் : 04.08.1981

**17.11.1999 : மறைவு**

**17.05.2004**

**இந்நாளில் ஹாட்லியின் மைந்தர்கள் ஆகிய நாம் உங்களை பெருமையுடன் நினைவு கூருகின்றோம்**

**இன்று 17.11.2016 வியாழக்கிழமை காலை 8.00 மணியளவில்** ஹாட்லிக் கல்லூரியில் நடைபெறும் நினைவு நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் இரத்த தான நிகழ்விலும் பெற்றோர் ஆசிரியர், உற்றார், உறவினர், நண்பர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். **அத்துடன் இன்றையதினம் காலை 10.00 மணியளவில்** இன்பர்சிட்டி கடற்கரையில் நினைவுகூரல் நிகழ்வு நடைபெறும் என்பதனையும் அறியதருகின்றோம்.

**"ஹாட்லியின் மைந்தர்கள் நினைவு நிதியம்"** ஏற்பாட்டாளர்கள்.

**மேலதிக விபரங்களுக்கு : அ. [illegible] - 0774 636 256 / அ. செந்தில்குமரன் - 0777 480 094**
**சு. கோகுலகுமார் - 0773 122 198** E-mail : hartleyboys@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயிற்சிமுகாம்

யாழ்ப்பாணம், நவ. 17
யாழ். மாவட்ட பாடசாலைகள் கிரிக்கெட் பயிற்றுநருக்கான இருநாள் பயிற்சிமுகாம் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் கடந்த சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் இடம்பெற்றது. பயிற்றுநர் கேமால் மென்டிஸ், வடமாகாண கிரிக்கெட் பயிற்றுநர் அமிலபின்னத்துவ ஆகியோரும் முகாமில் கலந்து கொண்டனர். (ம-23)

## பூப்பந்தாட்ட தொடர் டிசெம்பர் மாதத்தில்

யாழ்ப்பாணம், நவ. 17
யாழ்ப்பாண பூப்பந்தாட்டக் கழகம் நடத்தத் திட்டமிட்ட பூப்பந்தாட்டத் தொடர் டிசெம்பர் மாதம் இரண்டாவது வாரத்தில் நடைபெறவுள்ளது.
இருபாலாருக்குமான திறந்த ஒற்றையர் மற்றும் இரட்டையர் ஆட்டங்களாகவும் 40 வயதுக்கு மேற்பட்ட ஆண்களுக்கான ஒற்றையர், இரட்டையர் ஆட்டங்களாகவும் தொடர் நடைபெறவுள்ளது. பங்குபற்ற விரும்பும் போட்டியாளர்கள் தங்களது பதிவுகளை எதிர்வரும் 28ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்தனர். (ம-23)

## இன்றைய மோதல்கள்

கரணவாய், நவ. 17
பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும் கபடித் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வியாழக் கிழமை இரவு 7 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் பருத்தித்துறை துள்ளுமீன் அணியை எதிர்த்து பருத்தித்துறை சித்தி விநாயகர் அணியும், பருத்தித்துறைசென். தோமஸ் அணியை எதிர்த்து பலாலி விண்மீன் அணியும் மோதவுள்ளன. (ம-108)

## சென். தோமஸ் அபார வெற்றி

கரணவாய், நவ. 17
பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் மின்னொளியில் லீக் முறையில் நடத்தும் கபடித் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் சென். தோமஸ் 'பி' அணி வெற்றிபெற்றது.
ஐக்கியத்தின் மைதானத்தில் இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சென். தோமஸ் 'பி' அணியை எதிர்த்து சுப்பர் மடம் சித்திவிநாயகர் 'பி' அணி மோதியது. இதில் சென். தோமஸ் 'பி' அணி 65:30 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்றது. ஆட்டநாயகனாக சென். தோமஸ் 'பி' அணியின் அஜித் தெரிவானார். (ம-23)



# பலம் குன்றிய மே.இ.தீவுகள் பதம்பார்த்தது இலங்கையை

முத்தரப்புத் தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டமொன்றில் இலங்கையை 62 ஓட்டங்களால் வீழ்த்தியது மேற்கிந்தியத் தீவுகள்.
சிம்பாப்வே, இலங்கை, மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கு இடையிலான முத்தரப்புத் தொடர் சிம்பாப்வேயில் தற்போது நடைபெற்று வருகிறது. நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகளும் இலங்கையும் மோதின. இந்த ஆட்டத்தில் இலங்கை அணி ஆதிக்கம் செலுத்தும் என்ற கருத்துக் கணிப்பு பொதுவாக இருந்தது. மேற்கிந்தியத் தீவுகள் தற்போது பலம் குன்றிய அணியாக உள்ளது. ஜாம்பவான்களாக கெய்ல், டேரன் பிராவோ, டுவைன் பிராவோ, ரசல், பொலார்ட், சாமுவேல்ஸ், சமி என்று எவரும் அந்த அணியில் இல்லை. மூன்று அறிமுக வீரர்களையும் அந்த அணி நேற்றுக் களமிறக்கியது. தீவுகளைக் குறைத்து மதிப்பிட்டமைக்கு இது முக்கிய காரணம்.
நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற தரங்க முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தார். 7 ஓட்டங்களில் சாள்ஸையும், 27 ஓட்டங்களில் கிறைக் பிரீத்வைட்டையும் இழந்து தடுமாற்றமான ஆரம்பம் கண்டது தீவுகள். கோப், கார்ட்டர் இணை நம்பிக்கை கொடுத்தது. அரைச்சதத்தை மூன்று ஓட்டங்களால் தவறவிட்டு குணரத்னவிடம் போல்ட் ஆனார் கோப். அரைச்சதம் கடந்து 54 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் கார்ட்டர். ஓர் முனையில் பவல் அதிரடி காட்டினாலும் மறுமுனை பலவீனமானதாக உணரப்பட்டது. கார்லோஸ் பிரீத்வைட் 14, கோல்டர் 2, பென் 7 என சொற்ப ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். 29 பந்துகளில் 44 ஓட்டங்களைக் குவித்து பவல் ஆட்டமிழக்க முடிவில் 227 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது தீவுகள்.
பதிலுக்குக் களமிறங்கிய இலங்கைக்கு முதல் கோணல் முற்றும் கோணலாக அமைந்தது. தனஞ்சய டி சில்வா, குசல் ஜெனித் பெரேரா, குசல் மெண்டிஸ் முறையே 3, 4, 4 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். 16 ஓட்டங்களுக்கு முன்வரிசையை பறிகொடுத்தது இலங்கை. அறிமுக வீரரான நேர்ஸிடம் சிக்கினார் தலைவர் தரங்க. குணரத்னவும் சறுக்கினார். டிக்வெல்லவும் 27 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க இலங்கை 79-6. ஜெயசூரிய, பத்திரண இணைந்து 60 ஓட்டங்களைப் பகிர்ந்தனர். 31 ஓட்டங்களுடன் ஜெயசூரிய ஆட்டமிழந்தது தான் தாமதம் 165 ஓட்டங்களில் இலங்கையின் இன்னிங்ஸ் நிறைவு கண்டது. (ம)

## காலபந்தாட்டத் தொடர்

கரணவாய், நவ. 17
பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் குமார் பொன்னம்பலம் ஞாபகார்த்தமாக அணிக்கு 7 வீரர்கள் பங்குபற்றும் கால்பந்தாட்டத் தொடரை நடத்தவுள்ளது.
வடமராட்சிப் பகுதிக்குட்பட்ட கழகங்களுக்கு இடையில் நடைபெறவுள்ள குறித்த தொடரில் பங்குபற்ற விரும்பும் கழகங்கள் ஏற்பாட்டுக் குழுவினருடன் தொடர்புகொண்டு தமது பதிவுகளை மேற்கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டது. (ம-108)

## சிம்பாப்வே – மே. தீவுகள் நாளை மறுதினம் மோதல்

முத்தரப்புத் தொடரில் நாளைமறுதினம் சிம்பாப்வே மேற்கிந்தியத் தீவுகள் அணிகள் மோதவுள்ளன.
இலங்கை, மேற்கிந்தியத் தீவுகள், சிம்பாப்வே அணிகளுக்கு இடையிலான முத்தரப்புத் தொடர் சிம்பாப்வேயில் நடைபெற்று வருகிறது. தொடரின் மூன்றாவது ஆட்டம் நாளை மறுதினம் நடைபெறவுள்ளது. சிம்பாப்வே, மேற்கிந்தியத் தீவுகள் அணிகள் இந்த ஆட்டத்தில் மோதவுள்ளன. (ம)



யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட மத்தியஸ்தருக்கான புதிய சீருடை, கொக்குவில் இந்துக் கல்லூரியில் அண்மையில் இடம்பெற்ற குறித்த சங்கத்துக்கான பொதுக்கூட்டத்தில் வைத்து அறிமுகப்படுத்தப்பட்டது. (ம-23)

## இறுதியில் ஞானம்ஸ் அணி

கரணவாய், நவ. 17
முல்லைத்தீவு போக்குவரத்துச் சபை வடமாகாண ரீதியில் முன்னெடுத்த துடுப்பாட்டத் தொடரில் கரவெட்டி ஞானம்ஸ் அணி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.
புற்றளை மைதானத்தில் நேற்றுமுன்தினம் இந்த இறுதியாட்டம் நடைபெற்றது. உடுவில் எச்.2.எச். அணியை எதிர்த்து கரவெட்டி ஞானம்ஸ் அணி மோதியது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய ஞானம்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட பத்து பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 6 இலக்குகளை இழந்து 102 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக சுகந்தன் 33 ஓட்டங்களையும், பிரகாஸ் 32 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் சிந்து 3 இலக்குகளையும் ஜஸ்ரின் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.
103 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு களமிறங்கிய உடுவில் அணியின் முன்வரிசை வீரர்கள் கடுமையாகப் போராடிய போதிலும் அவர்களால் நிர்ணயிக்கப்பட்ட 10 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 96 ஓட்டங்களையே பெறமுடிந்தது. இதையடுத்து 6 ஓட்டங்களால் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது ஞானம்ஸ் அணி. (ம-108)



## நானாட்டான் பிரதேச செயலகம் சம்பியனானது காலபந்தாட்டத்தில்

மன்னார் மாவட்ட அரச திணைக்களங்களுக்கு இடையே நடத்தப்பட்ட கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் நானாட்டான் பிரதேச செயலக அணி சம்பியனானது.
மன்னார் நகரசபை விளையாட்டு மைதானத்தில் அண்மையில் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் நானாட்டான் பிரதேச செயலக அணியை எதிர்த்து மன்னார் தபால் திணைக்கள அணி மோதியது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரண்டு அணியினரும் எதுவித கோல்களையும் பெறாததனால் சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. முடிவில் 1:0 என்ற கோல் கணக்கில் நானாட்டான் பிரதேச செயலக அணி வெற்றிபெற்றுச் சம்பியனானது. (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## மாற்றப்படுகிறது ஆஸ்திரேலியா

தென்னாபிரிக்கா அணிக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்துக்கான ஆஸ்திரேலிய அணியில் பல மாற்றங்கள் செய்யப்படவுள்ளன என்று அந்த அணியின் தலைமைப் பயிற்சியாளரான டேரன் லீமன் தெரிவித்தார்.

மூன்று ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடருக்காக ஆஸ்திரேலியாவுக்கு சென்றுள்ளது தென்னாபிரிக்கா. இந்த இரு அணிகளுக்கும் இடையிலான முதல் இரு ஆட்டங்களிலும் தென்னாபிரிக்காவே வெற்றிபெற்றது. மூன்றாவது ஆட்டம் எதிர் வரும் 24ஆம் திகதி நடைபெறவுள்ளது. இந்த ஆட்டத்திலும் வெற்றி பெற்று ஆஸ்திரேலியாவில் வைத்து ஆஸ்திரேலியாவை 3:0 என்று வழித்துத் துடைப்போம் என்று தென்னாபிரிக்க அணியின் தலைவர் பிளாசிஸ் எச்சரித்துள்ளார். இதனையடுத்து குறித்த கௌரவச் சிக்கல் நிலையை சமாளிக்க அணியில் ஏகப்பட்ட மாற்றங்களை ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை செய்யவுள்ளது என்று லீமன் தெரிவித்தார்.

அணித்தலைவர் சிமித், உபதலைவர் வோர்ணர், வேகப்பந்து வீச்சாளர்களான ஸ்ராக், கசில்வூட் நால்வருமே தென்னாபிரிக்காவுக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்தில் நிச்சயத் தன்மையுடன் களமிறங்கும் வீரர்களாக உள்ளனர். ஏனைய வீரர்கள் மாற்றம் செய்யப்படுவர் என்று லீமன் மேலும் தெரிவித்தார். (ம)






## "வெட்கப்படுகிறேன்" சிமித்தின் ஆதங்கம்

தென்னாபிரிக்க அணியிடம் இன்னிங்ஸ் தோல்வியடைந்து தொடரைப் பறிகொடுத்தமையை நினைத்து வெட்கப்படுகிறேன் எனத் தெரிவித்தார் ஆஸ்திரேலிய அணியின் தலைவரான சிமித்.

தென்னாபிரிக்கா, ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையே மூன்று ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடர் தற்போது நடைபெற்று வருகிறது. முதலாவது ஆட்டத்தில் தென்னாபிரிக்க அணி 177 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. இரண்டாவது ஆட்டத்தில் அந்த அணி இன்னிங்ஸாலும் 80 ஓட்டங்களாலும் ஆஸ்திரேலியாவை வீழ்த்தியது. தொடர் நடைபெறுவது ஆஸ்திரேலியாவில். இத னால் ஆஸ்திரேலியாவின் ஆதிக்கம் மிகுந்திருக்கும் என்று பொதுவாகக் கருதப்பட்டது. ஆனால் நிலமையை தென்னாபிரிக்க அணி தலைகீழாக மாற்றியுள்ளது. ஆட்டம் முடிவடைந்த பின்னர் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே சிமித் இவ்வாறு தெரிவித்தார்.

உங்களிடம் நேர்மையாகக் கூற வேண்டுமெனில் நான் இங்கு வந்து உட்காரவே தர்மசங்கடப்படுகிறேன். அடிக்கடி தொடர்ந்து இலக்குகள் சரிவடைவதை சந்தித்து வருகிறோம். இந்த அவல நிலை எனக்குப் பிடிக்கவில்லை. நாங்கள் பதிலடி கொடுக்கவில்லை, கடினமான நேரத்தில் மன உறுதியுடன் மேலும் கடினமாக விளையாட வேண்டும். ஆனால் அவ்வாறு நிகழவில்லை.

பயிற்சியாளர் டேரன் லீ மேன் தவறு இதில் எதுவுமில்லை, அவர் அருமையாகவே தயார் படுத்துகிறார், ஆனால் களத்தில் போய் செயலாற்றுவது வீரர்கள் கடமையல்லவா? நாங்கள் நன்றாகவே தயாரானோம், ஆனால் களத்தில் அதனை செயற்படுத்தத் தவறினோம். அணித்தேர்வாளர்களுடன் அமர்ந்து சிறந்த அணியை தேர்வு செய்ய வேண்டும். அணிக்கு இளம் வீரர்கள் தேவைப்படுகின்றனர் என சிமித் மேலும் தெரிவித்தார். (ம)

## இந்தியா - இங்கி. இரண்டாவது டெஸ்ட்

இந்தியா– இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் ஆட்டம் விசாகப்பட்டினத்தில் இன்று நடைபெறவுள்ளது.

ஐந்து ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுவதற்காக இங்கிலாந்து அணி இந்தியாவுக்குச் சென்றுள்ளது. இந்த இரு அணிகளுக்கும் இடையிலான முதலாவது ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. இரண்டாவது ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது.

காயம் காரணமாக கடந்த சில வாரங்களாக ஓய்விலிருந்த லோகேஸ் ராகுல் மீண்டும் அணிக்குத் திரும்பியுள்ளார். கம்பீர் கடந்த ஆட்டத்தில் தடுமாற்றத்தை வெளிப்படுத்தினார். இதனால் இன்று ஆரம்பமாகும் ஆட்டத்தில் கம்பீரை ராகுல் பிரதியீடு செய்யவும் வாய்ப்புள்ளது.

விசாகப்பட்டினம் ஆடுகளம் இரண்டாம் நாளிலிருந்து சுழல்பந்து வீச்சுக்கு ஒத்துழைப்பு வழங்கும். இதனால் அஸ்வின், ஜடேயா, மிர்ஸா ஆகிய மூன்று வீரர்களும் இந்திய அணியில் தொடர வாய்ப்புள்ளது. அவ்வாறு சுழலுக்கு சாதகமாக ஆடுகளம் அமைந்தால் ரசீட், மொயின் அலி இருவரும் இங்கிலாந்துக்கு பெறுமதியான வீரர்களாக அமைவார்கள்.

இந்திய அணி – வீராட் கோக்லி (தலைவர்), முரளி விஜய், ராகுல், புஜாரா, ரகானே, சகா, அஸ்வின், ஜடேயா, அமித் மிஸ்ரா, முகமது சமி, யாதேவ், கம்பீர். இசாந்த் சர்மா, பாண்டியா, கருண்நாயர். ஜெயந்த் ஜாதவ்.

இங்கிலாந்து அணி - குக் (தலைவர்), ஹசீப் ஹமீட், ரூட், மொய்ன் அலி, பென் ஸ்ரோக்ஸ், டக்லெட், பரிஸ்ரெளவ், வோக்ஸ், ஆதில் ரசீட், ஜாபர் அன்சாரி, பிரோட், ஸ்ரீவன் பின், பட்லர், அன்டர்சன், ஜேக்பால், பலன்ஸ் (ம)



## தென்னாபிரிக்காவுக்கு வில்லியர்ஸ் பாராட்டு

ஆஸ்திரேலிய அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரைக் கைப்பற்றுவதை உறுதிசெய்ய தென்னாபிரிக்க அணிக்கு காயம் காரணமாக ஓய்விலிருந்து வரும் அந்த அணியின் தலைவர் வில்லியர்ஸ் தனது பாராட்டுக்களைத் தெரிவித்தார். தென்னாபிரிக்க அணி ஆகச் சிறந்த திறனில் தற்போது உள்ளது. துடுப்பாட்டம், பந்துவீச்சு, களத்தடுப்பு மூன்றுமே சிறந்த முறையில் பேணப்படுகிறது. இளம் வீரர்கள் சிறப்பாகச் செயற்படுகிறார்கள். அணியின் வெற்றிக்கு தாம் ஆற்றவேண்டிய பங்கை அவர்கள் உணர்ந்துள்ளனர். ஐந்து ஆட்டங்கள் கொண்ட ஒருநாள் தொடருக்காக ஆஸ்திரேலிய அணி தென்னாபிரிக்காவுக்கு வந்தபோது தென்னாபிரிக்க அணி 5:0 என்று தொடரைக் கைப்பற்றியது. அதைவிட இந்த இரு டெஸ்ட் வெற்றிகளையும் சிறப்பானதாகவே கருதுகிறேன். ஏனெனில் தொடர் ஆஸ்திரேலியாவில் நடை பெறுகிறது. ஒரு பலமான அணியை அதன் சொந்த மண்ணில் வைத்து வீழ்த்துவதென்பது தனித்திறமை என வில்லியர்ஸ் மேலும் தெரிவித்தார். (ம)

## வெற்றிக்குத் திரும்புவது யார்?

நியூசிலாந்து– பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான குறுகிய டெஸ்ட் தொடர் இன்று ஆரம்பமாகிறது.

இரு ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுவதற்காக பாகிஸ்தான் அணி நியூசிலாந்துக்குச் சென்றுள்ளது. முதலாவது ஆட்டம் கிறைஸ்ட்சேர்ச்சில் இன்று ஆரம்பமாகவுள்ளது.

பாகிஸ்தான் அணி இறுதியாக மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிராக டெஸ்ட் தொடரில் களமிறங்கியது. தொடர் பாகிஸ்தானுக்குச் சாதகமாக அமைந்தாலும் இறுதி ஆட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகளே வெற்றி பெற்றது. நியூசிலாந்து அணி இறுதியாக இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் களமிறங்கி 0:3 என்ற அடிப்படையில் வாங்கிக் கட்டியது. மொத்தத்தில் இரு அணிகளும் தமது இறுதி டெஸ்ட் ஆட்டங்களில் தோல்வியடைந்துள்ளன. அவர்களில் யார் வெற்றிக்குத் திரும்புவது என்பது தொடர்பான மோதலாகவும் இந்த ஆட்டம் பார்க்கப்படுகிறது.

தொடரில் இரு ஆட்டங்கள். எனவே இன்று ஆரம்பமாகும் ஆட்டத்தில் வெற்றிபெறும் அணி தொடரைப் பறிகொடுக்கவும் வாய்ப்பில்லை. இதன் அடிப்படையிலும் இந்த ஆட்டம் முக்கியத்துவம் பெற்றுள்ளது. (ம)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# களத்தடுப்புத் தடுமாற்றமே சமநிலைக்கு ஒரே காரணம்

## கோக்லிக்கு பதிலடி

இங்கிலாந்துக்கு எதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் இந்திய அணி வெற்றி பெறும் என்று கருதப்பட்ட போதிலும் அந்த ஆட்டம் சமநிலையில் முடிந்தது. இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த கோக்லி, ராஜ்கோட் ஆடுகளத்தில் புற்கள் காணப்பட்டன. அதுவே பந்துவீச்சில் பின்னடைவுக்குக் காரணம் என்று விமர்சித்திருந்தார். இதற்கு ராஜ்கோட் கிரிக்கெட் சங்கத்தின் செயலாளர் நிரஞ்சன் ஷா தற்போது பதிலடி கொடுத்துள்ளார்.

ராஜ்கோட் ஆடுகளம் ஓர் முறையான டெஸ்ட் ஆடுகளம். நீண்ட இடைவெளிக்குப் பிறகு டெஸ்ட் ஆட்டம் ஐந்து நாள்கள் வரை சென்றுள்ளது. ஆடுகளத்தில் இருந்த புற்களால் பந்துகள் திரும்பவில்லை என்றுசொல்லுவதற்கில்லை. டெஸ்ட் ஆட்டங்களின் முதல்நாள் ஆட்டத்தில் ஈரப்பதமும், புற்களும் இருப்பது வழக்கமானதுதான், அது வழமையான மண் என்பதால் மறுநாளும் புற்கள் இருந்தன. ஆனால் பந்துகள்திரும்பாதமைக்குஅதுவே காரணம் என்பதை ஏற்பதற்கில்லை. இந்திய அணியினர் ஆட்டத்தின் ஆரம்பத்திலேயே சில பிடியெடுப்புக்களைத் தவறவிட்டனர். இது இங்கிலாந்து அணிக்கு மனதளவில் பலமான உணர்வைக் கொடுத்தது. பிடியெடுப்புக்கள் கச்சிதமாக அமைந்திருந்தால் ஆட்டம் இந்தியாவுக்கு சாதகமாக அமைந்திருக்க வாய்ப்புக்கள் இருந்தன என நிரஞ்சன் ஷா மேலும் தெரிவித்தார். (ம)



# ஊடகங்களைப் புறக்கணித்தது ஆர்ஜென்ரீனா கால்பந்து அணி

## மெஸ்ஸி அறிவிப்பு

ஆர்ஜென்ரீனா கால்பந்து அணியின் வீரர்கள் இனி ஊடகங்களுடன் பேச மாட்டார்கள் என அந்த அணியின் தலைவர் மெஸ்ஸி தெரிவித்தார்.

2018 ஆம் ஆண்டு ரஷ்யாவில் கால்பந்தாட்ட உலகக்கிண்ணத் தொடர் நடைபெறவுள்ளது. இந்தத் தொடருக்கான தகுதிகாண் ஆட்டங்கள் தற்போது நடைபெற்று வருகின்றன. அண்மையில் இடம்பெற்ற ஆட்டமொன்றில் கொலம்பியாவை இலகுவாக வென்றது ஆர்ஜென்ரீனா. அந்த அணியின் தலைவர் மெஸ்ஸி ஓர் கோலைப் பதிவுசெய்தார். ஆட்டம் முடிந்தவுடன் தன் அணி வீரர்களுடன் மெஸ்ஸி செய்தியாளர்களைச் சந்தித்தார்.

எங்கள் அணி வீரர் லாவெஸ்ஸி போதைப் பொருள் உட்கொண்டார் என ஊடகங்கள் அவரை மிகக் கடுமையாக விமர்சனம் செய்தன. எங்கள் விளையாட்டைப் பற்றி மட்டுமே உங்களுக்கு விமர்சனம் செய்வதற்கு உரிமை இருக்கிறது. தனிப்பட்ட வாழ்க்கை பற்றி நீங்கள் அவரை விமர்சனம் செய்தது மிகப் பெரிய தவறாகும். இதற்கு முடிவு கட்டும் விதமாக இனி எங்கள் அணி வீரர்கள் எவரும் ஊடகங்களுடன் பேச மாட்டார்கள் நாங்கள் உங்களை முற்றிலுமாக புறக்கணிக்கிறோம் என மெஸ்ஸி மேலும் தெரிவித்தார். (ம)

# கோக்லி ஆதிக்கம்

பன்னாட்டு கிரிக்கெட் சபை தனது தரவரிசைப் பட்டியலை அண்மையில் புதுப்பித்தது. ரி-20 ஆட்டங்களின் துடுப்பாட்டத் தரப்படுத்தலில் கோக்லி முதலிடத்தில் தொடர்கிறார்.

ஆஸ்திரேலிய வீரர்களான பின்ஞ், மக்ஸ்வெல் இருவரும் முறையே இரண்டாம், மூன்றாம் இடங்களிலும், நியூசிலாந்தின் குப்தில் நான்காவது இடத்திலும், தென்னாபிரிக்க வீரர் பிளாசிஸ் ஐந்தாவது இடத்திலும் உள்ளனர்.

அடுத்தடுத்த இடங்களில் முறையே வில்லியம்சன், ரூட், கேல்ஸ், செசாட், மசகட்சா ஆகியோர் உள்ளனர். (ம)

# போல்ட் முதலிடம்

பன்னாட்டு கிரிக்கெட் சபையின் ஒருநாள் ஆட்டங்களுக்கான பந்து வீச்சாளர்கள் தரப்படுத்தலில் நியூசிலாந்து அணியின் வேகப்பந்து வீச்சாளரான போல்ட் முதலிடம் பிடித்தார்.

இலங்கை வீரர்கள் எவரும் தரப்படுத்தலில் முதல் பத்து இடங்களுக்குள் இடம்பிடிக்கவில்லை. மேற்கிந்தியத் தீவுகளின் நரைன் இரண்டாவது இடத்திலும், தென்னாபிரிக்காவின் தாகிர் மூன்றாவது இடத்திலும், ஆஸ்திரேலியாவின் ஸ்ராக் நான்காவது இடத்திலும், நியூசிலாந்தின் ஹென்றி ஐந்தாவது இடத்திலும் உள்ளனர்.

ஆறு முதல் பத்து வரையிலான இடங்களில் முறையே சகிப் அல் ஹசன், ரசிட், ரபாடா, அக்சர் பட்டேல், மோர்சா ஆகியோர் உள்ளனர்.(ம)



ரியல் மட்ரிட், அத்லெட்ரிகோ மட்ரிட் ஆகிய அணிகளுக்கு இடையிலான ஆட்டமொன்று நாளைமறுதினம் நடைபெறவுள்ள நிலையில் குறித்த ஆட்டத்துக்காக ரியல் மட்ரிட் அணி நேற்று கடும் பயிற்சியில் ஈடுபட்டது. (ம)

# ரங்கன கேரத் முன்னேற்றம்

பன்னாட்டு கிரிக்கெட் சபை தனது தரப்படுத்தல் பட்டியல்களைப் புதுப்பித்துக் கொண்டது. டெஸ்ட்டில் இலங்கையின் சுழல் ஜாம்பவான் கேரத் இரண்டாவது இடத்துக்கு முன்னேறினார். முதலிடத்தில் அஸ்வின் உள்ளார்.

தென்னாபிரிக்கா-ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் ஆட்டம் முடிவடைந்ததை அடுத்தே பட்டியல்கள் புதுப்பிக்கப்பட்டன. 881 புள்ளிகளுடன் அஸ்வின் முதலிடத்திலும், ரங்கன கேரத் 867 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்திலும், 852 புள்ளிகளுடன் தென்னாபிரிக்க அணியின் வேகப்பந்துவீச்சாளர் ஸ்ரெய்ன் மூன்றாவது இடத்திலும், 844 புள்ளிகளுடன் இங்கிலாந்து அணியின் வேகப்பந்து வீச்சாளர் அண்டர்சன் ஐந்தாவது இடத்திலும் உள்ளனர்.

ஆறு முதல் பத்து வரையிலான இடங்களில் முறையே புரோட் (இங்கிலாந்து), ஜடேயா (இந்தியா), ஸ்ராக் (ஆஸ்திரேலியா), கசில்வூட் (ஆஸ்திரேலியா), பிளன்டர் (தென்னாபிரிக்கா) ஆகியோர் உள்ளனர். (ம)



# சரியவில்லை சிமித்

ஆஸ்திரேலிய அணி டெஸ்ட் ஆட்டங்களில் தொடர்ச்சியான தோல்விகளைச் சந்திக்கின்ற போதிலும், அந்த அணியின் தலைவரான சிமித் தொடர்ந்தும் முதலிடத்திலேயே நீடிக்கிறார்.

பன்னாட்டு கிரிக்கெட் சபை தனது தரவரிசைப் பட்டியலை அண்மையில் புதுப்பித்தது. டெஸ்ட் ஆட்டங்களுக்கான துடுப்பாட்டத் தரப்படுத்தலில் சிமித் முதலிடத்தில் தொடர்கிறார். இரண்டாவது இடத்தில் இங்கிலாந்தின் ரூட், மூன்றாவது இடத்தில் நியூசிலாந்தின் வில்லியம்சன், நான்காவது இடத்தில் பாகிஸ்தானின் யுனிஸ்கான், ஐந்தாவது இடத்தில் தென்னாபிரிக்காவின் அம்லா ஆகியோர் உள்ளனர்.

ஆறு முதல் பத்து வரையிலான இடங்களில் முறையே வில்லியர்ஸ், வோர்ணர், ரகானே, குக், புஜாரா ஆகியோர் உள்ளனர். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 17.11.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.